விலை : 20.00

பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 15 திங்கட்கிழமை (31.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 317

கலயாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email: kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே

# வடக்கு கிழக்கு இணையாவிட்டால் கிழக்கு மாகாணம் பறிபோகும்!

## இரா.சம்பந்தன் எச்சரிக்கை



(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படாவிட்டால் கிழக்கு மாகாணம் பறிபோய்விடும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (23-ம் பக்.)

## மட்டு.முறக்கொட்டாஞ்சேனை இராணுவம் இருந்த காணியில் மனித எச்சங்கள் மீட்பு!



23ஆம் பக்கம் பார்க்க....

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு; இந்தியா விரைகிறது குழு!

(கொழும்பு)

மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சர்கள், இந்த வாரம் பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்திய மற்றும் இலங்கை மீனவர்கள் இடையே கடலில் மீன்பிடிப்பது தொடர்பான எல்லை பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகிறது.

இது தொடர்பாக இரு தரப்பும் பலமுறை பேச்சு நடத்தியும் தீர்வு காணப்படாததால், இலங்கை மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் இடையேயான பேச்சு, இந்த வாரம் நடக்க உள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமர

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி இன்று யாழ்.வருகை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது கீரிமலையில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்காக அமைக்கப்படும் வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வு ஜனாதிபதி தலைமையில இன்று பிற்பகல் 2.00

23ஆம் பக்கம் பார்க்க....

## வாள்களுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நாடகத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் வாள் ஒன்றுடன் உயர்தரம் கல்வி கற்கும் மாணவன் மற்றும் ஆசிரியர் யாழ்.பொலிஸாரினால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் யாழ்ப்பாண பகுதியில் மோட்டார் வாகனத்தில் பயணித்துக் கொண்டிரு

24ஆம் பக்கம் பார்க்க....

## யுத்த வரலாற்று பதிவுகளை பாடத்திட்டத்தில் சேருங்கள்

### முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

யுத்த வரலாறு பற்றி எழுதப்படும் நூல்கள் பாடசாலை பாடத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்காக மோதலில் கொல்லப்

24ஆம் பக்கம் பார்க்க....



## யாழ்.முஸ்லிம் பகுதிகளில் கறுப்புக் கொடிகள் பறந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு இருபத்து ஆறு வருடங்கள் ஆகும் நிலையில், இதுவரை முஸ்லிம்களை மீள்குடியமர்த்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதனை சுட்டிக்காட்டி, யாழ் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் கறுப்புக்கொடிகளை வீடுகளிலும் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் பறக்கவிட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பெரிய முஹைதீன் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்படி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர். 1990 ஆம் ஆண்டு வடக்கிலிருந்து

23ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரக் கட்சியை பிரதமர் மதிக்க வேண்டும் - டிலான்



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் பங்கெடுத்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சம உரிமை உள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மதிக்கவேண்டியது அவசியமாகும். தேசிய அரசாங்கத்தின் நீடிப்புக்கு இது உதவியாக இருக்கும். தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்

24ஆம் பக்கம் பார்க்க....

## அரசிற்கு எதிரான எழுச்சியை வடக்கில் நிறுத்த முடியாது!

### விக்கிரமபாகு கருணாரத்ன எடுத்துரைப்பு



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய சுயாட்சியையும் ஜனநாயகத்தையும் மற்றும் நியாயத்தையும் வழங்கவில்லை என்றால் அரசாங்கத்திற்கு எதிராக வடக்கில் நடைபெறும் எழுச்சியை நிறுத்த முடியாது என நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாணிக்கமடு புத்தர்சிலை வைப்பு

# தமிழர்கள் ஆத்திரப்படக்கூடாது; ஆவேசப்படக்கூடாது - ஹக்கீம்

(மட்டக்களப்பு)

அனுமதியின்றி வைக்கப்பட்ட புத்தர்சிலையை நீதிமன்றத்தினூடாக அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த விடயத்தில் தமிழர்கள்ஆத்திரப்பட்டு ஆவேசப்படக்கூடாது என அமைச்சர் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை இறக்காமம் மாணிக்கமடு பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை புதிதாக புத்தர் சிலையொன்று பலவந்தமாக நிறுவப்பட்டமையினால் அப் பிரதேச முஸ்லிம்கள், தமிழர்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகின்றது.

இப்பிரச்சினை தொடர்பாக இறககாமம் பிரதேசவாசிகள் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கவனத்திற்கு கொண்டுவந்ததன் பின்னர் அமைச்சர் ஹக்கீம் நேற்று இறக்காமம் ஸ்ரீ மாணிக்கமடு கோயிலுக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்ததாவது.

நான் இது தொடர்பாக பொலிஸ்மா அதிபருடன் பேசியுள்ளேன். இப் புத்தர் சிலை அனுமதியின்றி வைக்கப்பட்டதால் இதனை நீதிமன்றத்தினூடாக அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த விடயத்தில் தமிழர்கள் ஆத்திரப்பட்டு ஆவேசப் படக்கூடாது.

இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டதன் பிற்பாடு நல்லாட்சி அரசாங்கத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது நல்லிணக்கத்துக்கு பாதகம் விளைவிக்கக்கூடியது.

சிறுபான்மை மக்களை வலிந்து வம்புக்கு இழுக்கின்ற சம்பவமாக இது பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் சட்டத்தையும் ஒழுங்கையும் தோற்றுவிப்பதில் குந்தகம் விளைவிக்கின்றது.

நீதிமன்ற தடையையும் மீறி எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் தங்களது மதத்தை பிரதிபலிக்கும் சின்னத்தையோ அடையாளத்தையோ அனுமதியின்றி பலவந்தமாக வைப்பதென்பது வணக்க வழிபாட்டுக்கோ ஆராதனைக்கோ அல்ல என்று அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

பௌத்தர் ஒருவர் கூட இல்லாத இந்தப் பிரதேசத்தில் புத்தர் சிலையொன்றினை நிறுவ வேண்டிய தேவை எதுவும் இல்லை என இறக்காமம் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

தமண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிமல் சந்திரசிறி கூறுகையில்,

சட்டத்துக்கு முரணான வகையிலேயே இறக்காமம் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டதாக தமண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிமல் சந்திரசிறி தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி சிலையினை குறித்த இடத்தில் வைப்பதைத் தடுக்கும் நீதிமன்ற உத்தரவொன்றை, சிலையினை அங்கு நிறுவிய பௌத்த மதகுருமாரிடம், தான் ஒப்படைத்ததாகவும் அவர் கூறினார்.

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணிக்கமடு பகுதியில், புத்தர் சிலையொன்று புதிதாக நிறுவப்பட்டது.

இந்த நிலையில், அந்த இடத்துக்குச் சென்ற தமண பொலிஸார், குறித்த சிலையினை அங்கு நிறுவக்கூடாது எனத் தெரிவிக்கும் நீதிமன்ற உத்தரவினை, சிலையினை நிறுவிய பௌத்த குருமாரிடம் ஒப்படைத்தனர் என தமண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறினார்.

சிலையினை குறித்த இடத்தில் வைப்பதற்கு முன்னதாகவே, நீதிமன்ற உத்தரவினை தான் ஒப்படைத்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிலையினை அந்த இடத்தில் நிறுவியவர்களுக்கு நாம் பாதுகாப்பு வழங்குவதற்காக அங்கு செல்லவில்லை. சட்டத்தினை நிலைநாட்டுவதற்காகவே சென்றோம் என்றும் தமண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (11)

## மாணவர் சீருடை வவுச்சர் விநியோகம்

(ஏறாவூர்)

பாடசாலை மாணவர்களின் சீருடைத் துணிக்கான வவுச்சர் நவம்பர் மாதம் தொடக்கம் விநியோகிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கும்போது புதிய சீருடையோடு மாணவர்களை வரவேற்பதற்காக முன்னதாகவே வருடாந்தம் நவம்பர் மாதத்தில் இலவச சீருடைக்கான வவுச்சர்களை அரசாங்கம் வழங்கி வருகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்திற்கு முன்னைய ஆட்சிகளில் இலவச சீருடைக்கான துணிகள் கல்வி அமைச்சினாலேயே பாடசாலைகளுக்கூடாக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## 3 அதிகாரிகள் பணி இடை நீக்கம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பில் - தலுபொத சிறைச்சாலையில் 6 கைதிகள் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் மூன்று சிறைச்சாலை அதிகாரிகள் பணி இடைநீக்கம் செயயப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் பேச்சாளர் உடுல் தெனிய ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தச் சம்பவம் தொடரபில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

நேற்று முன்தினம் காலை ஹெரோயின் மற்றும் வீடுகளை உடைத்தல் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்ட 6 கைதிகள் தலுபொத சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## கிளிநொச்சியில் வாள்வெட்டு — 4 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தீபாவளி திருநாளான நேற்று முன்தினம் இளைஞர் குழுக்களிடைய ஏற்பட்ட மோதல், மதுபோதை மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் சம்பந்தமான கைகலப்புக்களில் வாள்வெட்டுக்கு இலக்காகி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நான்கு பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தீபாவளி தினமான நேற்று முன்தினம் மாலை எட்டு மணியில் இருந்து இரவு பத்து மணி வரையிலான இரண்டு மணி நேரத்தில் ஏற்பட்ட குழுக்களிடையேயான மோதல், மதுபோதை மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகளில் காயமடைந்தவர்களே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றனர்

குறித்த வாள்வெட்டு சம்பவங்கள் கிளிநொச்சி கோணாவில், பாரதிபுரம், ஊற்றுப்புலம், செல்வாநகர் ஆகிய பகுதிகளில் இடம் பெற்றுள்ளதாகவும் குறித்த சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருவதாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (312)

## இலங்கைக்கு 31 ஆவது இடம்

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டு உலகளாவிய இளைஞர் அபிவிருத்திச் சுட்டியில் 183 நாடுகளில் இலங்கை 31 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் அலுவலகம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவில் வெளியான புள்ளிவிவரத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பொதுநலவாய நாடுகளுக்குள்இலங்கை 7ஆவது இடத்தில் உள்ளது.

குறித்த ஆய்வு முடிவின் படி, 133ஆவது இடத்தில் இந்தியாவும் 77ஆவது இடத்தில் நேபாளமும் உள்ளது.

2016 ஆம் ஆண்டின் இளைஞர் அபிவிருத்திச் சுட்டியில் முதலிடத்தை ஜேர்மன் பெற்றுள்ளதுடன் இரண்டாவது இடத்துக்கு டென்மார்க் தெரிவாகியுள்ளது. அவுஸ்திரேலியா 3ஆவது இடத்தில் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

நானகாவது இடத்தை சுவிட்சர்லாந்து பெற்றுள்ளதுடன் பிரித்தானியா 5 ஆவது இடத்தில் உள்ளது. (11)


**Paper Classes**

Maths & English G.C.E. (O/L) 2016

Commences on
31.10.2016
No. 886, Hospital Rd,
Jaffna.

For Further Details -
0779789112 / 0779352999

(6477)



**சித்தங்கேணி சந்திக்கு அருகாமையில் ஞானவைரவர் ஆலய கட்டிட நிதிக்கான சீட்டு தீபாவளி அன்று அதிஷ்டம் பார்க்கப்பட்டது.**

1ஆம் பரிசு கொம்பியூட்டர் No 679
ப.செல்வச்சந்தரன் - பனிப்புலம், பண்டத்தரிப்பு.

2ஆம் பரிசு கொம்பியூட்டர் No 538
ரெலிபோன் நம்பர் தொடர்பில்லை.

3ஆம் பரிசு மிக்சி No 1939
பிரணவன் - வடலியடைப்பு.

பொருட்களை எடுப்பதற்கு நல்லாச்சி காமன்ஸ்சில் தொடர்பு கொள்ளவும் T.P :- 077 8737 200

கட்டிட நிதிக்காக ரிக்கற் வாங்கியவர்கட்கு நன்றி

(6475)


## உரும்பிராயில் விபத்து

### சிறுமி காயம்



(கோப்பாய்)

உரும்பிராய் சந்தியில் இடம்பெற்ற பட்டா - முச்சக்கரவண்டி விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த சிறுமி ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பகல் 11.50 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

பலாலி வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியும் மானிப்பாய் வீதி வழியாக கோப்பாய் நோக்கி பயணித்த பட்டாவும் சந்தியை கடக்க முற்பட்ட வேளை முச்சக்கரவண்டி பட்டா ரக வாகனத்துடன் மோதப் போவதாக கருதி சடுதியாக முச்சக்கரவண்டியை இடதுபுறமாக திருப்பிய வேளை முச்சக்கரவண்டி கவிழ்ந்து குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது. ஆயினும் பட்டா ரக வாகனத்தில் முச்சக்கரவண்டி மோதவில்லை.

முச்சக்கரவண்டியில் குடும்பப் பெண் ஒருவரும் அவருடைய மகள்கள் இருவரும் பயணித்திருந்த நிலையில் ஒரு சிறுமிக்கு கால் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டியின் முன்பகுதி பாரியளவில் சேதமடைத்துள்ளது. குறித்த விபத்து சந்தியின் நடுபகுதியில் இடம்பெற்றமையால் சிறிது நேரம் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்து. (செ-87)

## சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விசேட கூட்டம் இன்று நடைபெறவுள்ளதாக சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்குமாறு ஏற்கெனவே அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சில முக்கியமான தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் நிகழ்கால அரசியல் பயணத்தில் கட்சியை வலுப்படுத்திக் கொள்வதே இதன் நோக்கமாக அமைந்துள்ளது.

மேலும் எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கக்கூடிய வகையில் கட்சியின் பொறிமுறைமையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சாந்த பண்டார தெரிவித்துள்ளார். (செ)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# ஜனாதிபதி மாளிகையில் விசேட தீபாவளிக் கொண்டாட்டம்



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஒரு விசேட நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. ஜனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் இந்து சமய பக்தர்களுக்கும் ஜனாதிபதியும் பிரதமரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். பரதநாட்டியம் உள்ளிட்ட பல்வேறு இந்து சமய கலாசார நிகழ்வுகள் விழாவை அலங்கரித்தன. எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன். அமைச்சர்களான டி.எம். சுவாமிநாதன். மனோ கணேசன். பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன். டக்ளஸ்தேவானந்தா. அங்கஜன் ராமநாதன். ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ)

# அர்ஜுன் மகேந்திரனை குற்றவாளியாக்கிய கோப் குழுவின் அறிக்கையில் பல தவறுகள்

## • அமைச்சர் கிரியெல்ல குற்றச்சாட்டு



(கொழும்பு)

***இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை குற்றவாளியாக்கிய கோப் குழுவின் விசாரணை அறிக்கையில் பல தவறுகள் இடம்பெற்றுள்ளதாக ஆளும் கட்சியின் சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.***

கோப் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பலர். விசாரணைக்கு முன்னதாகவே அர்ஜுன் மகேந்திரனை குற்றவாளியாக அறிவித்த நிலையிலேயே விசாரணை அமர்வுகளிலும் அமர்ந்திருந்த நிலையில் இந்த அறிக்கையை தயாரித்திருப்பதாகவும் தெரிவிக்கும் கிரியெல்ல. இதனால் இந்த அறிக்கை சுதந்திரமான விசாரணை அறிக்கையாக எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற திறைசேரி முறிகள் விற்பனையில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த நாடாளுமன்றத்தின் பொது வர்த்தகம் தொடர்பான செயற்குழுவான கோப் குழுவின் விசாரணை அறிக்கையை அதன் தலைவரான ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கடந்தவாரம் நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கைக்கு அமைய திறைசேரி முறிகள் விற்பனையில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் அவரது மருமகனான அர்ஜுன் ஜோசப் அலோசியஸ் ஆகியோர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோப் குழு பரிந்துரைத்துள்ள நிலையில். அந்தக் குழுவின் அறிக்கையில் பல தவறுகள் இருப்பதாக நாடாளுமன்றின் சபை முதல்வரும். அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

கோப் குழுவின் அறிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மகிந்த ராஜபக்ஷவின் 10 வருட ஆட்சிக் காலத்தில். முன்வைக்கப்பட்ட கோப் குழுக்களின் 30 விசாரணை அறிக்கைகள் தொடர்பில் எந்தக் கருத்தையும் கூறாது மௌனிகளாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் உட்பட பல ஊழல் மோசடிகள் தொடர்பில் கோப் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு 30 அறிக்கைகளை நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்த போதும் அவை தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது அவற்றை குப்பைத் தொட்டியில் மகிந்த அரசாங்கம் தூக்கி எறிந்திருந்ததாவும் அரசாங்கத்தின் உயர்கல்வி. நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இவை குறித்து அன்றைய ஆட்சியின் போது எந்தக் கருத்தையும் கூறக்கூட முடியாது. கருத்துச் சுதந்திரம் ஒட்டு மொத்தமாக மறுக்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இதனையும் மீறி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரோ. சமூகத்திலுள்ள ஒருவரோ கதைத்திருந்தால் அவர்களை வெள்ளை வான் கும்பலைப் பயன்படுத்தி கடத்தி காணாமற் போகச் செய்யும் மோசமான கொடூரத்தையும் மகிந்த ஆட்சியில் முன்னெடுத்திருந்ததாகவும் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.


எனினும் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அனைவருக்கும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியுள்ளதுடன் அரசாங்கத்தையே கடுமையாக விமர்சிக்கவும். குற்றம் சாட்டவும் உரிமை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சொத்துக்களை விற்றுத்தான் வாழ்க்கையை நடத்துகிறேன்

## சந்திரிகா புலம்பல்

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் எனக்கு கிடைத்த அனைத்து வரப்பிரசாதங்களையும் மகிந்த ராஜபக்ஷ இல்லாமல் செய்து விட்டார் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார். நேற்று முன்தினம் கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் என்னை கொலை செய்து விடுவதாக பிரசாரங்கள் செய்த காலப்பகுதியில் எனது பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்தவர்களையும் மகிந்த இல்லாது செய்தார். நான் ஜனாதிபதி மாளிகையை விட்டு செல்லும் போது எனது வங்கிக் கணக்கில் இருந்தது 30 இலட்சம் ரூபாய் மாத்திரமே. எனக்கு கொடுக்கப்பட்டது அனைத்துமே பறிக்கப்பட்டது. அதன் பின்னர் என்ன செய்ய. வாழ வேண்டுமே. எப்படி வாழ்வது? எனக்கு திருடவும் முடியாது. தெரியாது. திருடவும் மாட்டேன். அப்போது எனது பரம்பரை சொத்தான இடம் ஒன்றினை விற்பனை செய்தேன்.



அந்த பணத்தின் மூலமாகவே எனது மகனின் திருமணத்தினை செய்து வைத்தேன். தற்போதும் எனது சொந்த இடங்களை விற்றே வாழ்க்கை நடத்துகின்றேன். எவ்வாறாயினும் ராஜபக்சர்களின் உதவி எனக்கு ஒரு போதும் அவசியம் இல்லை எனவும் சந்திரிகா தெரிவித்தார். (இ-7)

## அறப்பணி மைய திறப்பு விழா

ஈழத்து சித்தர் குழந்தைவேல் சுவாமிகள் சமாதி சிவாலய திருக்குடமுழுக்கும் சைவ அறப்பணி மையம் திறப்பு விழாவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சைவ மகாசபை சிவத்தொண்டர்களின் பங்களிப்புடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நாளை மறுதினம் 2 ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை எண்ணெய்க்காப்பு நடைபெறவுள்ளதுடன் அடுத்த நாள் 3 ஆம் திகதி காலை 7.45 மணி தொடக்கம் 9 மணி வரையான நேரப்பகுதியில் திருக்குடமுழுக்கு நடைபெறவுள்ளது. (இ-7)

## வற்வரி வாக்களிப்பில் பங்கேற்காத உறுப்பினர்களிடம் விளக்கம் கோரல்

வற் வரி அதிகரிப்பு சட்டமூல வாக்கெடுப்பில் பங்கேற்காத ஆளும் கட்சியின் உறுப்பினர்களிடம் விளக்கம் கோரப்படவுள்ளது.


குறித்த சட்டமூல வாக்கெடுப்பு நடத்தப்பட்ட தினத்தில் நாடாளுமன்றில் பிரசன்னமாகியிருக்காத அமைச்சர்கள். பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க விளக்கம் கோரவுள்ளார்.

வாக்கெடுப்பில் பங்கேற்காதவர்கள் பற்றிய விபரங்கள் கடந்த 28ம் திகதி பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூல வாக்கெடுப்பின் போது 34 ஆளும் கட்சி உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இதில் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்தரங்குகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டிருந்ததோடு சிலர் நோய் காரணமாக அமர்வுகளில் பங்கேற்றிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சுமார் 10 உறுப்பினர்கள் எந்தவிதமான நியாயமான காரணங்கள் இன்றி இவ்வாறு வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


இங்கிலாந்தை சரித்த மெஹதி

## மெஹதி ஹசன் மிராஷ் என்னும் இளைஞனின் சுழலில்

# சரிந்தது கிரிக்கெட்டின் தாயகம்

# வரலாறு படைத்தது வங்கப்புலிகள்

மெஹதி ஹசன் என்ற 19 வயது வயது நிரம்பிய இளைஞனின் சுழல்பந்துகள் இங்கிலாந்துக்கு அச்சுறுத்தலாக அமைய டாக்காவில் நடைபெற்ற 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 108 ஓட்டங்களால் வென்று வரலாற்று வெற்றியை பதிவு செய்தது.

இவ்வரலாற்று வெற்றி மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரையும் பங்களாதேஷ் அணி 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது.

273 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து தேநீர் இடைவேளையின் போது விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையில் இருந்த போதும் தேநீர் இடைவேளைக்குப் பிறகு மீதி 10 விக்கெட்டுக்களையும் 64 ஓட்டங்களுக்கு இழந்து அதிர்ச்சி சரிவு கண்டு தோல்வியுற்றது.

பங்களாதேஷின் இன்னிங்ஸில் நிறைய பிடிகளைக் கோட்டை விட்ட இங்கிலாந்து அணி, பங்களாதேஷை 2ஆவது இன்னிங்ஸில் 296 ஓட்டங்கள் வரை எடுக்க அனுமதித்து பெரும்தவறாய்அமைந்தது.

இளம் ஓஃப் ஸ்பின்னர் மெஹதி ஹசன் மிராஸ் 2 இன்னிங்ஸ்களிலும் தலா 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றி 12 விக்கெட்டுகளை இப்போட்டியிலேயே சாய்த்தார்.

ஷகிப் அல் ஹசன் தன் ஒரே ஓவரில் ஸ்ரோக்ஸ், ரஷீத், அன்சாரி ஆகியோர் விக்கெட்டுக் களைக் கைப்பற்றி 4 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார்.

2000ஆம் ஆண்டு டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பங்களாதேசுக்கு இது 8ஆவது டெஸ்ட் வெற்றியாகும். சிம்பாப்வேக்கு எதிராக 5 டெஸ்ட் வெற்றியையும், பலவீனமேற கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 2 டெஸ்ட் வெற்றியையும் மட்டுமே பெற்றிருந்த பங்களாதேஷ் அணிக்கு கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் வெற்றி நிச்சயம் அந்நாட்டு கிரிக்கெட்டில் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு மெஹதி ஹசன் மிராஸ் முதல் பந்திலேயே டக்கெட்டை அருமையான விரைவு பந்தில் போல்ட் செய்ய அருமையான தொடக்கம் எதிர்பாராத சரிவுக்கு இட்டுச் சென்றது. 12இல் இருக்கும் போது மெஹதி பந்தை இவர் கட் செய்தார் அதனை மஹமதுல்லா பிடியாக்கத் தவறியிருந்தார்.

வயிற்று வலியிலிருந்த ஜோ ரூட் பேட் செய்ய வந்து ஒரு ஓட்டத்தில் ஷகிப்பிடம் எல்.பி. டபிள்யூ ஆகி வெளியேறினார். 108/2 என்பது 110/3 ஆகியிருக்கும், ஆனால் அலிஸ்ரர் குக் வெற்றிகரமாக எல்.பி.டபிள்யூ தீர்ப்பு ஒன்றை ரெஃபர் செய்து மீண்டார். கேரி பலன்ஸ், படுமோசமான ஷோர்ட் பிட்ச் பந்தை மெஹதி வீச அதனை அடித்து நொறுக்கும் அவசரத்தில் பேட் முன் விளிம்பில் பட்டு மிட் ஓஃப் பில் பிடிகொடுத்து வெறுப்பில் வெளியேறினார்.

மொயின் அலி 4 பந்துகளே தாக்குப் பிடித்து மெஹதி பந்தில் எல்.பி.ஆனார். ஒரு ரிவியூவையும் விரயம் செய்தார்.

அலிஸ்ரர் குக் மெஹதி பந்தை சில்லி பொயிண்ட் டில் மொமினுல் லிடம் பிடி கொடுக்க இங்கிலாந்தின் சரிவு துரிதமடைந் தது. அதன் பிறகு பேர்ஸ்டோவை மெஹதி வீழ்த்த, ஷகிப் அல் ஹசன ஒரே ஓவரில் ஸ்ரோக்ஸ், ரஷீத், அன்சாரியை வீழ்த்த கடைசியில் ஸ்ரீபனஃபின் விக்கெட்டை மெஹதி ஹசன் வீழ்த்த வரலாற்று வெற்றி பெற்ற பங்களாதேஷ், தொடரையும் சமன் செய்து இங்கிலாந்துக்கு எதிரான முதல் வெற்றியை சுவைத்தது.

ஆட்டநாயகனாகவும், போட்டித் தொடரின் நாயகனாகவும் அறிமுக ஓஃப் ஸ்பின்னர் மெஹதி ஹசன் மிராஸ் தேர்வு செய்யப்பட்டார். (க)


குதூகலிக்கும் பங்களாதேஷ் வீரர்கள்

## குசல், தரங்க சதம்

# இலங்கை முதல் இன்னிங்ஸில் 537 ஓட்.
# சிம்பாப்வேயும் ஜோரான ஆரம்பம்

குசல் பெரேரா, உபுல் தரங்க ஆகியோரின் சிறப்பான சதம் கைகொடுக்க சிம்பாப்வே அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 537 ஓட்டங்களை குவித்தது.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஹராரேயில் தொடங்கியது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி களமிறங்கிய இலங்கை அணிக்கு தொடக்க வீரர் கருணாரத்ன 56, கௌசல் சில்வா 94 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தனர்.

அதன்பின் துடுப்பாட வந்த விக்கெட் காப்பாளர் குசல் ஜனித் பெரேரா 110 ஓட்டங்கள் குவித்தார்.

இதன்மூலம் நேற்று முன் தினம் முதல்நாள் ஆட்ட நேர நிறைவில் இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களை குவித்திருந்தது.

தரங்க 13, டி சில்வா 10 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டம் நடந்தது. டி சில்வா 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த குணரத்ன 54 ஓட்டங்கள் சேர்த்தார்.

ஒருபுறும் விக்கெட்டுக்கள் வீழ்ந்தாலும் மறுமுனையில் உபுல் தரங்க சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அவரது சதத்தால் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 155 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 537 ஓட்டங்களைக் குவித்தது.

உபுல் தரங்க ஆட்டமிழக்காமல் 110 ஓட்டங்களைக் குவித்தார்.





பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பில் கிரிமெர் அதிகபட்சமாக 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நேற்றைய 2ஆம் ஆட்டம் நிறைவின்போது ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 88 ஓட்டங்களை எடுத்துள்ளது.

துடுப்பாட்டத்தில் மவோயோ 41, மஷகட்சா 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டை அணித் தலைவர் ரங்கன ஹேரத் கைப்பற்றினார்.

போட்டியின் 3ஆவது நாளாட்டம் இன்றாகும். (க)

## சார்ஜா டெஸ்ட்

# பாகிஸ்தான் தடுமாற்ற ஆரம்பம்

ஷனன் கேப்ரியல் ஆட்டத்தின் முதல் ஓவரில்அணித்தலைவர்அசார் அலி, அசாட் சபீக் ஆகியோரை அடுத்தடுத்து டக் அவுட் செய்ய 2/1 என்ற மோசமான நிலையில் இருந்த பாகிஸ்தான் அணி,


அதன்பின் ஆரம்ப வீரர் சமி அஸ்லாம் (74), யூனிஸ் கான் (51), அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் (53), சப்ராஸ் அஹமட் (51) ஆகியோரின் சிறப்பான அரைச் சதங்களின் உதவியுடன் சரிவிலிருந்து மெல்ல மீண்டது.

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதலிரு டெஸ்ட் போட்டிகளின் நிறைவில் பாகிஸ்தான் 2:0 என்ற கணக்கில் தொடரை வென்றிருந்த நிலையில்,

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி சார்ஜாவில் நேற்று ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சி



யில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி துடுப்பாடக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஷனன் கேப்ரியலின் ஆரம்ப ஓவரிலேயே மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

அவரின் துல்லியமான வேகத்தில் அணித் தலைவர் அசார் அலி, ஷபிக் ஆகியோர்ஓட்டங்கள்ஏதுமின்றி டக்-அவுட் ஆகி வெளியேறினர்.



எனினும் 3ஆவது விக்கெட்டுக்கு சமி அஸ்லாம் உடன் யூனிஸ் கான் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சமி அஸ்லாம் 74, யூனிஸ்கான் 51 ஓட்டங்கள் எடுத்து பாகிஸ்தான் அணிக்கு வலுச் சேர்த்தனர்.

அதன்பின் துடுப்பாட வந்த அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 53, சாப்ராஸ் அஹமட் 51 ஓட்டங்கள் எடுத்து பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு உரமிட்டனர்.

ஆனால், அதன்பின் வந்த மொகமட் நவாஸ் 6, வஹாப் ரியாஸ் 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்க,

பாகிஸ்தான் அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை எடுத்துள்ளது.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் கேப்ரியல் 3, பிஷூ 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் 2ஆம் நாளாட்டம் இன்றாகும். (க)

# லசந்தவின் படுகொலை குறித்து மேலும் 12புலனாய்வாளர்களிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

சண்டேலீடர் செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படு கொலை தொடர் பில் இன்னும் 12 புலனாய்வு அதிகாரி களிடம் வாக்குமூலம் பெறவேண்டியுள்ள தாக குற்றப் புலனாய்வு பிரிவு தெரிவித் துள்ளது.

இது தொடர்பில் உரிய தரப்புக்கு அறிவிக் கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவு தரப்பு தெரிவித்துள்ளது.

எனினும் இன்னும் குறித்த 12 பேரையும் விசாரணை செய்வதற்கான அனுமதி கிடை க்கவில்லை என்றும் சீஐடி தெரிவித்துள்ளது.

குறித்த கொலை தொடர்பில் இராணுவ புலனாய்வு அதிகாரி ஒருவர் கைது செய்ய ப்பட்டிருந்த நிலையில் மற்றுமொரு புலனா ய்வு அதிகாரி தாமே கொலை செய்ததாக பொறுப்பேற்று தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அண்மைக்காலத்தில் இடம்பெற் றது.

இதன் பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்த புலனாய்வு அதிகாரியான பிரேமநந்த உத லகம பிணையில் செல்ல அனுமதிக்கப்பட் டுள்ளார்.

லசந்த விக்கிரமதுங்க. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி
தர்மலிங்கம் சாந்தாதேவி

திரு. பசுபதி நந்தமூர்த்தி
திருமதி நந்தமூர்த்தி சுதாயினி

சென்ற மாதம் இறைபதமடைந்த எமது குடும்பத்தினரின் அந்தியேட்டி கிரியைகள் (29.10.2016) சனிக்கிழமையன்று அதிகாலை 5 மணிக்கு கிரியைகள் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்பட்டது. 01.11.2016 நாளை செவ்வாய்க்கிழமை வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். நேரில் வந்தும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் என்பவற்றின் மூலமும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெற்கொழு கிழக்கு,
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்
தொ. இல. 021 226 5112

(C-6202)

# வாகன விபத்தில் சிக்கிய பொலிஸார் இருவர் பலி!

நீர்கொழும்பு- பமுனுகம பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்துள் ளனர். கார் ஒன்று மோட்டார் வாகனம் ஒன்று டன் மோதியதாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த பொலிஸ் அதிகாரிகள் நீர் கொழும்பு வைத்தியசாலையில் அனும திக்கப்பட்ட போதும். சிகிச்சை பலனின்றி அவர்கள் உயிரிழந்துள்ளதாக வைத்திய சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் கார் சாரதியை பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த கார் சாரதி மது அருந்திய நிலை யிலேயே காரை செலுத்தியுள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர். (இ-7)






தனியார் தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வருடாந்த மாநாடு, கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள வோட்டர் எட்ஸ் ஹோட்டலில், நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

# இராசி பலன்

**31.10.2016**

(ஐப்பசி 15, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பிரதமை பின்னிரவு 1.05 மணிவரை
சுவாதி பிற்பகல் 12.17 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
ஸ்கந்தசஷ்டி விரதாரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரேவதி, அச்சுவினி | | |
| செவ் | | | ராகு |
| | சனி<br>சுக் | சூரி, சந்<br>புத | குரு |

**மீனம்:** சிந்தித்துச் செயற்பட வேண் டிய நாள், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், கவலை கள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**மேடம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேறும் நாள்,வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் கூடும் நாள், உடல் நலன் சீராகும், நினைத்தது நிறை வேறி நிம்மதி காண்பீர்கள், கல்யாணக் கனவுகள் நன வாகும்.

**மிதுனம்:** விருந்துகளில் கலந்து மகிழும் நாள், செய்தொழில் மேன்மை யுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேர லாம், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல் லது, தொழில் ரீதியாக எடு த்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**கடகம்:** தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டு வீர்கள்,வாகன சுகமுண்டு.

**மகரம்:** புதிய திருப்பங்கள் ஏற்படும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், அதிர்ஷ்ட வாய்ப்பு க்கள் வந்து சேரலாம், தொழில் விருத்தியுண்டு.

**சிம்மம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், ஆதாயம் அதிக ரிக்கும் நாள்,சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய் ப்புண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிரச்சினை களிலிருந்து விடுபடுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** தெய்வ சிந்தனை மேலோ ங்கும் நாள், கேட்ட இட த்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உரு வாகும்.

**துலாம்:** குடும்பத்தில் நிலவிய கருத்து முரண்பாடுகள் அகலும், வழி பாட்டில் ஆர்வம் காட்டு வீர்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பீர்கள்,உறவினர்கள், நண்பர்களின் ஆதரவு கிடைக் கும், புத்திசாதுரியமாக நட ந்து காரியங்களைச் சாதிப் பீர்கள்.

# பாதுகாப்பை உறுதி செய்து பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கான அனுமதி வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கான அனுமதி வழங்கும் நடவடிக்கையினை யாழ்.மாவட்ட செயலகம் ஆரம்பித்துள்ளது.

அந்த வகையில் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களில் சிறுவருக்கு பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தி அனுமதி (ஸ்ரிக்கர்) வழங்கும் நிகழ்வு இன்றைய தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

இது தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட செயலக அதிகாரி கு.கௌதமன் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் 400 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பாடசாலை சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அவ்வாறு சேவையில் ஈடுபட்டு வரும் வாகனங்களை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள வாகன பரிசோதகர்கள், பொலிஸார், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் இணைந்து பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளை கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்தனர்.

அந்த வகையில் உரிமையாக்கப்பட்ட வாகனத்தை வைத்திருக்க வேண்டும். வாகனத்தின் பௌதீக நிலை சட்டத்தின் அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். பயணம் செய்யும் மாணவர்களுக்கு உடல், உள பாதிப்பு ஏற்படாத வகையில் வாகனம் அமைந்திருக்க வேண்டும் என்ற தகுதிகளின் அடிப்படையில் பாடசாலை சேவையில் ஈடுபட்டுள்ள சிற்றூர்தி, ஆட்டோ மற்றும் ஹயஸ் வாகனங்கள் உட்பட 108 வாகனங்கள் முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டு பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களில் சிறுவருக்கு பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தி அனுமதி (ஸ்ரிக்கர்) வழங்கப்படவுள்ளது.

இந்த அனுமதி 6 மாதங்கள் வரை செல்லுபடியாகும் என்பதுடன் அதன் பின்னர் வாகனங்கள் மீள்பரிசோதனை செய்யப்பட்டு அனுமதி புதிப்பிக்கப்படும். இனிவரும் காலங்களில் இச்செயற்பாடுகள் தொடர்ச்சியான முறையில் இடம்பெறவுள்ளதுடன் எதிர்காலத்தில் மேற்குறித்த அனுமதி இல்லாது சேவையில் ஈடுபடும் வாகனங்களின் அனுமதிப்பதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படும்.

பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் இந்த அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்று அனுமதியினை பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்

நல்லூர் கிளை நூலகம் மாநகர சபையால் தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் 2016 நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு,

**கதைகூறல்**

க.ஹன்சிகா (யா/கைலாச விநாயகர் பாலர் பாடசாலை), ம.பபினாத் (யா/மாநகர சபை முன்பள்ளி), கி.சகானன் (யா/லிட்டில் சுட்டி முன்பள்ளி).

**முன்பள்ளி வர்ணம் தீட்டுதல்**

சோ.தன்சிகா (யா/கைலாச விநாயகர் பாலர் பாடசாலை), ஸ்ரீ.கவிசயா (யா/முத்தமிழ் முன்பள்ளி), கு.காவியா (யா/கைலாச விநாயகர் பாலர் பாடசாலை).

**தரம்-1 சித்திரம் வரைதல்**

கா.இந்துஜா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), அ.சியாறா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம்), ஜெ.அபிசுதன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

**தரம் 2 சித்திரம் வரைதல்**

சு.பிரணவன் (யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), சி.சாம்பவி (யா/கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை), பு.யானகன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

**தரம் 3 சித்திரம் வரைதல்**

ப.பவிஷா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), இ.கிருதிகா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), க.நீரஜன் (யா/ இந்து ஆரம்ப பாடசாலை).

**தரம் 4 சித்திரம் வரைதல்**

சூ.அட்சயா (யா/இந்து ஆரம்ப பாடசாலை),ந.தேனுஷாந் (யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), என். சாருஜா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

**தரம் 5 சித்திரம் வரைதல்**

செ. அஸ்மிதா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ஸ்ரீ.கயல்விழி (யா/புனித ஜோன்பொஸ்கோ வித்தியா லயம்), ஜெ.சிந்துஜா (யா/சென்பெனடிக்ற் வித்தியாலயம்).

**தரம் 3 வாசிப்பு தமிழ்**

நீ.வைஷ்ணவி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), கா.மிருன்திகா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), ர.இந்துசா (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

**தரம்-4 வாசிப்பு தமிழ்**

து.ரிசிகேசன் (யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), இ.மதுராகன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை), சூ.அட்சயா (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

**தரம் 5 வாசிப்பு தமிழ்**

ஸ்ரீ.சுவர்ணஜா, சி.லோயினி, அ.திவானிகா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

**தரம் 3 வாசிப்பு ஆங்கிலம்**

தி.ரிஷிகன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை) ரா.சுவஸ்திகா, லோ.ஹரிவி (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

**தரம் 4 வாசிப்பு ஆங்கிலம்**

கா.ஹரிஸ் (யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), சு.லாவன்யன் (யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), த. துளசிகா (யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்).

**தரம் 5 வாசிப்பு ஆங்கிலம்**

சி.நிரோசினி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), கே.கயல் விழி (யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), ம.லெத்ஷாங்கன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

**தரம் 6,7 கட்டுரை தமிழ்**

நிரிஷிகேசசர்மா (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி), ஞா.டாலசிங்கம் (யா/இந்துக் கல்லூரி), சு.பிரவீன் (யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்).

**தரம் 8,9 கட்டுரை தமிழ்**

கு.சாருஜன் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி), அ.தேனுஜன் (யா/இந்துக்கல்லூரி), வி.சுவிகன் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி).

**தரம் 10,11 கட்டுரை தமிழ்**

இ.அரன் (யா/இந்துக்கல்லூரி), அ.அபிநந்தன் (யா/இந்துக்கல்லூரி), யோ.குருபரன் (யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்).

**தரம் 6,7 கட்டுரை ஆங்கிலம்**

ஆர். தஸ்சன் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி

**தரம் 8,9 கட்டுரை ஆங்கிலம்**

ர.பரிசித் (யா/இந்துக்கல்லூரி), எஸ். இளங்குமார் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி).

**தரம் 10, 11 கட்டுரை ஆங்கிலம்**

அ.அஷாரிஹா (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை)

**பொது அறிவு 14 வயதிற்கு மேற்பட்டோர்**

ஜெ.பிதுசன்லை (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி, பு.சஜீவன் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி). (இ





வடமாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களத்தின் கீழ் இயங்கும் மாதர்சங்கங்களினால் நடத்தப்படும் தையல் வகுப்புகளில் பயன்படுத்தப்படும் துணிகளை, குறிப்பிட்ட பிரதேச செயலகப்பிரிவுகளைச்சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் சுழிபுரம் தையல் பயிற்சி நிலையத்தில் யாழ்.மாவட்ட,கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 75,000/= பெறுமதியான துணிகள் சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டன. (படங்கள்:-கிஷோர்)

## நினைவுப் பேருரையும் மரம் நாட்டும் விழாவும்

(யாழ்ப்பாணம்)

அமரர் கலாநிதி க. கனகராசாவின் 89 ஆவது ஆண்டு நினைவுப் பேருரையும் யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் மரம் நாட்டு விழாவும் நாளை மறுதினம் 2 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இடம்பெறும். யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் செ. தேவரஞ்சன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் கலந்து கொள்வார். (இ-3)

## கந்தசஷ்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய கந்தசஷ்டிப் பெருவிழா இன்று 31 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சூரசம்ஹார உற்சவம் இடம்பெறவுள்ளது. (இ-3)

## மரநடுகை மாதத்தில் இந்த மண்ணுக்கு சொந்தமான மரங்களுக்கு முக்கியத்துவம்

### சுற்றாடல் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

வடமாகாண மரநடுகை மாதமான கார்த்திகை முதலாம் திகதி தொடங்கி முப்பதாம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த மண்ணுக்குச் சொந்தமான மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மரநடுகை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். வடமாகாண மரநடுகை மாதம் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.


வடக்கில் மரநடுகையை முன்னெடுப்பதற்குச் சாலச் சிறந்ததொரு மாதமாகக் கார்த்திகை மாதமே உள்ளது. எமது மண்ணுக்கு அதிக அளவு மழைவீழ்ச்சியைத் தரும் மாதம் கார்த்திகை. அதனாலேயே, கார் என்ற மழையைச் சுட்டுகின்ற பெயரை இம்மாதத்தின் பெயராகச் சூட்டியுள்ளோம். மழைநீரால் மாத்திரம் அல்ல, தமிழ் மக்களின் கண்ணீரால் நனையும் மாதமாகவும் கார்த்திகை உள்ளது. மண்மீட்புக்காகப் போராடி உயிர் துறந்த எமது உறவுகள் அனைவரையும் நினைந்து கண்ணீர் உகுக்கும் நாட்களும் இம்மாதத்துக்குள்ளேயே அடங்குகின்றன. மரங்களே எமது ஆதித் தெய்வங்கள். மரங்களை வணங்குகின்ற தொன்மையான வழிபாட்டு முறையைக்கொண்ட நாம் மரணித்தவர்களின் நினைவாக மரங்களை நட்டுப் போற்றும் மாண்பையும் கொண்டிருக்கிறோம். இவற்றின் அடிப்படையிலேயே கடந்த 2014ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம் என்பதை மகுடவாசகமாகக் கொண்ட மரநடுகை மாதத்தின் நடப்பு ஆண்டுக்குரிய கருப்பொருள் சொந்த மண் சொந்த மரங்கள் என்பதாகும். எமது சொந்த மண்ணில் எம்மோடு சேர்ந்தே பரிணாமித்து வளர்ந்த சொந்த மரங்கள் ஏராளம் உண்டு. எமது மண்ணின் செழுமையை இற்றைவரை தக்க வைத்திருப்பவை இந்த உள்ளூர் மரங்கள்தான். அந்த வகையில் உயிர்ச்செழிப்பின் உயிர் நாடியாக விளங்கும் உள்ளூர் மரங்களுக்கு இந்த ஆண்டு மரநடுகை மாதத்தின்போது கூடுதல் முக்கியத்துவம் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடுகை செய்வதோடு தொடர்ச்சியாகப் பராமரிப்போம் என்ற உறுதிமொழியுடன் எமது சுற்றாடல் அமைச்சை அணுகும் எவருக்கும் எம்மால் இயன்ற அளவுக்கு மரக்கன்றுகளை வழங்குவதற்கு நாம் சித்தமாயுள்ளோம். எமது மண்ணின் பசுமையையும் எமது வருங்காலத் தலைமுறையின் வளமான வாழ்வையும் பாதுகாக்கும் இந்தப் புனிதமான கைங்கரியத்தில் பாடசாலைகள், கூட்டுறவு அமைப்புகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், வணக்கத்தலங்கள் ஆகியவற்றோடு, பொது மக்கள் அனைவரையும் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7

## பணம் கண்டெடுப்பு

சிறுதொகைப்பணம் கடந்த 27 ஆம் திகதி அன்று பிற்பகல் பலாலி வீதி ஆரியகுளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ




## மலர்க் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தை (கார்த்திகை 1-30) முன்னிட்டு வடமாகாண தாவர உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் பங்கேற்கும் மலர்க் கண்காட்சி எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறவுள்ளது. (இ-3)

# ஜனநாயகத்தை நிலைநாட்டக்கோரி ஜெனீவா செல்கிறது கூட்டு எதிரணி



பாராளுமன்றத்தின் உள்ளும் வெளியிலும் ஜனநாயகத்தை நிலை நாட்டக்கோரி ஜெனீவா செல்வதற்கு கூட்டு எதிரணி தயாராகி வருகின்றது. அதன்பிரகாரம் கூட்டு எதிரணி அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்திலும், பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற ஒன்றியத்திலும் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்குரிய வேலைத்திட்டங்களை எடுத்து வருகின்றது.

இது குறித்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டு எதிரணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது.

52 மக்கள் ஆணை பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கூட்டு எதிரணியாக பாராளுமன்றத்தில் இருக்கின்றோம். தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட வரவு செலவுத்திட்டங்களுக்கு மக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு எதிர்த்து வாக்களித்தே வந்துள்ளோம்.

இந்நிலையில் 52 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக இருக்கின்றபோதும் எம்மை எதிர்க்கட்சியாக அங்கீகரிக்க தற்போதைய ஆட்சியாளர்கள் மறுத்து வருகின்றனர். கூட்டு எதிரணியிலைனச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களினது ஜனநாயக உரிமைகள் மறுதலிக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பாக நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம். பாராளுமன்றத்தின் உள்ளும் வெளியிலும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

எனினும் நியாயம் கிடைப்பதாக இல்லை. இந்நிலையில் கடந்த காலத்தில் நானும், பாராளுமன்ற உறுப்பினர்களான உதயகம்மன்பில, டலஸ் அழகப்பெரும ஆகியோர் ஜெனீவாவிலுள்ள அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தில் முறைப்பாட்டை செய்திருந்தோம்.

எனினும் எமது அணியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை மீறும் செயற்பாடுகள் தற்போதும் காணப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக பாராளுமன்றத்தில் எமது அணி உறுப்பினர்கள் மக்கள் பிரச்சினைகளை பேசுவதற்கு முயல்கின்றவேளையில் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை. சரியான பதிலளிப்புக்கள் இடம்பெறுவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சு.கவுக்கு தாவத் தயார் ஐ.தே.கவின் அமைச்சர்?



(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல களில் மோசடியான முறையில் வருமானம் ஈட்டியுள்ளதாக குற்றம் சாட்டப்படும் அர்ஜுன் அலோசியஸிற்கு எதிராக மின்சக்தி பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைவர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள இரகசிய இணக்கப்பாட்டிற்கமையவே பிரதி அமைச்சர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்களை அடிப்படையாகக்கொண்டு கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் சபைத் தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுள்ளனர். இதன்போது அஜித் பீ.பெரேரா வெளியிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடு அல்லவென பிரதமர் தெரிவித்துள்ளார். அத்துடன் மின்சக்தி பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா சுட்டிக் காட்டியுள்ள முறைக்கமைய அர்ஜுன் அலோஸியசிற்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் வழக்கு தாக்கல் செய்ய முடியாதென்பதனை சுட்டிக்காட்டிய ஐக்கிய தேசிய கட்சியின் சட்ட பிரிவு, சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் அர்ஜுன் அலோசியஸ் குறித்த நிறுவனத்தில் தலைவராக செயற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மின்சக்தி பிரதி அமைச்சர் அஜித்பீபெரேரா கட்சித் தலைவர்களிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளமை பாரிய சந்தேகத்திற்கு காரணமாகியுள்ளது. இந்நிலையில் இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)


## வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள்-2017

வட இலங்கை சங்கீத சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பப்படிவங்கள் 2016.11.02 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 2016.11.30 ஆகும். விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல், வங்கிப் படிவம் உட்பட 70/= ரூபா (எழுபது) மட்டும்.

இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் பரீட்சைக் கட்டணத்தை சபையினால் வழங்கப்படும் படிவத்தையும் வங்கியினால் வழங்கப்படும் படிவத்தையும் பூரணப்படுத்தி அதற்குரிய பணத்தினைச் செலுத்தி வங்கியினால் வழங்கப்படும் படிவம் ஒன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

யாழ்.மாவட்ட தேர்வு நாடிகள் தமக்கு வேண்டிய விண்ணப்பப் படிவங்களை வட இலங்கை சங்கீத சபை, கே.கே. எஸ். வீதி, மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும். (சி-6228)

செயலாளர்,வட இலங்கை,சங்கீதசபை



## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 28, சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc,MSc பொறியியலாளர் (அமெரிக்கா NOT PR)
எதிர்பார்ப்பு:கனடா மட்டும்
தொ.இ: B/6269

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 50 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L TV Programme Editor (UK PR)
தொ.இ: B/6270

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 28.5 சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:B.B.A/அபிவிருத்தி உத்தியோகத்தர் (அரச)
தொ.இ: B/6271

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: 26
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:BSc, MSc,ACCA Account (UK Citizen)
தொ.இ: B/6272

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 15 செவ் 1இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Dental Doctor
தொ.இ: G/1951

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 66 சூரிசெவ்1இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/1953

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 28.5
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L (பாமசி)
தொ.இ: G/1955

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 25
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L தையல் டிப்ளோமா
தொ.இ: G/1959

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதையும் அறியத்தருகின்றோம்)

# பொலிஸ் நடமாடும் சேவை மாத நிகழ்வுகள் நவம்பர் 30 வரை

## கிளிநொச்சி, முல்லையில் அலுவலகங்கள் திறப்பு

பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் நடமாடும் சேவை மாத நிகழ்வு கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைமுறைப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, நாடு தழுவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களில் முன்னெடுக்கப்படும் பொலிஸ் நடமாடும் சேவை மாத நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலாம் வட்டாரம் புதுக் குடியிருப்பு பகுதியில் காலை 9 மணிக்கு பொலிஸ் நடமாடும் சேவை மாதத்தின் அலுவலக மொன்று திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட தருமபுரம் பொலிஸ் பகுதியில் புளியம் பொக்கணை கிராமத்திலும் பொலிஸ் நடமாடும் சேவை மாதத்தின் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இதேபோல் இரண்டு மாவட்டங்களின் கீழுள்ள அனைத்து பொலிஸ் நிலையப் பகுதிகளிலும் இந்த பொலிஸ் நடமாடும் சேவை பிரிவின் அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஒரு மாதகாலம் செயற்படவுள்ள அலுவலகங்கள் ஊடாக பொதுமக்களிடையே காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குத்தீர்வு காணப் படுவதுடன் பல்வேறுபட்ட உதவித்திட்டங்களும் முன் னெடுக்கப்படவுள்ளன.

இந் நடமாடும் சேவை காலப்பகுதியில் பொதுமக்கள் இவ் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வவுனியாவில் தீபாவளி தினத்தன்று ஏற்பட்ட மோதல்கள், விபத்துக்களினால் 15 பேர் வைத்தியசாலையில் அனுமதி

## மூவர் கைதாகினர்

வவுனியாவில் தீபாவளித் திருநாளான நேற்று முன் தினம் சனிக்கிழமை இளைஞர் குழுக்களிடையே மதுபோதையில் ஏற்பட்ட மோதல்கள் மற்றும் விபத்துக்கள் காரணமாக 15 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவங்கள் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தீபாவளி தினத்தன்று வவுனியாவின் பல பகுதிகளிலும் இளைஞர்களுக்கிடையில் மோதல்கள், வாள்வெட்டுக்கள் இடம்பெற்றுள்ளதுடன் விபத்து சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

விபத்துக்கள் காரணமாக 7 பேரும் மோதல் மற்றும் வாள்வெட்டு காரணமாக 8 பேரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் பிற்பகல் 6 மணியில் இருந்து இரவு 9 மணி வரையிலான 3 மணிநேரத்தில் வவுனியாவில் பல பகுதிகளில் இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் ஆறு பேரும், இக் காலப்பகுதியில் இடம்பெற்ற விபத்து காரணமாக 4 பேரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்படி வவுனியா, மதீனா நகர் பகுதியில் தமிழ் இளைஞர்கள் செலுத்திவந்த ஆட்டோ ஒன்று தடம் புரண்டபோது இப்பகுதி முஸ்லிம் இளைஞர்கள் உதவிக்காக சென்றுள்ளனர்.

இதனையடுத்து சிறிது நேரத்தில் பூந்தோட்டம் பகுதியில் இருந்து வந்த இளைஞர் குழுவொன்று உதவிய முஸ்லிம் இளைஞர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டதாகவும் இதன் காரணமாக தமிழ் இளைஞர்கள் இருவரும் முஸ்லிம் இளைஞர் ஒருவரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வவுனியா, கற்குழி பகுதியில் தமிழ் இளைஞர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் மற்றும் வாள்வெட்டு சம்பவத்தில் நால்வர் பொலிஸாரால் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பம்பைமடுப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் காரணமாக இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தரணிக்குளம் பகுதியில் ஆட்டோ மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதன் காரணமாக நால்வர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேப்பங்குளம், மன்னார் வீதியில் மோட்டர் சைக்கிள் ஒன்றும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவரும், யுவதி ஒருவரும் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் ஏற்பட்ட விபத்து காரணமாக ஒருவர் காயமடைந்துள்ளார். இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 15 பேரில் 7 பேர் விபத்து காரணமாகவும் 8 பேர் மோதல் மற்றும் வாள் வெட்டு காரணமாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மேலதிக அசம்பாவிதங்களை தடுக்கும் பொருட்டு தீபாவளி தினத்தன்று வவுனியாவில் பல இடங்களிலும் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், மதீனா நகர் பள்ளிவாசல், பூந்தோட்டம் சந்தி பகுதியில் நேற்றும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இளைஞர் குழுக்களின் அட்டகாசம் காரணமாக வவுனியா வைத்தியசாலை வளாகத்தினுள் நோயாளர் தவிர்ந்த வேறு எவரும் உட்பிரவேசிக்க முடியாதவாறு நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு வைத்தியசாலை வாயிலில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (2-250)

# மரநடுகை மாதம் கார்த்திகை 1-30 வரை

## தொடக்க விழா நாளை கிளிநொச்சியில்

வடக்கு மாகாண மரநடுகை மாதமான கார்த்திகை முதலாம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த மண்ணுக்கு சொந்தமான மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடுகை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஆளுக்கொரு மரம் நடுவோம்; நாளுக்கொரு வரம் பெறுவோம் என்பதை மகுட வாசகமாகக் கொண்ட மரநடுகை மாதத்தின் நடப்பு ஆண்டுக்குரிய கருப்பொருள் சொந்த மண் சொந்த மரங்கள் என்பதாகும்.

இதன்படி மரநடுகை மாதத் தொடக்க விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி, இரணைமடு இடதுகரை வாய்க்கால் வீதியில் மகிழங்காடு, கோவிந்தன் கடைச்சந்திக்கு அருகாமையில் வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாணமுதலமைச்சர்சிவிவிக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டி வைக்கவுள்ளார். (2)







*முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட முள்ளியவளை வடக்கு பகுதியில் பொலிஸ் நடமாடும் சேவை அலுவலகம் ஒன்று நேற்று காலை 8 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட பிரதான பொலிஸ் அத்தியட்சகரினால் திறந்து வைக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.*

*(படம்:- முள்ளியவளை செய்தியாளர்)*

# திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயம் முன்பாக நடைபெற்ற நடமாடும் சேவை

(பனிக்கன்குளம்)

மாங்குளம் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை ஒன்று திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

பொலிஸ் திணைக் களத்தின் 150ஆவது ஆண்டையொட்டி பொலிஸ்மா அதிபரின் பெயரில் நாடளாவிய ரீதியில் 30.10.2016 தொடக்கம் 30.11.2016 வரையான காலப்பகுதியில் மக்களுக்கான நடமாடும் சேவைகள் இடம்பெறுகிறது.

அந்தவகையில் மாங்குளம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி மாலின் பெர்னாட்டோ தலைமையில் நேற்று திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் முன்பாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் நடமாடும் சேவை இடம்பெற்றது. திருமுறிகண்டி, இந்துபுரம் உள்ளிட்ட பகுதி மக்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளதால் அவர்களின் நன்மைகருதி விசேடமாக திருமுறிகண்டிப் பகுதியில் இந்த நடமாடும் சேவை இடம்பெறுகிறது.

ஒருமாத காலமும் இந்தப்பகுதியில் இடம்பெறும் நடமாடும் சேவையூடாக அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களுக்கான பொலிஸாரின் முறைப்பாட்டு பிரதி போன்ற பொலிஸாரிடம் பெறவேண்டிய அனைத்து சேவைகளையும் காணிப்பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் செய்து கொள்ள முடியுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இதனைவிட குறித்த ஒரு மாத காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் இடம்பெறும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் சிரமதானப்பணிகள், டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் மற்றும்மக்களுக்கான சேவைகள், மரநடுகை பாடசாலை மாணவர்களுக்கு வீதி போக்குவரத்து விதிமுறை விழிப்புணர்வு வேலைத்திட்டம் உள்ளிட்ட பலவேலைத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

பொலிஸாரிடம் தமக்கான சேவைகளை பெற்றுக் கொள்ள காத்திருப்பவர்கள் இந்த விசேட சந்தர்ப்பத்தை பயன்படுத்தி விரைவாக பயன்பெறுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (2-281)

# இளைஞர்களுக்கான வதிவிட தலைமைத்துவப் பயிற்சி நவம்பரில்

கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடளாவிய ரீதியில் இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியை நடத்தி வருகிறது.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலக பிரிவுகளிலும் தலா100 இளைஞர்கள் வீதம் 600 இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்ச்சியை நடத்துகின்றது.

இதனடிப்படையில் துணுக்காய் பிரதேச செயலகத் திற்குட்பட்ட 100 இளைஞர்களுக்கான வதிவிட தலைமைத்துவ பயிற்சியானது எதிர்வரும் நவம்பர் மாதம் 04.05.06 ஆகிய திகதிகளில் மல்லாவி மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளதாக துணுக்காய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஜெ.சுகந்தன் தெரிவித்துள்ளார். (2-281)

# 44 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில்

# 20 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு குடிநீர்க்கிணறுகள் அமைக்க நிதியுதவி

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**மீள்குடியேற்ற அமைச்சின் 44 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் மூலம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் வரட்சி காரணமாக குடிநீர்ப்பிரச்சினைகள் ஏற்படும் இடங்களிலுள்ள குடும் பங்களில் 20 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அக்குடும் பங்க ளுக்கு குடிநீர்க் கிணறுகள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்படவுள்ள தாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் யதுகுலசிங் அனுருத்தனன் தெரிவி த்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரி விக்கையில்,

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் வரட்சியான காலங்களில் குடிநீர்ப் பிரச்சினைகள் என இனம் காணப்பட்ட கிராமங்களான முத் தையன்கட்டு படித்த வாலிபர் குடியி ருப்புப் பகுதியிலுள்ள 13 குடும்ப ங்களின் வீடுகள் மற்றும் மாங் குளம், ஒலுமடு ,பெரிய குளம், இந்து புரம் ஆகிய கிராமங்களில் இருந்து ஏழு குடும்பங்களுமாக மொத்தம் 20 குடும்பங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

இக்குடும்பங்களின் வீடுகளில் கிணறு அமைப்பதற்கு தலா 2 இலட்சத்து 20 ஆயிரதம் ரூபா வீதம் மொத்தம் 44 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)

## 'கழிவுகள் அற்ற இலங்கை'

### மன்னாரில் முகாமைத்துவ வாரம்

தேசிய ரீதியில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் மின்சார இலத் திரனியல் கழிவு முகாமைத்துவ வாரமாக கடந்த 24 ஆம் திகதி முதல் நேற்று வரை நாடளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டு டிருந்தது.

கழிவுகள் அற்ற இலங்கை என்னும் தொனிப்பொருளில் குறி த்த நிகழ்வை முன்னிட்டு மன்னார் மத்திய சுற்றாடல் அதிகார சபை யின் மாவட்ட அலுவலகத்தினால் கடந்த 25 ஆம் திகதி செவ்வாய் க்கிழமை மன்னார் நகரசபை பொது விளையாட்டு மைதானத் தில் விழிர்ப்புணர்வு நிகழ்வு நடை பெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விரு ந்தினராக மன்னார் மாவட்ட அர சாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப் பிரிய. கௌரவ விருந்தினர்களாக. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (2-9)



நாடளாவிய ரீதியில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் மின்சார இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ வாரம் கடந்த 24 ஆம்திகதி தொடக்கம் நேற்றுவரை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இந்த வாரத்தையொட்டி மன்னார் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தினால் கடந்த 25 ஆம் திகதி மன்னார் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்ற போது...
(படங்கள்:-பொ.சோபிகா)

## வவுனியாவில் இளைஞர் குழுக்களுக்கிடையில் மோதல்; மதீனா நகர் பள்ளிவாசலுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(குருமண்காடு)

வவுனியா. பூந்தோட்டம் மற் றும் மதீனா நகர் பகுதியில் இளை ஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் காரணமாக மேலதிக அசம்பாவிதங்களை தடுக்கும் பொருட்டு அப்பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தீபாவளித் தினமான நேற்று முன்தினம் மாலை பூந்தோட்டம் பகுதியில் மது போதையில் கை கலப்பில் ஈடுபட்ட இளைஞர் குழு வொன்று ஆட்டோவில் பயணித்த போது மதீனா நகர் பள்ளிவாசல் அருகாமையில் குறித்த ஆட்டோ தடம்புரண்டது. இதன்போது அப் பகுதி முஸ்லிம் இளைஞர்கள் விபத்துக்குள்ளானவர்களுக்கு உத வியிருந்தனர்.

இதன்போது ஏற்பட்ட சிறு வாய்த் தர்க்கத்தையடுத்து குறித்த ஆட்



டோவில் பயணித்த இளைஞர் குழு பூந்தோட்டம் சந்திக்கு சென்று மீண்டும் மதீனா நகர் வந்து அப்ப குதி முஸ்லிம் இளைஞர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டது.

இச்சம்பவத்தில் இரு தமிழ் இளைஞர்கள், ஒரு முஸ்லிம் இளைஞர் காயமடைந்து வவு னியா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டனர். இதனையடுத்து குறித்த பகுதியில் மேலும் அசம் பாதிகள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் மதீனா நகர் பள்ளிவாசல் மற்றும் பூந்தோட்டம் சந்திப் பகு தியில் பொலிஸ் பாதுகாப்பு போட ப்பட்டுள்ளது. (2-250)




## முதியோர் விலைமதிப்பற்ற சொத்துக்கள்

### வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பெருமிதம்

(பனிக்கன்குளம்)

முதியவர்கள் எமது பொக்கிஷ ங்கள் அல்லது விலைமதிப்பற்ற சொத்துக்கள். முதியோர் இல்ல ங்கள் குறைக்கப்படவேண்டும் என்பதை மனதில் இருத்திக் கொள் ளுங்கள் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீ ஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பட்டித்தோட்டம் புதிய உதயம் சிரேஷ்ட பிரஜைகள் சங்க த்தின் ஏற்பாட்டில் கீரி மற்றும் பட்டித்தோட்டம் பகுதிகளில் உள்ள மூத்த பிரஜைகளால் நடத்தப்பட்ட சர்வதேச முதியோர் தின விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிய ளவில் பட்டித்தோட்டத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஏறத்தாழ 80 மூத்த பிரஜைகளுக்கு அமைச்சர் பா.டெனீஸ்வரனின் நிதி ஒதுக் கீட்டின் கீழ் அன்பளிப்பாக சாரம் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் அமைச்சர் தனது கரு த்தை தெரிவிக்கையில்.

தற்போதைய இளைஞர்கள் காவோலை விழ குருத்தோலை சிரிக்கும் என்ற பழமொழிக்கு ஒப்பாகவே நடந்துகொள்கின்றனர்.

எமது மாகாணத்தில் முதிய வர்களை ஒரு துளியேனும் மதிக் காத சமூகமாக மாறுவது மிகுந்த சாபமாக தாம் கருதுவதாகவும் தெரிவித்தார். இளைஞர்கள் முதிய வர்களது பெறுமதியை உணர்ந்து அவர்களது அனுபவத்துக்கு மரி யாதை கொடுத்து அதனை எமது வாழ்விலும் கடைப்பிடிக்கும் போது அவர்களது அனுபவமானது நம்மை மென்மேலும் மெருகூட்டும். இந்த அனுபவக்கல்வியை நாம் வேறு எவரிடமும் பெற முடியாது என் பதை தெளிவாக உணர்ந்துகொள் ளுங்கள் என வலியுறுத்திக் கூறி யிருந்தார். (2-281)



தீபாவளி பண்டிகை பூசைகள் நெடுங்கேணி மாறாலிப்பை நாகதம்பிரான் ஆலயத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் வெகு சிறப்பாக இடம் பெற்ற போது...
(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# நவீன ஊடகப் பரிணாமம் பொலிஸாருக்குச் சவால்

## அமைச்சர் சாகல தெரிவிப்பு

இலங்கையில் வேகமாக வளர்ந்து வருகின்ற நவீன ஊடகமும், சமூக வலைத் தளப் பாவனையினால் பொலிஸாருக்கு பெரும் சவால் ஏற்பட்டிருப்பதாக சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆட்சியை விடவும், நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் ஊடகங்களுக்கு பெருமளவில் சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மொனறாகலை பொலிஸ் நிலையத்திற்கான நிர்வாகக் கட்டடத்தை திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அமைச்சர் சாகல ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதனையடுத்து அங்கு உரையாற்றிய அமைச்சர், சமூக வலைத்தளங்கள் மற்றும் நவீன ஊடகங்களின் செயற்பாடுகளினால் பொலிஸ் துறையில் அதற்கு ஏற்றாற் போல்மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் இந்த நாட்டிலுள்ள ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமான, கருத்துக்கூறுவதற்கான உரிமை இருக்கவில்லை என்று தெரிவித்த அமைச்சர், நல்லாட்சி அரசாங்கத்தில் அந்த சூழ்நிலை மாற்றிப் போடப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

எவ்வாறாயினும்அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது யாழ்ப்பாணத்தில் செயற்படும் ஆவா என்ற ஆயுதக் குழு தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய சந்தர்ப்பத்தில் அமைச்சர் சாகல ரத்நாயக்க பதிலளிக்காமல் நழுவிச்சென்றிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)

# 8 இலட்சம் ரூபாவுடன் சாரதி தலைமறைவு

(கொழும்பு)

வத்தளை, மாபோலயில் பிரபல தனியார் நிறுவனமொன்றில் எட்டு இலட்சம் ரூபா பணத்துடன் நிறுவன வாகன சாரதி தலைமறைவாகியுள்ளதாக வத்தளை பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இது குறித்து தெரிய வருவதாவது.

வத்தளை மாபோல பிரதேசத்தில் அமைந்துள்ள பிரபல தனியார் நிறுவனத்தில் சாரதியாகப் பணிபுரிந்த நபர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை காலை நிறுவனத்தின் ஆறு இலட்சம் ரூபா, இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரு காசோலைகள் உள்ளிட்ட நிறுவனத்தின் ஆவணங்களை எடுத்துக்கொண்டு சென்றிருக்கிறார்.

இந்நிலையில் வத்தளை, மாபோல பிரதான் வீதிக்கருகில் குறித்த வாகனத்தை நிறுத்தி விட்டு அவர் தலைமறைவாகியுள்ளார்.

அச்சமயம் குறித்த வாகனத்தில் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான சரக்குகள் இருந்ததாகவும் தெரிய வருகிறது.

குறித்த சாரதி தொடர்பான தகவல்கள் ஏதும் நிறுவனத்துக்கு தெரியவராத நிலையில் அவருக்கு எதிரான முறைப்பாடொன்றை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் வத்தளை பொலிஸ் நிலையத்தில் செய்துள்ளார்.

சாரதியாகப் பணிபுரிந்த குறித்த சந்தேக நபர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் இரத்தினபுரி, பெல்மடுல்ல வீட்டின் அறையை பொலிஸார் சோதனையிட்ட போது அங்கு எதுவும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அவர் தலைமறைவாகியிருக்கும் இடம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் ஒன்று கிடைத்துள்ள நிலையில் விரைவில் அவரைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ஈமெயில் விவகாரத்தில் மீண்டும் விசாரணையா? ஹிலாரி ஆவேசம்

(வோஷிங்டன்)

அரசு பணிகளுக்கு தனிப்பட்ட ஈமெயில் கணக்கினை பயன்படுத்தியது தொடர்பாக மீண்டும் விசாரணை தொடங்கப்படும்என தேசிய புலனாய்வு அமைப்பு அறிவித்துள்ளதற்கு ஹிலாரி கிளின்டன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது. இதனையடுத்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி தேர்தல் நடக்கிறது.

இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக, முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் மனைவியும், முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சருமான ஹிலாரி கிளின்டன் போட்டியிடுகிறார்.

குடியரசு கட்சியின் சார்பில் பிரபல ரியல் எஸ்டேட் அதிபரான டொனால்ட் ட்ரம்ப் அவரை எதிர்த்து களம் காண்கிறார்.

குடியரசுக் கட்சி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்பை விட ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஹிலாரி கிளின்டனுக்கு 6 சதவீதம்பேர் அதிகமான ஆதரவு அளித்துள்ளனர்.

தேர்தலுக்கு இன்னும் 8 நாட்களே உள்ள நிலையில் ஹிலாரியின் பிரசார வியூகத்தால் ஆதரவு சதவீதம் அதிகரிக்கலாம்.

பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறும் அவர் நிச்சயமாக ஆட்சியை கைப்பற்றுவார் என்று கருதப்படுகிறது.

இதற்கிடையில், அமெரிக்காவில் 2009-13 காலகட்டத்தில்வெளியுறவுத்துறைஅமைச்சராக பதவி வகித்தபோது, தனது தனிப்பட்ட ஈமெயில் கணக்கினை அரசு பணிகளுக்கு ஹிலாரி கிளின்டன் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

கடந்த ஆண்டு இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த ஹிலாரி கிளின்டன், "தனிப்பட்ட ஈமெயில் கணக்கை அரசுப் பணிக்கு பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது.

இருப்பினும் நான் இரண்டு ஈமெயில் கணக்குகளை பராமரித்து வந்திருக்க வேண்டும். ஒன்றை தனிப்பட்ட தேவைகளுக்கும்மற்றொன்றை அரசுப்பணி தொடர்பானவற்றுக்கும் பயன்படுத்தி இருக்க வேண்டும். அதை செய்யாமல் இருந்தது தவறுதான். அதற்காக நான் வருந்துகிறேன்.நான் அந்த தவறுக்கு பொறுப்பேற்கிறேன்" என கூறியிருந்தார்.

இதுதொடர்பாக, ஹிலாரியின் அரசு உதவியாளர் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகளிடம் தேசிய புலனாய்வு பொலிஸார் (எப்.பி.ஐ.) ஏற்கனவே கடந்த ஜூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களில் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரும், ஜனநாயக கட்சியின் வேட்பாளருமான ஹிலாரி கிளின்டனிடம் ஈமெயில் விவகாரம் தொடர்பாக தேசிய புலனாய்வு பொலிஸார் மூன்றரை மணிநேரம் இந்த விசாரணை நடத்தியதாகவும், விசாரணைக்கு ஹிலாரி மிகவும் சாதகமான முறையில் ஒத்துழைப்பு நல்கியதாகவும்எப்.பி.ஐ. தலைமை அலுவலகம் முன்னர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

அத்துடன் இந்த விவகாரம் ஓய்ந்து விட்டதாக கருதப்பட்டு வந்த நிலையில் ஹிலாரியின் ஈமெயில்கள் தொடர்பாக மீண்டும் விசாரணையை தொடர உள்ளதாக அமெரிக்காவின் தேசிய புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ. தற்போது அறிவித்துள்ளது.

தனது தனிப்பட்ட ஈமெயில் மூலம் ஹிலாரி பகிர்ந்து கொண்ட மேலும் சில தகவல் திரட்டுகளை ஆய்வு செய்து, விசாரிக்க திட்டமிட்டுள்ளதாக அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுதொடர்பான அறிவிப்பை எப்.பி.ஐ. இயக்குநர் ஜேம்ஸ் காமே வெளியிட்டதும், இந்த அறிவிப்பின் எதிரொலியாக மக்களிடையே ஹிலாரியின் செல்வாக்கு சரிந்து விடுமோ..? என ஜனநாயக கட்சியினர் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

இந்நிலையில், இது தொடர்பாக புளோரிடா மாநிலத்தில் தனது ஆதரவாளர்களிடையே பேசிய ஹிலாரி, 'தேர்தலுக்கு இன்னும் 8 நாட்களே இருக்கும்நிலையில் இதைப்போன்ற முழுமையான தகவல்கள் இல்லாத அரைகுறை அறிவிப்பை வெளியிடுவது விசித்திரமாக உள்ளது' என தெரிவித்துள்ளார்.

மேலும், நேற்றுக் காலை டேய்ட்டோனா கடற்கரை பகுதியில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் பேசிய அவர், 'எப்.பி.ஐ.யின் அறிவிப்பு விசித்திரமானது மட்டுமல்ல, இதுவரை இல்லாத புதுமையாகவும் உள்ளது.

இது தொடர்பான உண்மைகளை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என வாக்காளர்கள் விரும்புகின்றனர்.

எனவே, இவ்விவகாரம் தொடர்பான முழு விளக்கத்தை அளிக்கும்படியும், எல்லா விபரங்களையும் வெளிப்படையாக அறிவிக்கும் படியும் எப்.பி.ஐ. இயக்குநர் ஜேம்ஸ் காமேவை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம்' என தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## மகனின் கத்திக்குத்துக்கு இலக்காகிய தந்தை வைத்தியசாலையில் அனுமதி

மகனின் கத்திக்குத்துக்கு இலக்காகிய தந்தையொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம், பொகவந்தலாவை லொய்நோன் தோட்டத்தல் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தீபாவளித் தினமான சனிக்கிழமை, மது அருந்திய நிலையில் வீட்டுக்கு வந்த தந்தை, தனது தாயை தாக்கியதாகவும் தாயை காப்பற்ற முற்படுகையில் இவ்விபரீதச் சம்பவம் இடம்பெற்றதாகவும் மேற்படி இளைஞன் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்துள்ளான். இச்சம்பவத்தில் காயமடைந்த நபர் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-7)

## பட்டாசு வெடித்ததில் சிறுவன் படுகாயம்

பாதுகாப்பற்ற முறையில் பட்டாசுக்களை வெடிக்க வைத்த திம்புள்ளை - டெரிக்லயர் தோட்டத்தினை சேர்ந்த சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விபத்தில் 9 வயதுடைய சிறுவன் ஒருவனே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகினான்.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் நாவலப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மைத்திரியை கவிழ்க்க மகிந்தவின் விசுவாசி

அமைச்சர் பதவியை பெற்றிருந்தாலும் தான் இன்னும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனேயே இருப்பதாக பிரபல நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பதவி வகிக்கும் இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவரே இவ்வாறு கூறியுள்ளார்.

பொருத்தமான நேரத்தில் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைய தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். சுகவீனமாக இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரின் நலன் அறிய அவரது வீட்டுக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே குறித்த அமைச்சர் இதனை கூறியுள்ளார். (இ-7)


## பருத்தித்துறையில் பாரிய துறைமுகம்

பருத்தித்துறைக்கு அருகாமையில் பாரிய மீன்பிடித் துறைமுகம் ஒன்று நிர்மாணிக்கப்படவிருப்பதாக கடற்றொழில் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு மீனவர்களுக்காக இலவசமாக 150 வள்ளங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன் 50 வீத நிவாரணக் கடன் அடிப்படையில் கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.

கடற்றொழில் சமூகத்தினருக்கு இவ்வாறான நிவாரணம் 20 வருடங்களுக்குப் பின்னரே வழங்கப்படுவதாக அமைச்சர் கூறியுள்ளார். அத்தோடு கிழக்கு மாகாணத்தில் உள்ள கடற்றொழில் சமூகத்தினருக்கும் தேவையான வசதிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மண் சரிவினால் உயிர் நீத்த மக்களுக்கு நேற்று அஞ்சலி



கொஸ்லந்தை மீரியபெத்தை மக்களுக்கும் மலையக மக்களின் விடுதலைக்காக உயிர் நீத்த தியாகிகளுக்காகவும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஹட்டனில் நேற்று முன்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வை இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பெருந்தோட்ட சமூக மேம்பாட்டு திருப்பணியும் நீதிக்கும் சமாதானத்திற்குமான சர்வமத அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது அட்டன் டிக்கோயா நகர சபை முன்றலில் இருந்து நகரத்தின் மணிக்கூட்டுக் கோபுரம் வரை பிரதான வீதியில் பேரணி ஒன்றும் இடம்பெற்றது. (இ-7)









யாழ்ப்பாணம் YMCA நிறுவனத்தினால் 2015 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மாகாண மட்டத்தில் முதன்மைச் சித்தி, 2 ஆம் நிலை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி YMCA மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார கல்வி அமைச்சர் த.குருகுலராஜா. சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.







வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாநகர சபை பொது நூலக உத்தியோகத்தரின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலைகளான கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில் ஆரம்ப பாடசாலை, கொக்குவில் தமிழ்க்கலவன் ஆகிய பாடசாலைகளில் வாசிப்பு விழிப்புணர்வு நாடகம் அண்மையில் அரங்கேற்றப்பட்டது. (படங்கள்:-சோபிகா)





தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அபிவிருத்தி வேலைகளுக்காக 55 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய காசோலையினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கல்லூரி அதிபரிடம் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் வைத்து வழங்கி வைத்தார். கல்லூரியில் மூன்றுமாடி கட்டடத்தை அமைப்பதற்கு 50 மில்லியனும், பாடசாலைக்குரிய பேருந்து ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு 4 மில்லியனும், பாடசாலைக்குரிய தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக ஒரு மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தினால் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்திற்கு ஒருதொகுதி துணிவகைகள் மண்டைதீவு, ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.







கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திற்கு நெல்லியடி செலான் வங்கியினால் நூல் நிலையத்திற்கான புத்தகங்கள், கணனி வழங்கல், மாணவர் சந்தை என்பன அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், செலான் வங்கி வடபிராந்திய முகாமையாளர் எஸ்.சுரேஸ் சுப்ரம், நெல்லியடி செலான் வங்கி முகாமையாளர் எம்.குனேந்திரா, பாடசாலை அதிபர், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:கரணவாய் செய்தியாளர்)





வாழ்வக சிறுவர்களின் உணவுத்தேவைக்கென கோப்பாய் மத்தி கிராம சேவகர் நட்பு வட்டத்தினால் 32 ஆயிரம் ரூபாய் நிதி அன்பளிப்பாக நேற்று முன்தினம் சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டது. (படங்கள்:-பொ.சோபிகா)

# ஐ.நா.சபையிலிருந்து ரஷ்யா வெளியேற்றம்

## உறுப்பு நாடுகள் அதிரடி

(நியூயோர்க்)

**சிரியாவில் உள்நாட்டுப் போரை ஊக்குவித்து வருவதால் ஜெனிவா நகரை தலைமையிடமாக கொண்டு செயற்பட்டுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையிலிருந்து ரஷ்யாவை ஐ.நா. உறுப்பு நாடுகள் வெளியேற்றியுள்ளன.**

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையில் இடம்பெற்றுள்ள 47 நாடுகளில் 14 நாடுகளின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைவதால் இவ்வமைப்பின் புதிய உறுப்பினர்களை தேர்வு செய்யும் இரகசிய வாக்குப்பதிவு நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. சபை தலைமை நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற்றுள்ள 193 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். பிரேசில், சீனா, குரோஷியா, கியூபா, எகிப்து, ஹங்கேரி, ஈராக், ஜப்பான், ருவாண்டா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, துனிசியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்த தேர்தலில் வெற்றி பெற்று, 1-1-2017 முதல் செயற்படவுள்ள மனித உரிமை சபையில் இடம்பிடித்துள்ளன.

இந்த அமைப்பில் மீண்டும் இடம்பெறுவதற்காக ரஷ்யாவும் போட்டியிட்டது. கிழக்கு ஐரோப்பா கண்டத்தின் சார்பில் இடம்பெறுவதற்கான இரண்டு இருக்கைகளுக்காக ரஷ்யாவை எதிர்த்து குரோஷியாவும், ஹங்கேரியும் போட்டியிட்டன. இதில் ஹங்கேரிக்கு 144 வாக்குகளும், குரோஷியாவுக்கு 114 வாக்குகளும் கிடைத்தன.

இதனால், 112 வாக்குகளை பெற்ற ரஷ்யா, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையில் இருந்து வெளியேறும் சூழல் ஏற்பட்டுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதிக்கு ஆதரவாக உள்நாட்டுப்போரை ஊக்குவித்து வருவதால் ரஷ்யாவை ஆதரித்து பிறநாடுகள் வாக்களிக்கவில்லை என கருதப்படும் நிலையில், ஐ.நா.சபையின் மனித உரிமை கண்காணிப்பக இயக்குநர் லூயிஸ் சார்பேன்னேவ், இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மனித உரிமை சபையில் இடம் பெறுவதற்கான ரஷ்யாவின் முயற்சியை புறக்கணித்ததன் மூலம் சிரியாவில் அட்டூழியத்தில் ஈடுபட்டுவரும் ஆட்சியை ஆதரிக்கும் ரஷ்யாவுக்கு ஐ.நா.சபையின் உறுப்பு நாடுகள் சரியான பாடம் கற்பித்துள்ளன' என தெரிவித்துள்ளார். (இ-7)

# சிறைச்சாலை மீது குண்டுத்தாக்குதல்

## 33 பேர் உயிரிழப்பு



ஏமன் நாட்டில் உள்ள ஹொடைடா நகரச் சிறையின் மீது அராபிய கூட்டுப் படைகள் நடத்திய விமான தாக்குதலில் 33 பேர் பலியாகினர்.

ஈரான் அரசின் ஆதரவு பெற்ற ஹவுதி இனப் போராளிகள் ஏமன் நாட்டில் நடைபெற்றுவந்த ஜனாதிபதி அப்த்-ரப்பு மன்சூர் ஹாதியின் ஆட்சிக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டதையடுத்து, கடந்த 2014 ஆம் ஆண்டு அவர் பதவியில் இருந்து விரட்டப்பட்டார்.

அவரை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்காக சவுதி அரேபியா தலைமையிலான அராபிய கூட்டுப்படைகள் ஹவுதி இனப் போராளிகள் மீது கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அவ்வகையில், அல்-ஜைதியா மாநிலத்தில் உள்ள ஹொடைடா நகரச் சிறையின் மீது அராபிய கூட்டுப் படைகள் நேற்று முன்தினம் மாலை நடத்திய விமான தாக்குதலில் 33 பேர் பலியானதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)




# ஜனாதிபதியை பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்





தென்கொரிய ஜனாதிபதி பார்க் கெய்ன்-ஹையை உடனடியாக பதவி விலகுமாறு வலியுறுத்தி, தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆயிரக்கணக்கானோர் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

உத்தியோகபூர்வ ஆவணங்களை தனது நெருங்கிய நண்பருக்கு வழங்கியமை மற்றும் தனது முக்கிய மாநில விவகாரங்களில் தலையிட அனுமதித்தமை முதலிய குற்றச்சாட்டுக்கள் பார்க் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மக்களின் நம்பிக்கைத் துரோகி மற்றும் நிர்வாகத் திறமை அற்றவர் முதலிய அவப்பெயர்களும் பார்க்கிற்கு கிடைத்துள்ளன.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை தனது அமைச்சரவையில் அங்கம் வகித்த 10 சிரேஷ்ட செயலாளர்களை பதவி நீக்கம் செய்ய பார்க் உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையிலேயே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு, இதில் சுமார் 8 ஆயிரம் பேர்வரை கலந்து கொண்டதாக ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த சிவில் அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்நிலையில் இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் மக்களின் இத்தகைய ஆர்ப்பாட்டம், பார்க்கிற்கு மேலும் நெருக்கடி நிலையைத்தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

## நைஜீரியாவில் பெண் தீவிரவாதிகள் மனித குண்டுத் தாக்குதல் - 8 பேர்பலி

நைஜீரியாவில் பெண் தீவிரவாதிகள் நடத்திய மனித குண்டுத் தாக்குதலில் 8 பேர் பலியாகினர்.

நைஜீரியாவில் கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் 'போகோஹராம்' தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் வட கிழக்கு நகரமான மைதுகுரியில் பெண் தீவிரவாதிகள் 2 இடங்களில் தற்கொலை தாக்குதல்களை நடத்தினர்.

முதலாவதாக காலை 6 மணிக்கு மைதுகுரி அருகேயுள்ள பகாசி இராணுவ முகாம் பகுதிக்கு மோட்டார் பொருந்திய ரிக்‌ஷாவில் சென்ற ஒரு பெண் தீவிரவாதி தன் உடலில் இந்த குண்டை வெடிக்கச் செய்தாள்.

இதில் அங்கிருந்த 5 இராணுவ வீரர்கள் பலியானார்கள். 11 பேர் படுகாயம் அடைந்தனர். இச்சம்பவம் நடந்த 30 நிமிடத்தில் ஒரு பெற்றோல் பங்க் அருகே மோட்டார் பொருந்திய ரிக்‌ஷாவில் சென்ற பெண் தீவிரவாதி குண்டை வெடிக்க வைத்தாள்.

இத்தாக்குதலில் 3 பேர் பலியாகினர். 17 பேர் காயம் அடைந்தனர். இந்த 2 சம்பவங்களிலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 28 பேர் காயம் அடைந்துள்ளனர். (இ-7)

## ஐ.நா.சபையில் தீபாவளிக் கொண்டாட்டம் பொதுச்செயலர் உட்பட 1000பேர் பங்கேற்பு

தீபாவளி பண்டிகை ஐக்கிய நாடுகள் சபையில் தடபுடலான விருந்துடன் எழுச்சியாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமான சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்றனர்.

அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகத்தின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தீபங்கள் மற்றும் மின்விளக்கு அலங்காரத்தில் ஐ.நா. சபை வளாகம் வண்ணமயமாகக் காட்சி அளித்தது.

ஐ.நாவுக்கான இந்திய தூதர் ஹர்தீப் சிங் பூரி ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த தூதர்கள், அமெரிக்க அரச அதிகாரிகள் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கொடியுடன் நடனக் கலைஞர்கள் பிரபல இந்திப் பாடல்களுக்கு நடனமாடி விருந்தினர்களை மகிழ்வித்தனர்.




மலர்களால் வரையப்பட்ட வண்ணமயமான கோலங்கள் மற்றும் தீப ஒளியால் அலங்கரிக்கப்பட்டிருந்த விருந்து மண்டபத்தில் இந்தியாவின் பல மாநிலங்களில் மிகவும் பிரசித்தியான சைவ-அசைவு உணவு வகைகள் மற்றும் இனிப்பு வகைகளை விருந்தினர்கள் ருசித்து மகிழ்ந்தனர். (இ-7)

# ஆர்ஜென்டீனாவில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்








(கோர்டோவா)

ஆர்ஜென்டீனாவின் 2017 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறைக்கான நிதிவெட்டுக்களுக்கு எதிராக நூற்றுக்கணக்கான ஆர்ஜென்டீன விஞ்ஞானிகள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆராய்ச்சி நிதியை பாதிக்கும் உத்தேச வரவு செலவுத் திட்டத்திற்கு எதிரான சுவரொட்டிகளை தாங்கியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் உத்தேச வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக குரலெழுப்பினர்.

இதன்போது கருத்து தெரிவித்த அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விசாரணைகள் தேசிய சபையின் புலன் விசாரணையாளர், 'பரந்துபட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கு பாரியளவு நிதிவெட்டு இடம்பெற்றுள்ளது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் குறிப்பிட்ட நிலைகளில் 400 மில்லியன் டொலர்கள் வெட்டு ஏற்பட்டுள்ளது. இதில் 32 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. பொதுவாக அடிப்படை நிலைக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. புதிய ஆராய்ச்சி திட்டங்களை ஆரம்பிக்க முடியாததாகிவிடும்' என்று கவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் இந்த நிதிக் குறைப்புக்கள் அறிவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதை தூண்டக்கூடும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அறிவியல் மாணவர்கள் மற்றும் இளம் ஆராய்ச்சியாளர்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.

ஆர்ஜென்டீனாவின் நியோகுவாரோ, ரொசாரியோ, பரிலோச்சி, சான் லூயிஸ், மென்டோசா, சான் யுவான் மற்றும் மார்டெல்ப்லாடா ஆகிய பகுதிகளில் ஒரே நேரத்தில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆர்ஜென்டீன ஜனாதிபதி மயூரிசியோ மாக்ரி பதவிக்கு வந்ததில் இருந்து, பொருளாதார சீர்திருத்தங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. அறிவியல் வெட்டுக்கள், பொது வேலைவாய்ப்புக்களின் வெட்டுக்கள், சுதந்திர சந்தை சீர் திருத்தங்கள் என பல மாற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சுதந்திர சந்தை கொள்கை முதலீட்டை துரிதப்படுத்துவதுடன் மந்தமான பொருளாதாரத்தை சீராக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாக உள்ளது. எனினும் இதன் முடிவாக வேலை வாய்ப்பு குறைவு மற்றும் விலைவாசி அதிகரிப்புக்களிடையே குடும்பங்கள் அழுத்தப்படுகின்றன.

எனவே 2017 ஆம் ஆண்டு உத்தேச வரவு செலவுத்திட்டத்தை செனட் சபை மற்றும் பிரதிநிதிகள் அங்கீகரிக்க கூடாது என ஆயிரக்கணக்கானோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# எந்த விதத்திலும் நியாயம் இல்லை

## பாகிஸ்தானுக்கு இந்தியா கண்டனம்

(டில்லி)

இந்திய தூதரக அதிகாரியை நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டது எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்று பாகிஸ்தானுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்தியாவில் உளவு பார்த்ததாக டில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் வேலை பார்த்து வந்த மெகமூத் அக்தர் பிடிபட்டார். அவரிடம் இருந்து உளவு பார்த்தது தொடர்பான முக்கிய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து அவரை உடனடியாக இந்தியாவில் இருந்து வெளியேறுமாறு மத்திய அரசு உத்தரவிட்டது. இதற்கு பதில் நடவடிக்கையாக இஸ்லாமாபாத்தில் உள்ள பாகிஸ்தானுக்கான இந்திய தூதரக அதிகாரி சுர்ஜித் சிங்கையும் அவருடைய குடும்பத்தினரையும் 48 மணி நேரத்தில் நாட்டில் இருந்து வெளியேறும்படி பாகிஸ்தான் உத்தரவிட்டது. அவர் தூதரக விதிமுறைகளை மீறியதாக இதற்கு பாகிஸ்தான் காரணம் கூறியது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டு உள்ள கண்டன அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது.

இந்திய தூதரக அதிகாரியை வெளியேற்றிய பாகிஸ்தான் அரசின் நடவடிக்கையை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

அவர்(சுர்ஜித் சிங்) தூதரக விதிமுறைகளை மீறியதாக கூறியிருப்பது முழுக்க முழுக்க அடிப்படையற்றது. இந்த குற்றச்சாட்டுக்கு எந்த வித ஆதாரமும் கிடையாது.

இதுபோன்ற சாதாரண காரணங்கள் தவிர வேறு எதையும் பாகிஸ்தானால் கூற இயலாது.

பாகிஸ்தான் எடுத்துள்ள இந்த நடவடிக்கையை இந்திய அரசு கண்டிக்கிறது. இந்தியாவில் பயங்கரவாதத்தை தூண்டிவிடும் விதமாக உளவு பார்த்து சிக்கிய பாகிஸ்தான் தூதரக அதிகாரி மெகமூத் அக்தர் மீது இந்தியா எடுத்த நடவடிக்கைக்கு பின்பே பதிலுக்கு பாகிஸ்தான் இதை எடுத்து இருக்கிறது.

பாகிஸ்தானின் இதுபோன்ற செயல்கள் எல்லை தாண்டிய பயங்கரவாதம் உள்ளிட்ட இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக பாகிஸ்தான் செயற்பட மறுப்பதை உறுதி செய்வதாகவும் அமைந்து இருக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# இந்திய நாடாளுமன்றில் அகதிகளுக்கு புகலிடம் அளிக்கும் சட்ட மூலம்

அகதிகளுக்குப் புகலிடம் அளிப்பது தொடர்பான சட்ட மூலம் இந்திய நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படும் என்று டில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகதிகள் சட்ட மூலம், 2015 ஆம் ஆண்டு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சசி தாரூரால், தனிநபர் பிரேரணையாக முன்வைக்கப் பட்டது. இந்தச் சட்டமூலம் எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்திய நாடாளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டத் தொடரில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அகதிகள் மற்றும் புகலிடம் தேடி வருவோரை ஒரு பொருத்தமான சட்ட வரையறைகளுக்குள் காத்திரமான முறையில் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு இந்தச் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. பெருமளவு அகதிகளை கொண்டுள்ள இந்தியா, அடைக்கலம் கோருவோர் பிரச்சினை தொடர்பான ஒரு தெளிவான சட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, புதிதாக கொண்டு வரப்படவுள்ள சட்ட மூலத்தின் கீழ், அடைக்கலம் கோருவோரின் விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும். இதன் கீழ் தலைமை ஆணையாளர் மற்றும் ஆறுக்கும் குறைவாக ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் 2 இலட்சத்து ஆயிரத்து 281 அகதிகளும் 6 ஆயிரத்து 480 புகலிடக் கோரிக்கையாளர்களும் தங்கியிருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா. முகவரமைப்பு தெரிவித்திருந்தது.

தெற்காசியாவில் அதிகளவு அகதிகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக விளங்கும் இந்தியாவில் இலங்கை, திபெத், பங்களாதேஷ், ஆப்கானிஸ் தான் அகதிகள் அதிகளவில் வாழ்கின்றனர். இந்தியாவில் முறைசார் அகதிக் கொள்கை இதுவரை இல்லாத நிலையில், அகதிகளின் விண்ணப்பத்தின் அடிப்படையில் அடைக்கலம் வழங்க இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது (இ-7-10)

# ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல்;4 பேர் பலி!

ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஷியா முஸ்லிம்களை குறிவைத்து ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் நான்குபேர் உயிரிழந்தனர்.

பக்தாத்தில் உள்ள இஸ்கான் பகுதியில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் உணவு மற்றும் தண்ணீர் வழங்கி கொண்டிருந்தனர். அந்த இடத்தை குறிவைத்து நேற்று க்காலை ஐ.எஸ். தீவிரவாதிகள் குண்டு வெடிப்பை நடத்தினர். இதில் நான்கு பேர் பலியானார்கள். 16 பேர் காயம் அடைந்துள்ளனர். (இ-7)

# கந்தசஷ்டி விரதாரம்பம் இன்று

இலங்கைத்தீவில் தமிழர்கள் பெரும்பான்மையாக செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்துக்களில் பெரும்பான்மையினரால் முருகன், பிள்ளையார் ஆலயங்களில் துர்முகி வருஷ 2016 ஆம் ஆண்டிற்குரிய கந்தசஷ்டி விரதாரம்பம் (31.10. 2016) ஐப்பசி 15 ஆம் திகதி திங்கட்கிழமை சுவாதி நட்சத்திரமும் பிரதமை திதியும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் மிகவும் பக்தி பூர்வமாகவும் இனிதாகவும் எளிதாகவும் ஆரம்பமாகின்றது. கலியுகத்தின் கண்கண்ட தெய்வமெனப் போற்றப்படும் கந்தவேள் பெருமானை வேண்டி நோற்கப்படும் விரதமே இக்கந்தசஷ்டி விரதமாகும்.

மனம் பொறிகளின் வழி போகாது தடுக்கும் பொருட்டு உணவை சுருக்கியேனும் அல்லது முற்றாக விடுத்தேனும் திரிகரண சக்தியினால் இறைவனை தூய அன்பினால் வழிபடுவதே இவ்விரதத்தின் சிறப்பாகும். எந்த விரதத்தையாவது விரதம் அனுஷ்டிப்பவர்கள் சங்கற்பபூர்வமாக முறைப்படி அனுஷ்டிப்பதால் தேகசுத்தி, நோயற்ற வாழ்வு, மனத்தூய்மை, பாவ நீக்கம் ஆகிய நிறைந்த நன்மைகள் உண்டாகுமென சைவ சமய சிந்தாமணி என்னும் நூலில் சைவப் புலவர் மிகத் தெளிவாகக் கூறி உள்ளார். இந்து சமயத்தில் விரதங்கள், பல இருப்பதாக ஆய்வுகள் மூலம் அறியப்பட்டாலும் விநாயக, சுப்பிரமணிய, வைரவ, வீரபத்திர, மகா விஷ்ணு விரதங்களுடன் சனிக்கிரக, பிதிர் விரதங்களும் இன்னும் பல விரதங்களும் உள்ளன.

புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் இந்துக்கள் அனுஷ்டிக்கின்ற விரதங்களில் புரட்டாதிச்சனி விரதம், நவராத்திரி கும்ப விரதம், கேதார நாதரை நோக்கி கௌரி அம்பாள் அனுஷ்டித்த சிவன் விரதமான கேதார கௌரி விரதம் என்பன குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில் புரட்டாதிச் சனி விரதமும் நவராத்திரி கும்ப மகாநவமி விரதமும் கேதார கௌரி விரதமும் நிறைவுற்று கந்த சஷ்டி விரதம் ஆரம்பிக்கின்ற காலமிது. யாமிருக்கப் பயமேன்? என்று அபயக்கரம் காட்டி தன்னை வழிபடும் அடியவர்களின் துன்ப, துயரங்கள் போக்கி வேண்டுவார் வேண்டும் வரங்களை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கும் அந்த அழகே வடிவான முருகன் நல்லூரிலே அலங்காரக் கந்தன் என்றும் சந்நிதியிலே அன்னதானக் கந்தன் என்றும் மாவிட்டபுரத்திலே அபிஷேகக் கந்தனென்றும் கதிர்காமத்திலே காவடிக் கந்தனென்றும் புனைபெயர்களால் போற்றப்படும் கந்தவேளின் புனித விரத நன்நாளே இக் கந்தசஷ்டி விரமாகும்.

இவ்விரதம் ஐப்பசி மாதம் வளர்பிறை திதி பிரதமை முதல் சஷ்டி வரை (முடிய) ஆறு தினங்களும் அனுஷ்டிக்க வேண்டும். அந்த வகையில் 5.10. 2016 சனிக்கிழமை இவ் விரதம் நிறைவிற்கு வருகின்றது. கந்தப் பெருமானை வேண்டி அனுஷ்டிக்கும் விரதங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த விரதங்களாக நம் முன்னோர்கள் கடைப்பிடித்த விரதம் இக் கந்தசஷ்டி விரதமாகும். இந்த விரதத்தினை ஆறு வருடங்கள் அல்லது 12 வருடங்கள் அனுஷ்டிப்பது விரத முடிவில் விரத உத்யாபனம் செய்து நிறைவு செய்வதுமே சரியானது என இந்து சமய வரலாற்று நூல்கள் கூறுகின்றன. சோறு உணவு நிறைவான விரதத்திற்கு ஏற்றது அல்ல. எல்லா முறையிலும் விரதமனுஷ்டித்தவர்கள் எப்படியாயினும் சஷ்டி திதி அன்று எந்தவித ஆகாரமுமின்றி உபவாசம் இருத்தல் இவ்விரதத்தின் மிக முக்கிய நியதியாகும். ஸ்கந்த பஞ்சமியில் அருந்தி கந்தசஷ்டியில் உபவாசமிருந்து ஸப்தமி திதியில்பாறணை செய்ய வேண்டும். இதுவே இவ்விரதத்தின் முக்கிய நியதியாகும். இப்படி முறையாக விரதத்தை அனுஷ்டித்தவர்கள் முருகப் பெருமானது கருணையைப் பெறுவார்களென்பது திண்ணம்.

அந்த வகையில் கந்தசஷ்டி விரதத்தை பொறுத்த வரையில் உபவாசம் இருப்பது உத்தமம். அதனை அனுஷ்டிக்க இயலாதவர்கள் பகல் நீங்கிய பின் முருகப்பெருமானை தரிசனம் செய்து இரவில் தீர்த்தம், இளநீர், நீர் முதலியவற்றில் ஏதாவது ஒன்றை உட்கொள்ளலாம். பகல் பொழுதைத் கழித்து முருக வழிபாடு செய்து இரவில் ஏதேனும் ஒரு வகைப் பழங்களை குறைவாக உண்ணலாம்.



இது மத்திமம். இவ்வகை விரதம் அனுஷ்டிப்போர் விரதத்திற்கு முதல் நாள் ஒரு பொழுது உணவும் அன்றிரவு சிறிதளவு பலகார வகையும் உண்ணலாம் என சைவ சமய சிந்தாமணி நூல் விரதத்தின் மகிமை பற்றி மிகத் தெளிவாக கூறுகின்றது. விரத காலங்கள் தவக்காலமாக நோக்கப்படுவது மிக முக்கியமாகும்.

கந்தப்பெருமானது மகிமையை எடுத்துக் கூறும் கந்தபுராணப் படிப்பு அதற்குப் பயன்சொல்லும் நிகழ்வும் இவ் விரத காலங்களில் முருகன் கோவில்களில் இடம்பெறுவது இவ்விரதத்தின் சிறப்பு அம்சமாகும். சூரனைப் போரில் வென்று தேவர் சிறைமீட்ட அந்த கடவுளை இந்த விரத நன்நாளில் வணங்கி இவ்விரதத்தினை அனுஷ்டிக்கும் இந்து மக்கள் அனைவரும் இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்ந்து சகல சௌபாக்கியங்களையும் பெற அந்த கந்தக்கடவுள் அருள் பாலிப்பாராக.

கலாவித்தகர்
திருமதி. மலர்விழி கனகசபை
உதவிக்கல்விப்பணிப்பாளர் (அழகியல்)
தீவக கல்வி வலயம் வேலணை.

# APK மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் 2-ம் திகதி ஹொங்கொங்கிற்கு பயணம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாரம் ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள 15 ஆவது ஜேர்மன். ஆசியா பசுபிக் மாநாட்டில் (APK) கலந்துகொள்ளவுள்ளார்.

அடுத்த மாதம் 03 ஆம் திகதி முதல் 05 ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது. இதற்காக வேண்டி பிரதமர் நாளை மறுதினம் 02 ஆம் திகதி ஹொங்கொங் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# 12விமான சேவைகள் நேற்று முதல் ஆரம்பம்

இலங்கையில் புதிதாக 12 விமான சேவைகளை நேற்று முதல் முன்னெடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த 12 விமான சேவைகளும் மிஹின் லங்கா நிறுவனத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வந்தன. எனினும் மிஹின் லங்கா விமான சேவைகளை ஸ்ரீலங்கா விமான சேவைகளுக்கு கீழ் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மிஹின் லங்கா நிறுவனம் நடத்திய சேவைகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன.

இந்நிலையில் மிஹின் லங்கா நிறுவனம் நடத்தி வந்த ஸீஸெல். மஸ்கட். பஹ்ரேன். டாக்கா. சென்னை மற்றும் கல்கத்தா உள்ளிட்ட 12 நகரங்களுக்கான விமான சேவைகளை நேற்று முதல் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தினூடாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.(இ-7)

# மத்திய வங்கி முறி முறைகேட்டுக்கு உரிய சட்ட நடவடிக்கை வேண்டும்

## மகிந்த அமரவீர வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முறி கொடுக்கல்-வாங்கலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடியுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளதாக அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்கொண்டு வந்து தண்டிப்பது மட்டுமன்றி. அவர்களிடம் காணப்படும் நிதியை அரசாங்கம் மீளவும் பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு எனவும் அமைச்சர் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் தெரிவித்தார். (இ-7)

# எட்கா மூலம் இலங்கைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை

## பேராசிரியர் ரொஹான் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை -இந்திய பொருளாதார தொழில்நுட்ப உடன்படிக்கையான எட்காவின் மூலம் இலங்கைக்கு பாதிப்புக்கள் இல்லை என்று பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தெரிவித்துள்ளார்.

எட்கா உடன்படிக்கை தொடர்பிலான அரசாங்கத்தின் கூட்டு ஆய்வுக்குழுவின் உறுப்பினராக செயற்படும் பேராசிரியர், ஆங்கில செய்தித்தாள் ஒன்றுக்கு இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

எட்கா உடன்படிக்கை காரணமாக, இந்தியாவின் பணியாளர்கள் இலங்கையின் தொழில் சந்தைக்கு வருவார்கள் என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ள அவர், இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்டத்தில் உள்ள அம்சங்களில் எட்கா தாக்கம் செலுத்தாமையால், இந்திய பணியாளர்கள் இலங்கையின் தொழில் சந்தைக்கு உள்வாங்கப்படுவார்கள் என்ற கருத்து பொருந்தாது என்றும் தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் எட்காவில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

எட்கா இலங்கையின் தொழில்வாய்ப்புகளை கொண்டு செல்லாது. எனினும் போட்டித் தன்மையை அதிகரிக்கும் என்று சமரஜீவ குறிப்பிட்டுள்ளார்.

இந்த உடன்படிக்கையின் மூலம் இந்தியாவின் தொழில்சார் நிபுணர்களுக்கு இலங்கையில் இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் மாத்திரமே அவ்வாறான ஏற்பாடு உள்ளது என்று சமரஜீவ சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே இலங்கையின் சமூக மற்றும் கலாசாரத்தை பொறுத்த வரையில் பல மாற்றங்கள் உணரப்பட்டுள்ளன.

எனவே எட்காவின் மூலம் தான், கலாசாரத்தில் மாற்றம் ஏற்படும் என்பதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெறும் நோக்கிலேயே இந்தியா இவ்வாறான உடன்படிக்கைகளை இலங்கை உட்பட அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் செய்து கொள்ள முனைகிறது என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டிள்ளார்.

எட்காவை பொறுத்த வரை, அது இலங்கைக்கு அதிக முதலீடுகளை கொண்டு வரும் என்றும் சமரஜீவ குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை பொறுத்த வரையில் தொழில்வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டுமெனில் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும்.

உலக பொருளாதாரத்துடன் இணைப்பை கொண்டிருக்க வேண்டும். எனவே இலங்கை முதலீடுகள் மற்றும் சேவைகள் தொடர்பான பல உடன்படிக்கைகளை செய்து கொள்ள வேண்டும் என்றும் சமரஜீவ ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ...லாமா... டுமா?

உங்கள் பேனாவை உபயோகப்படுத்திக் கொள்ளலாமா?

உங்கள் பொருளைக் கொஞ்சம் நகர்த்திக் கொள்ளட்டுமா?

மிக நெருங்கியவர்களைத் தவிர பிறர் எவரிடமும் எதையும் இப்படிக் கேட்டே செயற்படுவது நல்லது.

எல்லாரையும் மிக நெருக்கமானவர்கள் என்று நாமாகக் கற்பனை செய்து கொண்டு நாம் எடுத்துக் கொள்ளும் உரிமை இருக்கிறதே, அது தவறான பொருளைக் கொடுத்துவிடும். கொஞ்சங் கூடப் பண்பு தெரியாத ஆள் என்கிற அவப்பெயர்தான் மிஞ்சும். வேறு சிலரோ, இன்னும் ஒரு நிலையைக் கடந்து , எரிச்சல் அடைந்து , நம் மீது வள்ளென்று விழுவார்கள்.

சிலர் இருக்கிறார்கள் வீட்டினுள் நுழைந்து அமர்ந்த கொஞ்ச நேரத்திலெல்லாம் என்னவோ தானே பில் கட்டுகிற மாதிரி, எவரையும் கேட்காமல் , எவரைப் பற்றியும் கவலை கொள்ளாமல் தொலை பேசியைத் தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டு சுற்று சுற்று என்று சுற்ற ஆரம்பித்து விடுவார்கள். சமயங்களில் வெளியூர்களுக்குப் பேசக் கூட அனுமதி கேட்க மாட்டார்கள். உள்ளூர் என்றே வைத்துக் கொள்வோம். கேவலம் ஒரே ரூபாய் தானே என்று தொலை பேசியில் சொந்தக்காரர் நினைக்க மாட்டார்.

என்னடா இந்த மனுசன் -வந்தான்- மடியில் எடுத்து வைத்துக் கொண்டு -வீட்டுக் காரன் நான் குத்துக் கல்லாட்டம் இருக்கேன்- ஒரு மரியாதைக்குக் கூட ஒரு வார்த்தை கேட்கலையே! என்று நினைப்பார் . சம்பந்தப்பட்டவரிடம் சொல்ல வாய் வராது. நட்பு தடுக்கும். வீணாக ஒருவர் மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்று சும்மா இருப்பார். இரண்டு, மூன்று தரம் பார்ப்பார். அதன் பிறகு அந்த ஆசாமி நுழைந்ததும் இவர் உள்ளே போய்க் கையோடு பூட்டை எடுத்து வந்து பூட்டி விடுவார். இதை விடக் கேவலம் வேறு உண்டா?

ஆனால் ஒரு போன் பண்ணிக்கலாமா? என்று கேட்டுவிட்டாலோ, என்னங்க இது ? ரொம்பத்தான் பார்மாலிட்டி எல்லாம் பார்த்துக்கிட்டு? இது உங்க போன் மாதிரி - நல்லாப் பண்ணிக்குங்க என்று இதயக் கதவைப் படுதாராளமாகத் திறந்து விடுவார். மேற்கொண்டு ஏன் அப்படிக் கேட்டீர்கள் என்று போலியாகக் கோபம் கொண்டாலும் உள்ளுக்குள் மகிழ்ச்சி கொள்வார்.

எதையும் இப்படிக் கேட்டுச் செய்யும் போது ஒரு கூடுதல் சௌகரியம் இருக்கிறது.

அதாவது-

அவர்கள் தங்களது சம்மதத்தைத் தெரிவிக்கும் போது அதை மனப்பூர்வமாகத் தெரிவிக்கிறார்களா? அரைகுறை மனத்துடன் தெரிவிக்கின்றார்களா? வேண்டா வெறுப்பாக தெரிவிக்கிறார்களா? என்பதையெல்லாம் மதிப்பீடு செய்து நாமே கண்டு பிடித்துவிட முடியும்.

எனக்கு வெளியூருக்கு ஒரு டிக்கெட்டுக் செய்து தந்து உதவலாமா? என ஒருவர் கேட்கிறார் என்றால், உங்களுக்குச் செய்யாமல் யாருக்குச் செய்யப் போகிறேன்? என்பதற்கும் நல்லா வாங்கித் தர்றேன் என்பதற்கும் கிடைக்கிறதா பார்க்கிறேன் என்பதற்கும் நமக்கா வேறுபடுத்தி மதிப்புப் போடத் தெரியாது?

எவ்வளவு நெருக்கமானவர்களிடமும் உதவிகளைக் கேள்விக் குறியோடு கேட்டுச் செய்து கொள்வது நல்லது.

இல்லாவிட்டால் மிக வேண்டியவர்கள் கூட அவ்வுதவிகளைத் தங்களுக்கு இடப்பட்ட கட்டளைகள் என்று எண்ணி வருத்தப்படுவார்கள். எரிச்சல் அடைவார்கள்.

தங்களுக்குக் காரியம் ஆக வேண்டும் என்று எண்ணுபவர்கள் இவ்வுண்மைகளை மனத்தில் நிறுத்துவது நல்லது.

**லேனா தமிழ்வாணன்**





# பூனைகளைச் சிறைப்படுத்திய எலிகள்!

பூனைகள் இல்லா உலகில் யாருக்குக் கொண்டாட்டம்? சொல்லவும் வேணுமா? நிச்சயம் எலிகளுக்குத்தான். பூனைகள் இல்லாத ஊர் இந்த உலகில் இருக்குமா? இருக்கிறதே. நளினப்பட்டி என்ற ஊரில் பூனைகளே இல்லை.

இந்தத் தகவலைப் பல நாடுகளில் உள்ள எலிகளுக்கும் கடிதம் மூலம் தெரிவித்தன நளினப்பட்டியில் உள்ள தலைமை எலிகள். "அப்படியா?" என ஆச்சரியப்பட்டு அந்த ஊரைக்காண ஆப்பிரிக்காவில் இருந்து குலி, மாலி என்ற இரண்டு எலிகள் விமானம் மூலம் நளினப்பட்டிக்கு வந்தன. விருந்தாளி எலிகளுக்குத் தடல்புடலாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அனைவருக்கும் சிறப்பு விருந்து பரிமாறப்பட்டது.

ஒரு பாழடைந்த கோட்டை தான் எலிகளின் கோட்டை. விருந்தாளி எலிகளும் அங்கு தங்க வைக்கப்பட்டன.



"இந்த ஊரில் பூனைகள் இல்லை என்பதை நாங்கள் எப்படி நம்புவது?" என குலி எலி கேட்டது.

"சந்தேகம் இருந்தால், நீங்கள் ஊரைச் சுற்றிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்" என்று நளினப்பட்டி எலி தலைவர் பதில் கூறியது.

"அப்படியென்றால் இன்று இரவே நாங்கள் சோதனைக்குத் தயார்" என இரு எலிகளும் உற்சாகமாயின.

இரவில் இரு ஆபிரிக்க எலிகளும் சோதனைக்குப் புறப்பட்டன. தெருத் தெருவாகச் சுற்றின. சந்து பொந்துகளில் எல்லாம் எலிகள் ஏறி இறங்கிப் பார்த்தன. அட! எங்குமே பூனைகள் தென்படவில்லை. அவைகளுக்கு வெகு ஆச்சரியம்.

"இந்த ஊரில் பூனைகள் இல்லைதான்" என்று இரு எலிகளும் பேசிக் கொண்டன.

ஊர்க்கோடியில் ஒரு பாழடைந்த மலைக்கோயில் ஒன்று உள்ளது. அங்கு மட்டும் ஆபிரிக்க எலிகள் போவதற்கு, நளினப்பட்டி எலிகள் தடை விதித்திருந்தன. அப்போதுதான் குலி எலிக்கு ஞாபகம் வந்தது.

"அந்த மலைக்கோயிலுக்குச் செல்லக் கூடாது என ஏன் உள்ளூர் எலிகள் தடை விதித்தன? எனக் குலி எலி, மாலி எலியைப் பார்த்துக் கேட்டது.

"ஆமாம், ஏன் அப்படிக் கூறின? நாம் அங்கு பரிசோதிக்காமல் ஒரு முடிவுக்கு வர முடியாதே?" என மாலி எலியும் கேள்வி எழுப்பியது.

அப்போதே இரு ஆபிரிக்க எலிகளும் மலைக் கோயிலுக்குச் செல்வது என முடிவு செய்தன. பொழுது விடிந்தது. நகர் வேட்டைக்குச் சென்று வந்த எல்லா எலிகளும் பகலில் ஓய்வெடுக்கச் சென்றன. அனைத்து எலிகளும் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தன.

"இதுதான் சரியான சமயம். நாம் மலைக்கோயிலுக்குச் சென்று வந்துவிடலாம்" எனக் கூறியபடி ஆபிரிக்க எலிகள் கிளம்பின. மலைக் கோயிலுக்குள் நுழைந்ததும் கோயிலின் வாசலைத் தேடின எலிகள். கொஞ்ச தூரத்தில் வாசல் தென்பட்டது.

ஆனால், அது உள்ளே பூட்டப்பட்டிருந்தது. வெளியே கதவைத் திறக்க முடியாதபடி கற்கள் கொட்டப்பட்டிருந்தன. (தொடரும்)




- 1876 - இந்தியாவின் கிழக்குக் கரையில் இடம்பெற்ற மிகப்பெரும் சூறாவளி காரணமாக 200,000 பேர் வரை இறந்தனர்.
- 1913 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது நெடுஞ்சாலை லிங்கன் நெடுஞ்சாலை திறக்கப்பட்டது.
- 1924 - உலக சேமிப்பு நாள் இத்தாலியின் மிலான் நகரில் சேமிப்பு வங்கிகளின் உலக அமைப்பினால் அறிவிக்கப்பட்டது.
- 1931 - தமிழின் முதல் பேசும் படம் காளிதாஸ் வெளியானது.
- 1941 - இங்கிலாந்தில் தொழிற்சாலை ஒன்று தீப்பற்றியதில் 49 பேர் கொல்லப்பட்டனர்.
- 1954 - அல்ஜீரியாவில் பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கெதிராக அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி போராட்டத்தை ஆரம்பித்தது.
- 1956 - ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் சூயஸ் கால்வாயைத் திறக்க வற்புறுத்தி எகிப்தின் மீது குண்டுகளை வீசின.
- 1961 - ஸ்டாலினின் உடல் மொஸ்கோவில் உள்ள லெனினின் நினைவகத்தில் இருந்து அகற்றப்பட்டது.
- 1969 - வோல் மார்ட் தொடங்கப்பட்டது.
- 1973 - அயர்லாந்தில் டப்ளின் நகர சிறை ஒன்றில் இருந்து மூன்று ஐரிய குடியரசு இராணுவத்தினர் அங்கு தரையிறங்கிய கடத்தப்பட்ட உலங்கு வானூர்தி ஒன்றில் தப்பி வெளியேறினர்.
- 1984 - இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இரண்டு சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் பின்னர் புதுடில்லியில் இடம்பெற்ற கலவரத்தில் சுமார் 2000 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.
- 1994 - அமெரிக்க விமானம் ஒன்று கடும் பனி காரணமாக இண்டியானாவில் விபத்துக்குள்ளாகியதில் 68 பேர் கொல்லப்பட்டனர்.
- 2000 - சிங்கப்பூர் போயிங் 747-400 விமானம் தாய்வானில் விபத்துக்குள்ளாகியதில் 83 பேர் கொல்லப்பட்டனர்.
- 2000 - வடக்கு அங்கோலாவில் தனியார் அன்டோனோவ் விமானம் வெடித்துச் சிதறியதில் 50 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003 - 22 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் மலேசியப் பிரதம மந்திரி மகதிர் பின் முகமது தமது பதவியைத் துறந்தார்.

பிறப்புகள்

- 1632 - யொஹான்னெஸ் வெர்மீர், டச்சு ஓவியர். (இ. 1675)
- 1795 - ஜோன் கீற்ஸ், ஆங்கிலேய-இத்தாலிய கவிஞர். (இ. 1821)
- 1815 - கார்ல் வியர்ஸ்ட்ராஸ், ஜேர்மானியக் கணிதவியலாளர். (இ. 1897)
- 1875 - வல்லபாய் பட்டேல், இந்திய அரசியல்வாதி, விடுதலைப் போராட்ட வீரர். (இ.1950)
- 1887 - சங்கை செக், சீனக் குடியரசின் 1வது அரசுத்தலைவர். (இ. 1975)
- 1918 - இயான் ஸ்டீவன்சன், அமெரிக்க உளவியலாளர். (இ. 2007)
- 1922 - நொரடோம் சீயனூக், கம்போடியாவின் 1வது பிரதமர். (இ. 2012)
- 1930 - மைக்கேல் கொலின்ஸ், அமெரிக்க விண்வெளிவீரர்.
- 1933 - துரை இராஜாராம், தமிழக எழுத்தாளர்.
- 1961 - பீட்டர் ஜாக்சன், நியூசிலாந்து நடிகர், இயக்குனர்

இறப்புகள்

- 1811 - பண்டார வன்னியன், வன்னி மன்னன்.
- 1926 - ஆரி உடீனி, அங்கேரிய-அமெரிக்க மாயவித்தைக் காரர். (பி. 1874)
- 1975 - எஸ். டி. பர்மன், இந்திய இசையமைப்பாளர். (பி. 1906)
- 1984 - இந்திரா காந்தி, இந்தியாவின் 3வது பிரதமர். (பி. 1917)
- 1990 - எம். எல். வசந்தகுமாரி, கருநாடக இசைப்பாடகர். (பி. 1928)
- 1993 - பெடரிக்கோ ஃபெலினி, இத்தாலிய இயக்குனர். (பி. 1920)
- 2003 - செம்மாங்குடி சீனிவாச ஐயர், இந்திய கர்நாடக இசைப் பாடகர். (பி. 1908)
- 2005 - அம்ரிதா பிரீதம், பஞ்சாபி எழுத்தாளர். (பி. 1919)
- 2005 - பி லீலா, பின்னணிப் பாடகி (பி. 1934)

சிறப்பு நாள்

- ஆலோவீன்.
- தேசிய ஒற்றுமை நாள் . (இந்தியா)
- உலக சேமிப்பு நாள்.




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80-160 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 100 | 100 | 80 |
| தக்காளி | 80 | 100 | 80-160 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 60 | 60 |
| கோவா | 80 | 120 | 120 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 240 | 160 | 80 |
| பூசணி | 30 | 50 | 60 | 60 | 40 |
| புடோல் | 50 | 50 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 60-120 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 240-400 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 160 | 100 | 200 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 160 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 220 | 280 | 240-320 | 200 | 120 |
| லீக்ஸ் | 150 | 200 | 160 | 160 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 100 | 80 |
| குடைமிளகாய் | 180 | 200 | 200 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 60 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 240 | 180 |
| கத்தரிப்பிஞ்சு | 80 | 150 | 80 | 150 | 50 |
| கீரை பிடி | 30 | 50 | 40 | 40 | 20 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 30 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | 150 | — | 160 | — | 200 |
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 50 | — | — | — |

# என்னாலும் முடியும்

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் உலக உள நல நாளை முன்னிட்டு சோதனைகளைத் துடைத்தெறிந்து சாதிக்கத் துணையிருப்போம் எனும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட விழிப்புணர்வு செயற்றிட்டங்களை வெளிக்கொணரும் வகையில் இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது

என்னாலும் முடியும் வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்திலே தனிமனித முயற்சிகள் முடங்கி வருவது வேதனை அளிக்கிறது. சோம்பேறித் தன்மை சோகமயமாக ஊோடணை போட்டு ஊர் ஊராக உலா வருகிறது.

நமக்கென்ன நாம் ஏன் கஷ்டப்பட வேண்டும் என்ற சிந்தனை சிறிது சிறிதாக வளர்ந்து தற்போது விஸ்வரூபம் எடுத்து வளர்ந்து நிற்பது வேதனை அளிக்கின்றது. "என்னாலும் முடியும் "என்ற பதம் ஒவ்வொரு வீட்டிலும் விதை போட்டு வளர்ந்து பாதுகாக்க வேண்டும். இது தாய், தகப்பனின் முக்கிய பணிகளில் முதன்மையான தாக தற்போது கண்முன்னே காட்சியளிக்கிறது. நாம் தான் இந்த முயற்சியை தவறவிட்டோம் என்றால் எமது பிள்ளைகளையும் அதே வழிக்கு இட்டுச் செல்லக்கூடாது.

தனி மனித முயற்சி சரித்திரம் படைக்கும் என்ற விதையை சிறுபாலர் வயதில் அவர் மனதில் விதைத்து வளர்த்து விட்டோம் என்றால் அதை எந்தச் சக்தியாலும் பிற்காலத்தில் அழிக்கவோ, அசைக்கவோ முடியாது. சாதனைகள் படைப்பது சகஜமாகிக் கொண்டே வரும் சரித்திர நாயகன் என்ற பெயர் கல்மேல் எழுத்துப்போல் காலம் காலமாய் இருக்கும்.

தாழ்வு மனப்பான்மை, ஏழ்மை நிலை, பயந்த சுபாவம், எது நடந்தாலும் நடக்கட்டும் எனக்கென்ன என்ற எண்ணம் இவை எல்லாம் என்னாலும் முடியும் என்ற எண்ணத்திற்கு எதிரானவை. அவைகள் ஒவ்வொரு மனித மனத்திலும் இருந்து அகற்றப்பட வேண்டியவை.

எத்தனையோ பயமுறுத்தலுக்கும் மத்தியில் தான் என்னாலும் முடியும் என்று ஒரு தாய் எண்ணியதால் தான் நாம் ஒவ்வொருவரும் இப் பூமியில் தோன்றியிருக்கின்றோம்.

உணவை உண்டு நாம் உறங்கி எழுவதனால் உருப்படியான ஒன்றை இந்த உலகத்திற்கு நாம் தர முடியாது.விழுந்த அப்பிள் பழத்தை கடித்துத் தின்று விட்டுப் போயிருந்தால் புவியீர்ப்புச் சக்தி என்னும் பொருள் பூமியில் புதைந்து போயிருக்கும். சேர் ஐசாக் நியூட்டன் அதை நிரூபித்தார்.

உடலை அறுத்து ஒப்பிரேசன் செய்யும் முறை ஒப்பாரியுடனே அன்று நடந்தது. இன்று அமைதியாக அறுவை சிகிச்சை செய்ய அரு மருந்தைக் கண்டுபிடித்தார் வில்லியம் மார்ட்டன்.

இருட்டில் இருந்த இரவு நேர உலகை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தார் தோமஸ் அல்வா எடிசன். இவர்கள் அனைவரும் தனிமனித முயற்சி மூலம் தரணிக்குக் கிடைத்த தங்கப் புதையல்கள்.

நாமும் ஏன் இவர்கள் போல் ஆகக் கூடாது? நிச்சயமாக முடியும், என்னாலும் முடியும் என்ற கருத்தை களவாட முடியாதபடி நாம் கட்டிக் காக்க வேண்டும் ஏளனப் பேச்சுக்களை எடுத்தெறிந்து விட வேண்டும்.

ஏன் என்ற கேள்வியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் பற்றியே ஆராய்ச்சி செய். அடுத்த சந்ததி உன்னை அரியணையில் வைத்து ஆராதிக்கும்.

அலுப்பு என்ற வார்த்தையை உன் அகராதியில் இருந்து அப்புறப்படுத்து. அற்புதமான வாழ்வை அனுபவிக்கலாம்.

என்னாலும் முடியும் என்ற வார்த்தையை எல்லோரும் கேட்டு அவரவரும் அதைப் பின்பற்றினால் அடுத்த சந்ததியினரின் வாழ்வு அசைக்க முடியாத ஆணி வேருடன் வளரும் என்பதே எனது அசைக்க முடியாத கருத்தாக இருக்கிறது.

தர்மினி நித்தியானந்தன்
தரம் 9
யா/வட்டு மத்திய கல்லூரி
வட்டுக்கோட்டை

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 885

றொகான்




தட்சா




வின்ஜக்ஷன்




நிஷாந்தன்




தர்மா





அபி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உலக சாதனைக்கு தயாராகும் இஸ்ரோ



(மும்பை)

அடுத்த ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி ஒரே ரொக்கெட்டில் 82 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதற்கு இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். இது வெற்றியடைந்தால், உலக சாதனையாகும்.

விண்வெளி ஆய்வுத்துறையில் இந்தியா உலக அளவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாடாக மாறி வருகிறது. இந்திய விண்வெளி ஆய்வு மையம்(இஸ்ரோ) பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளது. சந்திராயன், மங்கள்யான் போன்றவை இஸ்ரோவின் சாதனைகளுக்கு எடுத்துகாட்டு. மேலும் வர்த்தகரீதியாக மிகவும் குறைந்த செலவில் செயற்கைக்கோள்களை அனுப்புவதிலும் இந்தியா முன்னணியில் உள்ளது. வளர்ந்த நாடுகளுக்கு போட்டியாக விண்ணிற்கு சென்று திரும்பி, மீண்டும் பயன்படுத்தக்கூடிய ரொக்கெட் சோதனையையும் இஸ்ரோ செய்து முடித்துள்ளது. இந்நிலையில், இஸ்ரோ தனது அடுத்த கட்ட சாதனையாக ஒரே ரொக்கெட்டில் 82 செயற்கைக் கோள்களை அனுப்பி வைக்கும் மெகா திட்டத்திற்கு தயாராகி வருகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி இந்த சாதனையை இஸ்ரோ நிகழ்த்த உள்ளது. இதுகுறித்து, மும்பையில் செவ்வாய் விண்கல திட்ட இயக்குநர் சுப்பையா அருணன் நிருபர்களிடம் கூறியதாவது. இஸ்ரோ முதல் முறையாக ஒரே ரொக்கெட்டில் 82 செயற்கைக்கோள்களை அனுப்ப திட்டமிட்டுள்ளது.

அவற்றில் 60 அமெரிக்காவுக்கு சொந்தமானவை. 20 ஐரோப்பிய நாடுகளுக்கு சொந்தமானவை மற்றும் இங்கிலாந்தின் 2 செயற்கைகோள்கள் விண்ணில் ஏவப்படுகின்றன. ஒரே ரொக்கெட்டில் கடந்த 2014ஆம் ஆண்டு ரஷ்யா அதிகபட்சமாக 37 செயற்கைக்கோள்களை அனுப்பி சாதனை படைத்துள்ளது. அதற்கு முன்னதாக கடந்த 2013ஆம் ஆண்டு அமெரிக்கா 29 செயற்கைக் கோள்களை அனுப்பியிருந்தது.

தற்போது இந்த இரண்டு சாதனைகளையும் இந்தியாவின் இஸ்ரோ முறியடிக்க உள்ளது. ஏற்கனவே கடந்த ஜூன் 22ஆம் திகதி அனுப்பிய ரொக்கெட்டில் 20 செயற்கைக் கோள்களை -இஸ்ரோ வெற்றிகரமாக அனுப்பி சாதித்துள்ளது. ஜனவரியில் இது வெற்றி பெறும் பட்சத்தில் மிக குறைந்த காலத்திற்குள் அதிகமான செயற்கைக்கோள்களை அனுப்பி சாதனை படைத்த நாடாக இந்தியா உலக அளவில் கவனம் பெறும். ஏற்கனவே செவ்வாய்க்கு முதன்முறையாக மங்கள்யான் செயற்கைக்கோளை அனுப்பி உலக அளவில் இந்தியா சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சுப்பையா அருணன் தெரிவித்தார். (இ-7)

# மத்திய வங்கியின் பாதுகாப்புப் பொறுப்பு இன்னுமொரு அமைச்சரின் மருமகனுக்கு?

மத்திய வங்கியின் உள்ளக பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை தனது நிறுவனத்துக்கு பெற்றுத் தருமாறு பிரபல அமைச்சர் ஒருவரின் மருமகனுடைய நிறுவனம் விண்ணப்பம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த அரசாங்க காலத்தில் இந்த அமைச்சரின் மருமகன் தொடர்பில் ஊடகங்களில் பேசப்பட்டு வந்ததாகவும். இவருக்கு எதிராக பல வழக்குகள் விசாரணையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக விண்ணப்பித்த பின்னர், குறித்த பிரபல அமைச்சின் முத்திரையுடன் கூடிய பரிந்துரை கடிதமொன்றையும் மத்திய வங்கியின் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த அமைச்சரின் மருமகனுடைய நிறுவனத்துக்கு மத்திய வங்கியின் உள்ளக பாதுகாப்பு விவகாரங்களை பொறுப்பளிக்குமாறும் அந்தக் கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

# விவாதத்தின் பின் முடிவெடுக்கப்படும்

அர்ஜுன அலோசியஸ் மற்றும் மத்திய வங்கி அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக முறி கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் வழக்குத் தொடர்வதா? இல்லையா? என்பது குறித்து, பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட விடயம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தீர்மானிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கோப் குழு தொடர்பிலான விவாதம் நடைபெற்றதன் பின்னர் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## சாதனைகள் புரிந்த தேவர் 63 வயதில் மரணம்

287

எனவே எல்லா ஊர்களிலும் இப்படம் 25 வாரம் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது. வசூலில் பெரும் புரட்சியே செய்தது.

இது பற்றி ஏ.வி.மெய்யப்ப செட்டியார் ஒரு கட்டுரையில் நண்பர் தேவர் எடுத்த ஹாத்தி மேரா சாத்தி படம் உலக சரித்திரத்திலேயே வசூலில் புதிய ரெக்கார்டு ஏற்படுத்தி விட்டது. பெரிய வெற்றிப் படம் என்றால் கல்கத்தாவில் ரூ.30, 40இலட்சம் வரை வசூல் ஆவதுதான் வழக்கம். ஹாத்தி மேரா சாத்திக்கு ரூ70, 80இலட்சம் வசூலாயிற்று என்று கேள்விப்படுகிறேன்... என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின் வெள்ளிக்கிழமை விரதம் கதையை சுபீன் என்ற பெயரில் இந்தியில் எடுத்தார் தேவர். ரிஷிகபூர் நடித்த இந்தப்படம் சுமாராக ஓடியது.

பின்னர் தாயைக்காத்த தனயன், வேட்டைக்காரன் ஆகிய படங்களின் கதைகளை ஒன்றாகக் கலந்து மா என்ற பெயரில் ஹிந்தியில் தயாரித்தார். தர்மேந்திரா நடித்த இந்திப் படம் நூறு நாள் ஓடியது.

நல்ல நேரம்

இதன் பின் ஹாத்தி மேரா சாத்தி படத்தை நல்ல நேரம் என்ற பெயரில் தமிழில் தயாரித்தார். எம்.ஜி.ஆரும் கே. ஆர். விஜயாவும் நடித்தனர். படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது.

திரை உலகில் பெரும் சாதனைகளை நிகழ்த்திய சாண்டோ எம்.எம்.ஏ.சின்னப்ப தேவர் தமது 63 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

குடும்பம்

சின்னப்ப தேவருக்கு அவருடைய 21ஆவது வயதிலேயே (1936இல்) திருமணம் நடந்து விட்டது. மனைவி பெயர் மாரிமுத்தம்மாள்.

அந்தத் தம்பதிகளுக்கு தண்டாயுதபாணி என்ற ஒரு மகன், சுப்புலட்சுமி ,ஜெகதீஸ்வரி என்று இரண்டு மகள்கள். தண்டாயுதபாணி பி.காம். பட்டதாரி.

தேவர் தயாரித்த பெரும்பாலான படங்களை தேவரின் தம்பியும் புகழ் பெற்ற எடிட்டருமான எம்.ஏ.திருமுகம் டைரக்ட் செய்தார். படக் கம்பனி நிர்வாகத்தை மற்றொரு தம்பியான மாரியப்பன் கவனித்துக்கொண்டார்.

மருமகன்

தேவரின் மூத்த மகள் சுப்புலட்சுமியை மணந்தவர் ஆர். தியாகராஜன். இவரும் பிறகு டைரக்டர் ஆனார். இவர் டைரக்ட் செய்த முதல் படம் வெள்ளிக்கிழமை விரதம்.




சின்னப்ப தேவர் மணி விழாவில் அவருக்கும், அவர் மனைவிக்கும் சிவாஜிகணேசன் நினைவுப் பரிசு வழங்குகிறார்.

1974 தமிழ்ப்புத்தாண்டு தினத்தன்று வெளிவந்து வெள்ளி விழா கண்டது.

இதில் சிவகுமார், ஜெயசித்ரா, ஜெயசுதா ஆகியோர் நடித்தனர். இசை, சங்கர் கணேஷ்.

1977 இல் தியாகராஜன் டைரக்ஷனில் வெளிவந்த ஆட்டுக்கார அலமேலுவும் 25 வாரம் ஓடியது. இதில் சிவகுமார், ஸ்ரீபிரியா நடித்தனர். தூயவன் வசனம் எழுத சங்கர் கணேஷ் இசை அமைத்தார். இதில் நடித்த ஒரு ஆடு அதிசய வேலைகள் செய்து சபாஷ் பெற்றது.

முருகனுக்கு பங்கு

தேவர் ஒவ்வொரு படத்திலும் கிடைக்கும் லாபத்தை நான்காகப் பிரிப்பார். ஒரு பங்கு முருகனுக்கு! அதாவது முருகக் கடவுளுக்கு. முருகன் அருளால் தான் தனக்கு வெற்றி மேல் வெற்றி கிட்டுவதாக தேவர் எண்ணினார். அதனால் இலாபத்தில் கால் பகுதியை முருகன் கோவில் திருப்பணிகளுக்கு வழங்கினார். பழனி கோவில், மருதமலை முருகன் கோவில் உட்பட பல கோவில்கள் இதனால் பலன் அடைந்தன. ஒரு பங்கை தனக்கு வைத்துக் கொண்டார். மற்றொரு பங்கை தனக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று பணம் கொடுத்து சினிமாப்படம் எடுக்க 10 ஆயிரம் ரூபாயுடன் சென்னைக்கு அனுப்பி வைத்த பழைய நண்பர்களுக்கு பிரித்துக் கொடுத்தார். மற்றொரு பங்கை நன்கொடைகளாக வழங்கினார்.

(தொடரும்)

# நாளை முதல் 15 % வற் வரி அமுல்




பொருட்கள் சேவைகள் தொடர்பான மேலதிக பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தை அடுத்து, திருத்தப்பட்ட வரி நாளை நவம்பர் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் இது தொடர்பான திருத்தச் சட்டமூலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் 11% ஆக இருந்த வற் வரி, 15 % ஆக அதிகரிக்கப் படவுள்ளது.

குறித்த வரி அறவீட்டில், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் தொடர்பான வற் பதிவு தொடர்பான எல்லை மாதாந்தம் ரூ. 12.5 மில்லியன் அல்லது வருடாந்தம் ரூ. 50 மில்லியன் ஆகும்.

மேலும், பால்மா, மின் உபகரணங்கள், வாசனை திரவியங்கள், ஆபரணங்கள் மற்றும் சிகரட், மதுபானம், தொலைத் தொடர்பு சேவை ஆகியவற்றிற்கு வற் வரியில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுகாதாரத்துறை, வீடமைப்புத் துறை மற்றும் ஸ்மார்ட் போன்கள் என்பன வற் வரி அறவீட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

சுகாதார சேவையில் வெளிநோயாளர் மருத்துவக் கட்டணம், நோயை நிச்சயம் செய்வதற்கான சோதனை, மருத்துவ பரிசோதனைகள், சத்திரசிகிச்சை மற்றும் குருதிமாற்று சிகிச்சை உள்ளிட்டவற்றுக்கு "வற்"வரி அறவிடப்பட விருப்பதாக பிழையாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும், மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு வற் வரியிலிருந்து இவை நீக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார்.

ஆயினும் விசேட மருத்துவ நிபுணருக்கான கட்டணம், மருத்துவமனை அறைக்கான கட்டணம் ஆகியன வற் வரியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும்வீடு விற்பனை,பெற்றோல், டீசல், போக்குவரத்து சேவைகள் தொடர்பில்வற்வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

மேலும்2% ஆக இருந்த தேசத்தை கட்டியெழுப்பும் வரியில் (NBT) எவ்விதமான மாற்றமும் மேற் கொள்ளப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வற் இனால் ரூ.100 பில். வருமானம்

நாளை நவம்பர் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் பெறுமதி சேர் (வற்) வரி அதிகரிப்பு காரணமாக, அரசுக்கு 100 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைக்கும் என எதிர்ப் பார்க்கப்படுவதாக, அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே. செனவிரத்ன, தெரிவித்தார்.

## விலக்களிக்கப்பட்டவை

கோதுமை, கோதுமை மா; அரிசி, சீனி, பருப்பு, உப்பிடப்பட்ட மீன், ரின் மீன், மாசி, மிளகாய் தூள், பாண், பால், தேயிலை, இறப்பர், தேங்காய், தேங்காய் எண்ணெய், தேங்காய் பால், முட்டை, இறால், பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, கருவாடு, வெங்காயம், பெரிய வெங்காயம், பூண்டு, பாசிப்பயறு, மிளகாய், கௌபி, கடலை, உளுந்து, கொத்தமல்லி, வேர்கடலை, உரம், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், மருத்துவ பயன்பாட்டு உபகரணங்கள், மருத்துவ தொகுதிகள், ஆயுர்வேத பொருட்கள், சக்கர நாற்காலிகள், கைபிடி, கேட்டல் உபகரணம், வெள்ளை பிரம்புகள், Brail இயந்திரங்கள்,Brail கடதாசிகள், மூக்குக்கண்ணாடி பிரேம்கள், மூக்குக் கண்ணாடி செய்ய பயன்படுத்தப்படும் பொருட்கள், வெளிநோயாளர் சேவை, ஸ்கேனிங் சேவைகள், மருத்துவ சோதனைகள், சத்திரசிகிச்சை சேவைகள், டீசல், போக்குவரத்து சேவைகள், மண்ணெண்ணெய், பெட்ரோல் விமான எரிபொருள், உற்பத்தி வரி கொண்ட வாகனங்கள், பவுசர்கள் (Bowsers), விவசாய விதைகள், செடிகள், விவசாய இயந்திரங்கள், டிராக்டர், நெல் அறுவடை இயந்திரங்கள், பேக்கரி தயாரிப்பு இயந்திரங்கள் உற்பத்தி, பால் உற்பத்தி இயந்திரங்கள்,மீன்வள உபகரணங்கள்,தாவர பச்சை வீட்டுத் தொகுதி, கட்டடம் உபகரணங்கள், மின்சாரம், சூரிய மின் உற்பத்தி உபகரணங்கள், மின்சக்தி திறன் கொண்ட மின்குமிழ்கள், மின்சக்தி திறன் கொண்ட மின்குமிழ்கள் உற்பத்தி செய்யும் உபகரணங்கள், கல்வி சேவைகள், நூலக சேவைகள், கணனி மற்றும் பாகங்கள், கணினிகள் மற்றும் மென்பொருட்கள், அச்சிடப்பட்ட புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள், ஆயுள் காப்பீடு, கையடக்க தொலைபேசிகள், இரத்தினங்கள், முத்து மற்றும் வைரம், தங்கம் மற்றும் பிளாட்டினம்,காணி விற்பனை.

# BMICH-ன் அலுவலக இடவசதி 100% பூர்த்தி



வாடிக்கையாளர்கள் தங்களது வர்த்தக முகவரியாக BMICH இனை தெரிவு செய்ததன் மூலமாக அலுவலக இடவசதி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக BMICH அண்மையில் அறிவித்திருந்தது. உயர் சுயவிவரத்தைக் கொண்ட குத்தகையாளர்களை வெற்றிகரமாக கவர்ந்து, அதன் 5 கட்டிடத் தொகுதிகளிலும் உள்ள 171 அலுவலக அறைகளும் இன்று முழுமையாக பொதுத்துறை நிறுவனங்களாக காணப்படுகின்றன.

முழுமையாக இடவசதிகளை பூர்த்தி செய்வதற்காக குத்தகைதாரர்களுடன் தொடர்ச்சியாக நாம் கையொப்பங்களை மேற்கொண்டு வருகிறோம். நகரில் கொண்டாடப்படும் அமைவிடத்தில் அமைந்துள்ள இலங்கையின் முதன்மை அலுவலக சொத்தாக இருப்பதே BMICH இன் வலிமை என்பதை இது உணர்த்துவதாக அமைந்துள்ளதுடன், உறுதியான சுய தொகுப்பைக் கொண்ட பொதுத்துறை குத்தகையாளர்களை தொடர்ச்சியாக நாம் பேணவுள்ளோம் என பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சுனில் திசாநாயக்க தெரிவித்தார்.

42 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மண்டபமானது, மாநாடுகள், சர்வதேச மாநாடுகள் மற்றும் கண்காட்சி மையங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இங்குள்ள குத்தகைதாரர்களும் தங்கள் சந்திப்புகள் மற்றும் நிகழ்ச்சிகளை வெவ்வேறு மண்டபங்களில் முன்னெடுக்கக்கூடியதாக அமைந்துள்ளது. 2500 இற்கும்மேற்பட்ட வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய வசதி இங்குள்ள முக்கிய சிறப்பம்சங்களுள்ஒன்றாகும். எந்தவொரு நிகழ்வுக்கும் ஏற்ற வகையான மண்டபங்களை BMICH கொண்டுள்ளது.

# ICBT Campus இன் 2017 கல்வியாண்டுக்கான அனுமதிகள்

Business Management (முழு நேரம்,பகுதிநேரம்), Software Engineering, Quantity Surveying Civil Engineering, Computer Network Engineering, ஆகிய பிரிவுகளுக்கான 2017/2018 கல்வியாண்டுக்கான அனுமதிகள் ICBT Campus யாழ். வளாகத்தினரால் கோரப்படுகின்றன.

க.பொ.த.சாதாரணதரம் அல்லது க.பொ.த உயர்தரக் கல்வியை பூர்த்தி செய்தவர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் பட்டப்படிப்புக்களை ICBT யாழ் வளாகத்தில் பயில முடியும்.

பட்டப்படிப்புக்களை 2 படிநிலைகளில் பயின்று கொள்ள முடியும். முதல் 2 வருடங்களும் ICBT HND எனும் உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியையும் தொடர்ந்து BSc(Hons) Top -Up Degree எனப்படும் பட்டப்படிப்பின் இறுதியாண்டு கற்கைகளையும் யாழ்.மண்ணிலேயே பயின்று பட்டப்படிப்பை பூர்த்தி செய்து கொள்ள முடியும். மேற்படி பட்டப்படிப்பின் இறுதியாண்டு கற்கைநெறிகளை உலகளாவிய ரீதியில் தரப்படுத்தப்பட்டிருக்கும் பிரித்தானிய பல்கலைக்கழகங்களே வழங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் ICBT கிளையினை தமது பட்டப்படிப்புக்களை முழுமையாக வழங்கக்கூடிய தகுதி வாய்ந்த கிளையாக பிரித்தானிய பல்கலைக்கழகங்கள் அங்கீகரித்திருப்பது சிறப்பம்சமாகும்.

தகுதி வாய்ந்த அனுபவம் நிறைந்த ஆசிரியர் குழாமினால் மாணவர்கள் நெறிப்படுத்தப்படுவதை ICBT யாழ்.வளாகம் உறுதி செய்கிறது. மேலும் யாழ்ப்பாணம் மட்டுமன்றி கொழும்பு, கண்டி ஆகிய பிரதேசங்களிலிருந்தும் துறைசார் நிபுணர்கள் மற்றும் கல்விசார் தேர்ச்சியுள்ளவர்கள் வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்விச் சேவையினை வழங்கிவருகிறது ICBTCampus.

பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள் தொழில்சந்தைப் போட்டிகளுக்கு அவசியமான ஆங்கில அறிவு, Presentation Skills, நேர்முகத் தேர்வுகளை எதிர்கொள்ளுதல், கூட்டங்களைக் கையாளுதல் போன்ற திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சிப் பட்டறைகளை நிகழ்த்தி ஒவ்வொரு மாணவனும் முழுமையான, தகுதியுடன் தொழில் சந்தையை சந்திக்கக் கூடிய வகையில் கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

பட்டப்படிப்புக்கான ICBT HND கற்கைநெறியின் புதிய பிரிவுகளுக்கான அனுமதிகள் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

குறுகிய காலக் கற்கைநெறிகள் O/L மற்றும் A/L பரீட்சைகளை நிறைவுசெய்து முடிவுகளுக்காய் காத்திருப்பவர்களும், பல்கலைக்கழக அனுமதிக்காய் காத்திருப்பவர்களுக்கும் தமது விடுமுறைக் காலங்களில் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் டிப்ளோமா கல்விகளைத் தொடரக்கூடிய வகையில் Diploma in English, Spoken English, Diploma in Information Communication Technology, Diploma in Marketing & Management மற்றும் IETS பயிற்சிகள் என்பன இடம் பெற்றுவருகின்றன.

மேற்படி கற்கைநெறிகளுக்கான குழு வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ICBTயாழ்.வளாகம் தமது ஒரு வருட நிறைவையொட்டி HND கற்கைநெறிகளுக்கு விசேட விலைக்கழிவுகளை வழங்கி வருகிறது. மேலதிக தகவல்களை இல.580 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக) அமைந்திருக்கும் ICBT யாழ்.வளாகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,447.53 | 6,424.85 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,594.59 | 3,572.36 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் புரள்வு (ரூபா.மில்.) 1,242.133

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* புளூ டைமண்ட்(X)(0.60), செரண்டிப் ஹோட்டல்(X)(24.00), பேர்டன்ஸ்(108.70),உடபுஸ்ஸலாவ(19.70),ரிசஸ் எனர்ஜி(23.50).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* சிலோன் பிறின்டர்ஸ்(60.80),சிரஸ் கிக்கடுவ(12.50), ஆதாம் இன்வெஸ்மன்ட்(2.00), சிலாவ் பினான்ஸ் (19.00),சிரஸ் லிசர்(0.50).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 145.93 | 149.69 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 177.06 | 183.22 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.16 | 164.27 |
| சுவிஸ் பிராங் | 145.90 | 151.83 |
| கனேடிய டொலர் | 108.39 | 112.77 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.91 | 114.89 |
| சிங்கப்பூர் டொலர் | 104.25 | 108.14 |
| ஜப்பான் யென் | 1.38 | 1.43 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.19 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 40.01 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


# போதைப்பொருள் பாவனையிலும் கலாசார சீர்கேட்டிலும்

# வடக்கிற்கு முதலிடம் கொடுப்பது சரியா?

இலங்கையின் மணி மகுடமாக விளங்குகின்றது யாழ்ப்பாணம். வரலாற்று சிறப்புக்களையும் பெருமைகளையும் கொண்ட ஒரு குடா அனைத்து வளங்களும் நிறைந்த ஒரு சொர்க்க பூமி தமிழர்களது தலைநகராக திருகோணமலை இருந்தாலும்கூட உலகத்தில் வாழும் பன்னிரெண்டு கோடிக்கு அதிகமான தமிழர்கள் தமது தலைநகராக யாழ்ப்பாணத்தையே கருதுகின்றனர். உலகம் வியக்கும் தலைவன் பிறந்ததாலேயோ என்னவோ யாழ்ப்பாணம் என்ற பெயருக்கே மதிப்பும் மரியாதையும் உலகெங்கிலும் உண்டு. கல்வியிலும் கலை கலாசாரத்திலும் சரி சிறந்து விளங்கும் யாழ்ப்பாணம் பல குண்டுகளை தன் நெஞ்சிலே தாங்கிக் கொண்டது. ஏராளமான இழப்புக்களை சந்தித்தது. ஆனால் எந்தஒரு சூழ்நிலையிலும் எந்த காலகட்டத்திலும் தனது தனித்துவத்தை இழக்காமல் தலை நிமிர்ந்து நிற்கின்றது. குறிப்பாக வடமாகாணம் முழுதும் பல அழிவுகளில் இருந்து மீண்டும் மீண்டும் எழுந்து நின்று பல சாதனைகளைச் செய்து காட்டியுள்ளது. இலங்கைத்தீவு முழுவதும் வாழும் ஒட்டுமொத்த மக்களும் இந்த வடக்கின் மீது ஓர் ஈர்ப்பினை கொண்டுள்ளார்கள். இதற்கான காரணம் அந்த மண்ணின் தனித்துவமா? மக்களின் தனித்துவமா? என்பதை சரியாகக் குறிப்பிட முடியவில்லை. இது இன்று மட்டுமல்ல ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் அதற்கு முன் வந்தவர்களின் ஆட்சிக்காலத்திலும் யாழ்ப்பாணமும் அதன் பாரம்பரியமும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட வித்தியாசமான வியக்கத்தக்க நிலையிலே காணப்பட்டது. ஏனைய சமூகத்தின் எஜமான்களாகவே இந்த யாழ்ப்பாணத்தவர்கள் செயற்பட்டார்கள். சேர்.பொன் இராமநாதன் போன்ற அறிவாளிகள் அன்றைய கால ஒட்டுமொத்த இலங்கைக்கும் நல்ல ஆலோசகராகவும் ஆங்கிலேய ஆட்சியாளர்களோடு சம அந்தஸ்துடன் பேசக்கூடியவர்களில் முக்கியமான ஒருவராகவும் காணப்பட்டார். இது போல இன்று பல விடையங்களை யாழ்.மண்ணின் பெருமைக்கு உதாரணமாக கூற முடியும். கலை, கலாசார, பண்பாடு மட்டும் அல்ல. வீரத்திலும் சிறந்தவர்களாக தம்மை வரலாற்றிலே பதிவு செய்துள்ளனர். இந்த யாழ் வாசிகளிடம் உலகில் ஐந்தாவது வல்லரசு என்று மார்தட்டிக்கொள்ளும் இந்தியா தனது ஆக்கிரமிப்பு படைகள் யாழ் மண்ணில் வாங்கிய அடிகளை கனவிலும் மறக்காது. இப்படி பெருமைக்குரிய யாழ்ப்பாணம் இன்று போதைப் பொருளின் விநியோக மையமாகவும் கலாசார சீர்கேட்டின் முதன்மை பெற்றதாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. இது திட்டமிட்ட ஒரு பரப்புரை என்றே கூறலாம். யாழ்.மண்ணின் பெருமைக்கு சேறு பூசும் ஒரு திட்டமிட்ட செயல். இதை அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கலாசாரத்தின் ஆணிவேராக ஆழமாக மண்ணில் வேரோடி இருக்கும் அந்த தனித்துவமான தேசத்தின் மீது மேற்கொள்ளப்படும் பொய்யான ஒரு பரப்புரையினால் அதன் எதிர்காலத்தை உண்மையிலேயே தாம் இன்று கூறுகின்றதைப் போல ஒரு இழிவான நிலைக்கு தள்ளி விடுவதற்கான ஒரு திட்டமிடலே. ஜனாதிபதிகூட யாழ்ப்பாணத்தில் இன்று அதிகமான போதைப் பாவனையாளர்கள் இருப்பதாக ஒரு கேலியான வகையில் தெரியப்படுத்தியிருந்தார். இது உண்மைக்கு புறம்பானது. கண்டிக்க வேண்டியது. நாட்டின் தலைவர் என்ற வகையிலே போதைப்பொருள் பாவனையினையும் விநியோகத்தினையும் தடுக்க வேண்டிய பொறுப்புள்ள அவர் யாழ் மாவட்டமே மது பாவனையில் அதிக இலாபத்தை அரசுக்கு பெற்றுக் கொடுக்கின்றது. ஐம்பதுக்கும் அதிகமான மதுபான நிலையங்கள் உள்ளன என்ற செய்தியினை தெரியப்படுத்தியிருந்தார். வடக்கில் மட்டும் இவ்வாறான மதுபான நிலையங்கள் இருக்கின்றமை அவருக்கு நன்கு தெரியும் என்றால் அவற்றுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கியது யார்? வடக்கு மக்களா? நிச்சயமாக மத்திய அரசினாலே இந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கும். எனவே இவ்வாறான அனுமதிகளை மற்ற மாகாணங்களை விட வடக்கிற்கு மத்திய அரசு கொடுக்கின்றது என்றால் அதுவே வடக்கின் இன்றைய நிலைக்கு காரணம். எனவே பொறுப்பு கூற வேண்டிய இன்றைய நாட்டின் தலைவரே வடக்கில் அதிக போதை நோயாளிகள் உள்ளனர் என்று கூறுவது வடக்கு மக்களை இழிவுபடுத்துவதாகவே கருத வேண்டும். வடக்கில் மட்டும் அதிகளவிலான மது விற்பனை நிலையங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிய நாட்டின் தலைவர் மக்களைப் பார்த்து போதைப் பொருள் பாவனைக்கு எதிராக நீங்கள் போராடவில்லை என்று கேலி செய்வது ஒரு நாட்டின் தலைவர் என்றவகையில் பொருந்த மற்ற செயலாகும். இதைச் சுட்டிக்காட்டுவதற்கு தமிழர் தரப்பு தவறிவிட்டன. சரி வடக்கிலே இன்று அதிகமான போதைப்பொருள் பாவனை குற்றச்செயல்கள் கலாசார சீர்கேடுகள் இன்று அதிகரித்துள்ளதாக பலரும் பல இடங்களிலே பலதரப்பட்ட குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.



ஆனால் உண்மையிலே போதைப் பொருள் பாவனை என்பது மற்ற இடங்களை விட யாழ்ப்பாணத்தில் மட்டும் அதிகமாகி விட்டதா? நிச்சயமாக இல்லை. குடு ஹெரோயின் என்றால் இன்னும் என்ன என்றே வடக்கு மக்களுக்கு தெரியாது. அபின், பாபுல் போன்ற இன்னும் பல போதை மருந்துகளை வடக்கு மக்கள் கண்ணால் கண்டது கூட இல்லை.



அப்படியாயின் எதை ஆதாரமாக வைத்து இந்த குற்றச்சாட்டு வடக்கின் மீது சுமத்தப்படுகிறது. அதற்கான காரணம் என்ன? கொழும்பிலே வாழ்ந்தவர்களுக்கும் அங்கே சுற்றி திரிந்தவர்களுக்கும் நன்றாகத் தெரியும்

பல போதை நோயாளிகள் குடு. ஹெரோயின்போன்ற போதை மருந்த கொள்வனவு தேவைக்காக வீடுகளிலும் புகையிரதங்களிலும் பல கொள்ளை சம்பவங்களில் ஈடுபடுவார்கள். இந்த குடு என்பது மிகவும் மோசமான ஒரு போதை மருந்து. இதற்காக பணம் கொடுக்க மறுத்த தன் தாயின் கழுத்தை அறுத்து கொலை செய்யும் அளவு போதை நோயாளிகள் வடக்கில் இல்லை. இவ்வாறான போதை மருந்து பாவனைகளும் வடக்கில் இல்லை. எனவே போதைப்பொருள் பாவனையில் வடக்கினை முதன்மைப்படுத்துவது பொருத்தமற்றது. சரி இந்த கலாசார சீர்கேடுகளுக்கும் குற்றச் செயல்களுக்கும் வடக்கு முதல் இடம் வகிக்கிறதா? இந்த குற்றச்சாட்டுகளும் ஏற்றுக் கொள்ளக்கூடியதா? நிச்சயமாக இல்லை என்றே கூற வேண்டும். இதுவும் ஒரு திட்டமிட்ட கலை பூசலே. வடக்கில் களியாட்ட நிலையங்கள் இல்லை. சூதாட்ட நிலையங்கள் இல்லை. ஆனால் கொழும்பில் ஏனைய மாகாணங்களில் இவை அனைத்தும் தாராளமாக உள்ளன. தெஹிவளை மிருகக்காட்சிசாலை, விக்டோரியா பாக், வெள்ளவத்தை கடற்கரை ஓரம் என வெளிப்படையாகவே கலாசார சீர்கேடுகளும் குறிப்பாக விபச்சாரம் நடைபெறுகின்றன. இதைவிட எமது தமிழ் பெண்கள் ஒட்கா, வைன் போன்ற மதுபானங்களை உட்கொள்வதில்லை. அவர்களுக்கு இவை என்ன என்றே தெரியாது. ஆனால் ஏனைய இடங்களிலே குறிப்பாக கொழும்பிலே எத்தனை சிங்களப் பெண்கள் இவற்றை சாதாரணமாக குளிர்பானங்களை போல உட்கொள்கின்றார்கள். ஆனால் ஏன் இவற்றுக்கெல்லாம் வடக்கிற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். இதன் நோக்கம் என்ன? உண்மையிலே தற்போது வடக்கிலே போதைப் பொருள் பாவனை சற்று அதிகரித்து உள்ளது என்பது உண்மை. அதற்காக அது முதலிடத்தில் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இங்கே ஒரு விடயத்தினை அவதானிக்க வேண்டும். இந்த போதைப் பொருள் மற்றும் கலாசார சீர்கேடு என அனைத்து சமூகவிரோத செயல்களும் இப்போதுதான் தலை தூக்கியுள்ளன. அதாவது இரண்டாயிரத்து ஒன்பது வைகாசி பதினெட்டுக்கு பின்பு. எனவே இதற்கான பொறுப்பு முழுவதும் மத்திய அரசாங்கமே விடுதலைப்புலிகள் காலத்தில் இல்லாத கஞ்சா கடத்தல்கள் இப்போது தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது என்றால் தவறு வடக்கினுடையதா? அல்லது அரசாங்கத்தினுடையதா? விடுதலைப்புலிகளின் காலத்திலே கடல் வழியாக கொண்டுவரப்படாத கஞ்சா இப்போது அவர்கள் இல்லாத போது கடல் வழியாக நடைபெறும் கஞ்சா கடத்தல்களுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் இலங்கை கடற்படையும் இலங்கை அரசாங்கமுமே தவிர வடக்கு மக்கள் அல்ல. இன்று தலைதூக்கி உள்ள சமூகவிரோத செயல்கள் விடுதலைப்புலிகள் காலத்தில் இல்லை என்றால் இது அவர்களின் நல்லாட்சியினையே தெளிவுபடுத்துகின்றது. கலை,கலாசாரம்,பண்பாடு என அனைத்திலும் முதன்மை வகித்த வடக்கு இன்று போதைப்பொருள் பாவனையிலும் கலாசார சீர்கேட்டிலும் குற்றச்செயல்களிலும் முதன்மை வகிக்கின்றது என்றால் இப்போதைய நிர்வாக ஆட்சிமுறை, சட்ட ஒழுங்கு என அனைத்துமே சீரற்ற நிலையில் உள்ளது என்பதுதானே அர்த்தம். நல்லாட்சி என்று கூறப்படும் இன்றைய ஆட்சிமுறை தவறானது என்பதுதானே அர்த்தம். எனவே வடக்கின் மீதும் அதன் தனித்துவம் மீதும் கறை பூசுவதைவிடுத்து ஒரு நல்ல சட்ட ஒழுங்கை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களுக்கு உண்டு. எனவே இதைக்கருத்தில் கொள்ளாமல் கேலி பேசுவதும் இழிவுபடுத்துவதும் நல்ல ஆட்சியாளர்களுக்கு உகந்ததல்ல. திட்டமிட்ட வகையிலே வடக்கில் இடம்பெறும் சமூக விரோத செயல்களுக்கான முழுப்பொறுப்பும் இன்றைய ஆட்சியாளர்களையே சாரும். இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆதீ

தவறு ஒன்றுதான் அரசின் தயவை வேண்டும். உண்மைக்கு அது வேண்டியதில்லை.
~ தோமஸ் ஜெபர்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## கைகேயியின் சூழ்ச்சிக்கு இடம்கொடாத பரதன் போல...

இதிகாச காப்பியங்கள் அனைத்தும் மனித வாழ்வியலுக்கான ஒழுக்கநெறியை எடுத்தியம்புகின்றன. அறத்தை–தர்மத்தை மீறினால் அது அழிவைத் தரும் என்பதே இதிகாசங்கள் கூறும் மெய்ப்பொருள்.

இராமனுக்கு முடிசூட்டுவதற்காக அயோத்தி மாநகர் விழாக் கோலம் பூண்டிருக்கிறது.

இராமருக்குப் பட்டாபிஷேகம் நடப்பதைப் பார்ப்பதற்காக அனைவரும் அகமகிழ்வோடு காத்திருக்கையில், இருவர் மட்டும் மனதை இருளாக்கி அறத்தை அழிக்க சதி செய்கின்றனர்.

அதிலொருவர் கைகேயி மற்றவர் மந்தரை. இராமன் காடேகவும் பரதன் நாடாளவும் தசரதனிடம் இரு வரம் கேட்கிறார் கைகேயி.

கேட்ட வரத்தைக் கொடுப்பது தசரதனின் கடமையாகிப் போக, அயோத்தி மாநகர் பதின்னான்கு ஆண்டுகள் சோபிழந்து போகிறது.

பதின்னான்கு ஆண்டுகளுக்குப் பின்னரேனும் அயோத்தி மாநகர் விழாக் கோலம் பூணுவதற்கும் இராமருக்குப் பட்டாபிஷேகம் நடப்பதற்கும் காரணமாக இருந்த பெருந்தகை பரதன்.

தன்தாயின் வழியில் சென்று பரதன் முடி சூட்டியிருப்பானாயின் இராமர் காட்டில் வாழ்வதைத் தவிர வேறு வழிதான் என்ன?

இராமர் இருக்க வேண்டிய இடத்தில் நான் இருக்க மாட்டேன் என்று உரைத்த பரதனே இந்த உலகுக்கு மிகச்சிறந்த உதாரண புருஷன்.

இராமர் அமரவேண்டிய இடத்தில் நான் அமரமாட்டேன் என்று நீதியை இறுகப்பிடித்து சிம்மாசனத்தில் இராமரின் பாதுகைகளை வைத்து அறத்தை நிலை நாட்டிய பரதனால்தான் அயோத்தி மாநகர் மீண்டும் பொலிவுற்றது.

எனவே மூத்தவர்களுக்கு மதிப்புக் கொடுப்பதென்பது அவசியமானது. இங்கு மூத்தவர் என்பது இடம், சூழல், பதவி என்பவற்றைப் பொறுத்து அமையும்.

ஒருநாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமர் அல்லது முதலமைச்சர் இல்லாதவிடத்து வழங்கப்படும் பதவிகள் பெறுமதியற்றவை. அவைசந்தர்ப்பத்தை–சூழலைப் பயன்படுத்தி பெறப்பட்டவையே என்றே பொருள்படும்.

அதாவது பின்கதவால் வருதல் என்ற அர்த்தத்தையே இவை தரக்கூடியவை. அந்த வகையில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் தெரிவு என்பதும் அப்படியான ஒன்றுதான்.

வடக்கின் முதலமைச்சர் வெளிநாடு சென்றிருந்த வேளையில்; தான் வரும்வரை பிரதி அவைத் தலைவர் பதவியைத் தெரிவு செய்ய வேண்டாம் என்று முதலமைச்சர் கூறியிருக்கையில்,

அதற்கு உரிய மதிப்புக் கொடுக்காமல்–ஒரு தலைவனை மதிக்காமல் நடந்த பிரதி அவைத் தலைவர் தெரிவு என்பது ஏற்புடையதன்று.

எனவே அந்தத் தெரிவை முதலமைச்சருக்கு எதிரானவர்கள் சதி செய்து நடத்தினாராயினும் அந்தப் பதவிக்குத் தெரிவான வடக்கு மாகாண சபை உறுப்பினர் கமலேஸ்வரன் பெருந்தன்மையோடு நடந்து கொள்வார் என்பது தமிழ் மக்களின் நம்பிக்கை.

அதாவது கைகேயியின் சூழ்ச்சிக்கு எங்ஙனம் பரதன் இடம்கொடாமல் அறத்தைக் காப்பாற்றினானோ அதேபோல பிரதி அவைத் தலைவர் பதவியைப் பெற்றுள்ள கமலேஸ்வரன் முதலமைச்சரின் வாக்குக்கு மதிப்பளித்து தன் பதவியை இராஜினாமாச் செய்து, வடக்கு மாகாண முதலமைச்சர் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை – அவரின் வார்த்தைக்கு இருக்கக்கூடிய உயர்ந்த மதிப்பை உறுதி செய்ய வேண்டும்.

கல்லறையில் பொறிப்பதற்கே இப்பதவி என்று வடக்கு மாகாண சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவர் கூறியதை இங்கு நினைவுபடுத்தி, அந்த பதவியை இராஜினாமாச் செய்து எங்கள் முதலமைச்சரின் பலத்தை நீங்கள் நிரூபித்தால் நிச்சயம் உங்களுக்கான எதிர்கால அரசியல் ஒளிமயமாக அமையும்.

முதலமைச்சர் இல்லாதவிடத்து நடந்த தெரிவு என்பதால் பிரதி அவைத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்கிறேன் என்று நீங்கள் கூறுவதானது எங்கள் மண்ணில் அரசியல் தர்மம் முளைப்பதற்கு வழிவகுக்கும்.

அதேவேளை நீங்கள் இராஜினாமாச் செய்த பதவி மீண்டும் உங்களுக்குக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் உங்கள் இராஜினாமாத் தீர்மானம் உங்களுக்கு மிகப்பெரும் கௌரவத்தைத் தரும்.

# எனது கண்டறிதல்கள் உண்மையென்பது வெளிச்சத்துக்கு வரும்-கணக்காய்வாளர்

மத்திய வங்கியின் முறி விற்பனை தொடர்பில் தமது கண்டறிதலின் யதார்த்தங்கள், குறித்த கோப் அறிக்கை பொதுமக்களின் பார்வைக்கு வந்ததும் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும் என்று கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தமது கண்டறிதல்களை கோப் குழுவின் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் விமர்சித்து வந்தனர்.

எனினும் தமது அறிக்கையின் உண்மைத்தன்மை கோப் அறிக்கை இன்னும் சில நாட்களில் மக்களின் பார்வைக்கு வந்ததும் வெளிச்சமாக்கப்படும் என்று கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேயசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி முறி தொடர்பான கணக்காய்வாளரின் கண்டறிதல் அறிக்கையும் கோப் அறிக்கையுடன் கடந்த வெள்ளிக்கிழமை, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆவா குழுவை கட்டுப்படுத்த அனுமதிகோரும் இராணுவம்

(கொழும்பு)

ஆவா குழுவினை கட்டுப்படுத்துவதற்கு அனுமதியளிக்குமாறு அரசாங்கத்திடம் இராணுவம் கோரியுள்ளது.

ஆவா குழுவினால் வடக்கில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற நிலையை மாற்றியமைக்க அனுமதி வழங்குமாறு கோரபபட்டுள்ளது.

நாட்டின் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்படாத நிலையில் இராணுவம் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் தலையீடு செய்ய முடியாது.

எனவே, ஆவா குழுவினை கட்டுப்படுத்த அனுமதியளிக்குமாறு அரசாங்கத்திடம் இராணுவம் கோரியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஆவா குழுவினை இராணுவத்தினர் இயக்கி வருவதாகத் தெரிவித்து அந்த குழுவினை பாதுகாக்க தமிழ் அரசியல்வாதிகள் சிலர் முயற்சிப்பதாகவும் ஊடகத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-7)

# ஆபத்தான பகுதியாக ஸ்ரீபாத மாறுமா? துறைசார் அமைச்சு தீவிர விசாரணை

ஸ்ரீபாத பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள ஹோட்டல் திட்டங்களால் அந்த சுற்றாடல் பகுதிக்கு ஏற்படவுள்ள அழுத்தங்கள் மற்றும் பாதிப்பு தொடர்பில் துறைசார் அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

ஸ்ரீபாத பகுதியில் ஏற்படவுள்ள சுற்றாடல் பாதிப்பு தொடர்பில் விரைவில் ஆராயவுள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அவர தெரிவித்துள்ளார்.

இந்த ஹோட்டல் மவுசாகலை நீர்த்தேக்கத்திற்கு மேல் அமைந்துள்ள மரே நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான இடத்திலேயே நிர்மாணிக்கப்படவுள்ளது.

எனினும் அதனை சுற்றியுள்ள பகுதி பாதிப்படையும் நிலை காணப்படுவதோடு அங்கு வசிக்கும் மிருகங்கள் மற்றும் இயற்கை வளங்கள் அழிவடையும் நிலை ஏற்படும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுற்றுச்சூழல் ஆர்வலரான சட்டத்தரணிஜகத்குண வர்தன குறித்த சுற்றுச்சூழல் தொடர்பில் ஆராய்ந்ததோடு, இந்த பகுதி மண் பாதுகாப்பு பகுதியாக 2008 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி வர்த்தமானி ஊடாக அறிவித்திருந்தார்.

மலை உச்சியில் இயற்கை காடுகளுக்கு அருகில் அமைந்துள்ள இந்த சுற்றுச் சூழலினுள் மிக அதிக அளவில் பல்லுயிர்கள் உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவ்வாறான சுற்றுச்சூழல் பகுதியில் ஹோட்டல் நிர்மாணிப்பதற்கு முன்னர் அதன் பாதிப்பு குறித்து ஆராய்ந்து உறுதி செய்ததன் பின்னரே நிர்மாணிக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(இ-7)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும்

## இந்தியா வலியுறுத்தல்

அதிகபட்ச அதிகாரங்களை பகிரும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எல்லா இலங்கையர்களினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அதிகபட்ச அதிகாரப்பகிர்வு வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா கோரிக்கை விடுத்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், இதனை இலங்கையிடம் வலியுறுத்தியுள்ள இந்தியா, அதனை விதிமுறையாக முன்வைக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

தமக்கு எத்தகைய ஆட்சிமுறை சிறந்ததாக இருக்கும் என்று எல்லா இலங்கையர்களும் முடிவு செய்ய வேண்டும் என்றும் இந்தியா கூறியுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 6.30 மணி வரை மன்னார் பிரதேசத்தில முருங்கன் பிட்டி, Don Bosco, மாவிலங்கேணி, பண்டாரிகுளம், அளவக்கை, எருவிட்டான், அறுகுகுன்று, அச்சங்குளம், நானாட்டான், சிலாவத் துறையிலிருந்து அரிப்பு வரை, சவேரியார்குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### எண்ணப்பதிவு



ஒரு எண்ணம் ஒருமுறை மனதில் தோன்றிவிட்டால் போதும், அது உயிரணுக்களில் பதிவாகி, அவற்றுக்கிடையே பிரதிபலித்து, அந்தப் பிரதிபலிப்பு மீண்டும் பதிவு, மீண்டும் பிரதிபலிப்பு என்றாகி அந்த எண்ணம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருக்கும். இதுவும் எண்ணத்தின் இயற்கை. எனவே, ஒரு தீய எண்ணத்தை ஒருமுறை உள்ளே விட்டு விட்டால்போதும், மறுபடியும் உதிக்காமல் செய்வது அத்தனை எளிதன்று.

விருந்தாளி - வேண்டாத விருந்தாளியேயாயினும் முகத்தைச் சுளித்தால் போய்விடுவார். எண்ணத்தை விரட்ட விரட்டத்தான் மீண்டும் மீண்டும் வரும். விரட்டும் போது நீங்கள் அந்த எண்ணத்தோடு தான் உறவு கொண்டவாறே இருக்கிறீர்கள் என்பதே இதற்குக் காரணம்.

அதுமட்டும் அன்று. வெறும் எண்ணம் மட்டுந்தானே, நான் என்ன செயலிலா இறங்குகிறேன்? என்று ஒரு தீய எண்ணத்திற்கு இடங்கொடுத்து விடக்கூடாது. விளைவுஞ்சி, அந்த எண்ணத்தின் வழி நீங்கள் செயலில் இறங்காமல் இருந்து விடலாம்.

ஆனால், எழுந்த எண்ணம் சும்மா போய்விடாது. ஒத்த தரம் உடைய இன்னொருவர் மனதில் நுழைந்து அதுதனக்குச் செயலுருவம் கொடுத்துக் கொண்டு விடும். அந்தளவு ஆற்றல் பெற்றது எண்ணம்.

# கொமாந்தறை இளைஞரை வீழ்த்தி சம்பியனாகியது கொக்குவில் ஏ.பி.




இறுதிவரை பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொம்மாந்தறை இளைஞர் அணியை வீழ் த்தி கொக்குவில் ஏ. பி. அணி சம்பி யனானது.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தி வந்த வடகிழக்கு தமிழ் மாநில அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் கழக மைதானத்தில் கழகத் தலைவர் த.வேணுகானன் தலைமையில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டி 10 ஓவர் 9 நபர் கொண்ட போட்டியாக இடம் பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொமாந்தறை இளைஞர் அணி 10 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உசேன் -24, லக்கி- 15, சியாம் -12, லெனின் -8 ஓட்டங்களைப் பெற்றனர். கொக்குவில் ஏ.பி. அணியின் பந்து வீச்சு சார்பில் கார்த்தி -3, றஜீ, நிஷா தலா 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடி கொக்குவில் ஏ. பி அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான உத்தமன், ராகுலன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் வெற்றி இலக்கை அடைந்தது. இதில் உத்தமன் 31, ராகுலன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். கொம்மாந்தறை இளைஞர் அணியின் பந்து வீச்சின் சார்பில் தனுஷ் -2, லெனின் -1, சியாம் -1 விக்கெட்டுகளை வீத்தினர். இறுதியில் 7 விக்கெட்டுகளினால் கொக்குவில் ஏ, பி அணி வெற்றி பெற்று வடகிழக்கு தமிழ்மாநில வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் கலந்துகொண்டு சிறப்பித்தார். கௌரவ விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், யா/ நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் க.கிருஷ்ணாகுமார், வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் ரி.வரதராசன், அல்வாய் சின்னத்தம்பி வித்தியால்ய அதிபர் ச.செல்வானந்தன், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியர் ச.கைலாசபதி, ஆசிரியர் து.விஜயகுமார், கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுஉத்தியோகத்தர் வி.ஹரிகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (கு)

# வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழக 19 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்து ரேவடி சம்பியன்










இளங்கதிர் விளையாட்டுக்கழகம் வல்வை விளையாட்டுக்கழகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான 19 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 5 நபர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை வல்லை பொது விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

நடைபெற்ற இறுதிப் போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்ட நேர முடிவில் 2:2 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் சமநிலையில் இருந்தமையால் தண்ட உதை வழங்கப்பட்டது. தண்ட உதையில் ரேவடி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. சிறந்த வீரராக சுபேஸ் (ரேவடி விளையாட்டுக் கழகம்) தெரிவு செய்யப்பட்டார். (கு)

# டினேஷ்கரன் கராத்தேயில் முதலிடம்





வல்வெட்டித்துறை மதவடியைச் சேர்ந்த மா.மோகன்ராஜின் மகன் டினேஷ்கரன் 23.10.2016 அன்று மதுரையில் நடந்த 4 ஆவது தமிழ் நாடு மாநில அளவிலான கராத்தே போட்டியில் 13-14 வயதுக்குட்பட்ட பிரிவில் கலந்து கொண்டு காட்டாவில் முதலாம் இடத்தினையும் குமித்தேயில் முதலாம் இடத்தினையும் பிடித்துள்ளார்.

இவர் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் பல போட்டிகளில் வெற்றி பெற்று யாழுக்குப் பெருமை சேர்த்துள்ளார். (கு)

# யுத் வி.கழகத்தின் கரப்பந்தாட்ட முடிவுகள்

யுத் விளையாட்டுக்கழகத்தின் B பிரிவிற்கான கரப்பந்தாட்ட கால் இறுதி ஆட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் புத்தூர் கலைமதி B.2 எதிர்த்து தோப்பு வாலிபர் அணி மோதிய இப் போட்டியில் வாலிபர் 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்த போட்டியில் புத்தூர் கலைமதி B.1 எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதியது.

இதில் 2:1 என்ற அடிப்படையில் கலைமதி B.1 வெற்றி பெற்றது.

நடைபெற்ற மற்றொரு கால் இறுதிப்போட்டியில் புத்தூர் வளர்மதி B.1 எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் மோதியது. விறுவிறுப்பான ஆட்டத்தில் வளர்மதி 2:1 செற்கணக்கில் வெற்றி பெற்றது. அடுத்து நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸை எதிர்த்து தோப்பு கலைமகள் மோதியது. இப்போட்டியில் நவஜீவன்ஸ் 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மாவட்ட மட்ட போட்டிக்கு சென். செபஸ்ரியன் தெரிவு




மைலோ கிண்ண உதைப்பந்தாட்ட போட்டியில் சென். செபஸ்ரியன் விளையாட்டு கழகம் வடமராட்சி கிழக்கு லீக்கிற்கு உட்பட்ட கழகங்களில் வத்திராயன் உதய சூரியன் கழகத்தினை 2:0 என்னும் கோல் அடிப்படையிலும் கட்டைக்காடு சென். மேரிஸ் கழகத்தினை 1:0 என்னும் கோல் அடிப்படையிலும் வெற்றி பெற்று மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. (கு)





மைலோ கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் வடமராட்சியிலிருந்து இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகிய கலைமதி விளையாட்டுக்கழகம் மற்றும் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தினை படத்தில் காணலாம்.

# அரசியல் தஞ்சம் கோர முற்படுவோருக்கு வாழ்நாள் தடைவிதிப்பதற்கு அவுஸ்.திட்டம்

(கொழும்பு)

ஆபத்தான படகுப் பயணத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோர முறபடுபவர்களுக்கு வாழ்நாள் தடைவிதிக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்படும் ஒருவர், சுற்றுலாப் பயணியாகவோ, வியாபார விசா மூலமோ அல்லது அவுஸ்திரேலிய பிரஜையொருவரை திருமணம் செய்தோ அவுஸ்திரேலியாவுக்கு வருவதை முழுமையாகத் தடுக்கும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆபத்தானபடகுப்பயணத்தைமேற்கொண்டு அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் அரசியல் தஞ்சக் கோரிகளை அந்நாட்டு அரசாங்கம் நாட்டுக்குள் எடுக்காது நவ்ரூ மற்றும் பப்புவா நியுகினியாவின் மனுஸ் தீவுகளிலுள்ள அகதிகள் தடுப்பு முகாம்களிலேயே தடுத்து வைத்திருக்கின்றது.

எனினும் அந்த அகதிகள் தடுப்பு முகாம்களில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன், பெண்கள் மற்றும் சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்படும் சம்பவங்களால் அவுஸ்திரேலிய அரசாங்கம் உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் கடும் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது.

இந்த நிலையிலேயே படகு அகதிகளின் வருகையை முற்றாகத் தடுக்கும் நோக்கில் பிரதமர் மெல்கம் டேர் புல் தலைமையிலான அவுஸ்திரேலிய அரசாங்கம், படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் வரும் அகதிகளுக்கு வாழ்நாள் முழுவதும் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய முடியாதவாறு தடைவிதிக்கும் கடுமையான சட்டத்தை அமுல்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இதன்மூலம் ஆட்கடத்தல்காரர்களுக்கு கடுமையான செய்தி வெளியிடப்படும் என்று அவுஸ்திரேலிய பிரதமர் கூறியுள்ளார்.

அகதிகளின் உரிமைகளுக்காக குரல்கொடுத்துவரும் அமைப்புக்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் அவுஸ்திரேலிய அரசின் இந்தச் சட்டத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். எனினும் குறித்த சட்டமூலம் அடுத்தவாரம் அவுஸ்திரேலிய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த புதிய சட்டமூலம் 2013ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் திகதி முதல் நவ்ரூ மற்றும் மனுஷ் தீவுகளிலுள்ள அகதிகள் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டவர்களுக்கும் மற்றும் நாடு கடத்தப்பட்டவர்களுக்கும் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகளால் அவுஸ்திரேலியா மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் நோக்கிலேயே இந்த சட்டத்தை அமுல்படுத்த தீர்மானித்ததாக அந்நாட்டுப் பிரதமர் கூறியுள்ளார்.

ஆட்கடத்தல்காரர்களால் அவுஸ்திரேலியா பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள பிரதமர், பல பில்லியன் டொலர் பெறுமதியான இந்த ஆட்கடத்தல் வர்த்தகம், அவுஸ்திரேலியாவின் தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்திரேலிய அரசின் புதிய சட்டத்தால் மனுஷ் மற்றும் நவ்ரூ தீவுகளிலுள்ள அகதிகள் தடுப்பு முகாம்களிலும், சிகிச்சைகளுக்காக அவுஸ்திரேலிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள சுமார் 3000 படகு அகதிகள் பாதிக்கப்படவுள்ளனர்.

இந்தக் கடுமையான சட்டத்திற்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவுஸ்திரேலிய பிரதான எதிர்க்கட்சியான தொழிற் கட்சி அறிவித்துள்ளது.

எனினும் அகதிகள் மற்றும் அரசியல் தஞ்சக் கோரிகள் விடயத்தில் அவுஸ்திரேலிய அரசு மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்வதுடன், சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறி வருவதாக குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மனுஷ் மற்றும் நவ்ரூ தீவுகளிலுள்ள அவுஸ்திரேலியாவின் அகதிகள் தடுப்புமுகாம்கள் திறந்தவெளிச் சிறைக்கூடங்கள் என சர்வதேச மன்னிப்புச் சபை இந்த மாத ஆரம்பத்தில் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டு கடுமையாக சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பண மோசடி மூவர் கைது

(கொழும்பு)

பண மோசடி செய்த சம்பவம் தொடர்பாக அநுராதபுரம், வஹால் கடை பிரதேசத்தில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் ஒன்றில் எடுத்ததாக கூறி தொல்லியல் பொருட்களை விற்று மோசடியாக பணத்தை பெற்றுக் கொண்டதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பித்தளை விளக்கு, பித்தளை லாம்பு, இரண்டு உலோக பெட்டிகள், கல்லினால் செய்த இரண்டு குப்பிகளை பொலிஸார் சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கெப்பிட்டிகொல்லாவ மற்றும் ஹொரவபொத்தானை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதுடன் அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நால்வரைக் கொலை செய்துவிட்டு சுற்றுலா சென்ற பாதாள உலகக் குழு

(மட்டக்குளி)

மட்டக்குளியில் கடந்த 23ஆம் திகதி இரவு பாதாள உலக குழுக்கள் இரண்டிற்கு இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 48 மணித்தியாலங்கள் நிறைவடைவதற்கு முன்னர் 10 பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் மற்றும் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

சந்தேக நபர்களின் வாக்குமூலத்திற்கமைய இந்த நான்கு கொலைகளை மேற்கொண்ட பாதாள உலகக்குழு உறுப்பினர் ரொஷான் உட்பட 9 பேர் கட்டெத்தையில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றில் துப்பாக்கினை மறைத்து வைத்து விட்டு, கப்புவா என்பவரின் மருமகனுக்கு சொந்தமான ஆட்டோவில் அங்கிருந்து சென்றுள்ளனர்.

மேலும் ஒரு ஆட்டோவை வாடகைக்கு எடுத்துக் கொண்ட சந்தேக நபர்கள் சுற்றுலாப் பயணம் ஒன்று செல்வதாக ஆட்டோ சாரதியிடம் தெரிவித்து இரத்தினபுரி லெல்லாபிடிய பிரதேசத்திற்கு சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாதாள உலகக்குழு தலைவர் ரொஷானின் பாட்டி ஒருவரின் வீட்டிற்கு சந்தேக நபர்கள் சென்று பாட்டியிடமும் சுற்றுலா பயணம் ஒன்றுக்கு வந்ததாக தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக சந்தேகநபர்களுக்கு தங்குவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)

# கருணா பாவித்த சொகுசு ஜீப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது

(ஏறாவூர்)

மகிந்த ஆட்சியில் மீள்குடியேற்றப் பிரதியமைச்சராகப்பதவி வகித்த கருணா அம்மான் என அறியப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனால் பயன்படுத்தப்பட்ட அதிசொகுசு ஜீப் வண்டி மிக இரகசியமாக உரிமை மாற்றம் செய்யப்படவிருந்த வேளையில் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசியத் தகவலையடுத்து கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்ட நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் மட்டக்களப்பு புறநகர்ப் பகுதியான பிள்ளையாரடியிலுள்ள வாகனம் திருத்துமிடமொன்றில் வைத்து கடந்த 27ஆம் திகதி வியாழக்கிழமை மாலை இந்த ஜீப் வண்டியைக் கைப்பற்றினர்.

அதி நவீன குளிரூட்டி வசதி கொண்டரி -2014.2015 எனும் இலக்கமுடைய இந்த இன்ரகூலர் Intercooler ஜீப் வண்டியின் பல பாகங்கள் ஏற்கெனவே மாற்றப்பட்டு விட்டதாகவும், அதன் செஸி (Chassis) இலக்கத்தையும் நிபுணர் ஒருவரைக் கொண்டு அழிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்ட வேளையிலேயே இந்த வண்டி கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட இந்த வாகனம் தற்சமயம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

வாகனத்தின் பாகங்களையும் அடிச்சட்டத்தின் (Chassis) இலக்கத்தையும் மாற்றிய பின் உரிமை மாற்றம் செய்து பாவனைக்கு எடுப்பதற்கான இரகசிய வேலைகள் துரிதமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் துரிதமாகச் செயற்பட்டு வாகனத்தைக் கைப்பற்றியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## இராணுவம் இருந்த...

மட்டக்களப்பு மாவட்டத்தின் முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காணியொன்றில் மேற்கொள்ளப்பட்ட தோண்டும் பணிகளின் போதே இந்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

இது குறித்து பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு சென்றுள்ள பொலிஸார் குறித்த பகுதியை பாதுகாப்புப் பிரதேசமாக அடையாளப்படுத்தி, அங்கு எவரையும் செல்லவேண்டாம் என தடை விதித்துள்ளனர்.

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமினால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான மாரியம்மன் கோயிலுக்கு முன்னால் உள்ள வீடோன்றில் மலசல கூடத்திற்காக வெட்டப்பட்ட குழியில் இருந்தே இந்த மனித எச்சங்கள் வெளிவந்துள்ளன.

குறித்த காணியில் இராணுவ முகாம் இயங்கியதால், அங்கு மேலும் பல மனித எச்சங்கள் இருக்கலாம் என பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியிலும், இறுதிக்கட்ட போரின் போதும் கைதுசெய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட பல தமிழ் இளைஞர்கள் குறித்த இராணுவ முகாமிற்கே கொண்டு செல்லப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டதாக காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திய ஓய்வுபெற்ற நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக் குழுவிலும் முறையிட்டுள்ள நிலையில், அவர்களது எழும்புக் கூடுகளாக இருக்கலாம் என்று பிரதேசவாசிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளதை அடுத்து அங்குசென்றுள்ள பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர். எவ்வாறாயினும் குறித்த பகுதியில் மேலும பல மனித எச்சங்கள் காணப்படலாம் என தெரிவிக்கும் பிரதேச மக்கள் அது குறித்து விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தியும் உள்ளனர். (11)

## வடக்கு கிழக்கு...

இதனால் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ முஸ்லிம் மக்கள் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ள சம்பந்தன் இது நிறைவேறாவிட்டால், கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களிடமிருந்து பறிபோவதை யாராலும் தடுக்க முடியாது போய்விடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே தமிழ் பேசும் மக்களின் ஏராளமான காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் திருகோணமலைத் துறைமுகத்தை மையப்படுத்தி அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள பாரிய அபிவிருத்திக்காக பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்கள் திருகோணமலையில் குடியமர்த்தப்படவுள்ளதாகவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு முஸ்லிம் சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் விசேட கலந்துரையாடலொன்று நேற்று கொழும்பிலுள்ள ஹெக்டர் கொப்பேகடுவ ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பல தரப்பினர் கலந்துகொண்டு வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் உட்பட பல பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருடன் விரிவாக ஆராய்ந்தனர்.

இதன்போது தமிழ் மக்கள் தமது உரிமைக்காக மேற்கொண்ட சாத்வீகப் போராட்டம் முதல் ஆயுதப் போராட்டம் வரை, முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்யாது ஒதுங்கியிருந்ததையும் பகிரங்கமாக சுட்டிக்காட்டிய சம்பந்தன், அதற்காக தொடர்ந்தும் அவ்வாறு பிரிந்து செயற்பட முடியாது என்றும் தெரிவித்துள்ளார். (11)

## யாழ்.முஸ்லிம்...

முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு இருபத்தாறு வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

தங்களுடைய இடங்கள் வீடுகள், காணிகள், சொத்துக்கள், பள்ளிவாசல்கள் எல்லாம் மீள புனரமைக்கப்படும் சந்தோசமான வாழ்க்கை தங்களுக்கு ஏற்படும் எனவும் தங்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையியே நல்ல அந்நியோன்னியமான சூழல் ஏற்படும் எனவும் நம்பிய போதும் எவையும் நிறைவேற்றப்படவில்லை என்றே கூறலாம்.

இதனால் முஸ்லிம் மக்கள் எதிர்பார்த்த மீள்குடியேற்ற வேலைதிட்டங்கள் வடமாகாணத்தில் இடம்பெறவில்லை. வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு எந்தவொரு அடிப்படை வசதிகளையும் எந்த தரப்பினராலும் மேற்கொள்ளவில்லை.

எனவே தான் நேற்றையதினம் எமது எதிர்பார்ப்புக்கள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என்பதை வெளிப்படுத்தும் விதமாக கறுப்புக்கொடிகளை வீடுகளிலும் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் பறக்கவிடப்பட்டதாக பி.ஏ. எஸ்.சுபியான் தெரிவித்தார். (செ-4)

## ஜனாதிபதி இன்று...

மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் மரணமான பல்கலைக்கழக மாணவர்களின் இல்லங்களுக்கும் ஜனாதிபதி விஜயம் செய்யவார் என அறியவருகிறது.

இந்நிலையில் ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடுகளை செய்யுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் இரண்டு மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்ததை அடுத்து யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களை சேர்ந்த மாணவர்கள் அனைவரும் தொடர்ந்தும் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (11)

## மீனவர் பிரச்சினைக்கு...

வீர மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு இடையேயான பேச்சு, வார்த்தை வரும் 5ஆம் திகதி டில்லியில் நடக்க உள்ளது.

முன்னதாக, இரு நாட்டு மீனவர் பிரதிநிதிகள் இடையேயான கூட்டம் டில்லியில் நடக்க உள்ளது. இதற்காக, 10 பேர் அடங்கிய இலங்கை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் நாளை மறுதினம் அங்கு செல்லவுள்ளனர். (11)

யாழ்ப்பாண பொதுநூலகம்

# அரசிற்கு எதிரான...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை எனில் தமிழ் மக்கள் கொலை செய்து கொண்டு தாமும் தற்கொலை செய்து கொள்ளும் நிலைமைக்கு செல்வதை தடுத்து நிறுத்த முடியாது.

வடக்கில் மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்புக்களையும் நடத்தி வருகின்றனர். அத்துடன் அங்கு போராட்ட குழுக்கள் உருவாகி வருகின்றன.

பல்வேறு அரசியல் நோக்கங்கள் வெளியில் வருகின்றன என அரசாங்கத்தின் தலைவர்கள் கோஷமிட ஆரம்பித்துள்ளனர். ஏன் அப்படி நடக்கின்றது என்று கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. நீங்கள் வாக்குறுதி வழங்கியது போல் அரசியல் தீர்வை வழங்குவதில்லை.

வடக்கில் இராணுவத்தை திரும்பப்பெற்று சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதாக அரசாங்கம் உறுதியளித்தது.

இராணுவத்தை சிறிது சிறிதாக அகற்றி விட்டு, அதற்கு பதிலாக ஆயுதங்களை தாங்கிய பொலிஸாரை அங்கு நிலை நிறுத்தியுள்ளனர். பொலிஸார் ஏகே-47 துப்பாக்கியுடன செல்கின்றனர். என்ன மாற்றம். எந்த மாற்றமும் இல்லை.

இராணுவத்தினருக்கு பதிலாக பொலிஸ் அதிரடிப்படையினரை நிலை நிறுத்துகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இராணுவத்தினருக்கு பதிலாக பொலிஸாரை நிலை நிறுத்துவதாக இருந்தால், தமிழ் மொழியையும் கலாசாரத்தை அறிந்த தமிழர்கள் அதிகளவில் பொலிஸாராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுதந்திரக்கட்சி...

டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே நாங்கள் அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ளோம் என்று சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்துக்குள் பிரச்சினைகள் இருப்பதாக கூறப்பட்டாலும் அரசாங்கம் சிதறிப்போகாது.

ஒரு சிலர் எதிர்பார்ப்பதைப் போன்று தேசிய அரசாங்கம் கவிழ்ந்து விடாது என்றும் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் நெருக்கடிகள் தொடர்பில் வினவிய போதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஒரு சிலர் விபரிப்பதைப் போன்று தேசிய அரசாங்கத்துக்குள் பாரிய பிரச்சினைகள் இல்லை. பொதுவாக கடந்த காலங்களில் அரசாங்கத்தில் காணப்பட்ட பிரச்சினைகளே இந்த அரசாங்கத்திலும் காணப்படுகின்றன.

ஆனால் தற்போது இரண்டு கட்சிகள் அரசாங்கத்தை நடத்துவதால் இவ்வாறான பிரச்சினைகள் மிகப்பெரிய பிரச்சினைகள் போன்று காணப்படுகின்றன. ஆனால் அதற்காக அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என்று யாரும் எதிர்பார்க்கக்கூடாது.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே நாங்கள் அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ளோம்.

நீண்டகாலத்துக்கு பின்னர் தேசிய பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு ஊடாக தீர்வு காண்பதற்கு பாரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதேவேளை ஒரு விடயத்தை தெளிவாக குறிப்பிடுகின்றோம். அதாவது தேசிய அரசாங்கத்தில் பங்கெடுத்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சம உரிமை உள்ளதால் பிரதமர் ரணில் மதிக்க வேண்டியது அவசியமாகும். தேசிய அரசாங்கத்தின் நீடிப்புக்கு இது உதவியாக இருக்கும்.

அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசாங்கத்தில் வெறுமனே பங்கெடுக்கவில்லை. இந்த அரசாங்கத்தில் எங்களுக்கும் சம உரிமை இருக்கின்றது. அந்த சம உரிமையை ஐக்கிய தேசிய கட்சியும் பிரதமரும் மதிக்கவேண்டும்.

தொடர்ச்சியாக சுதந்திரக் கட்சியை மதிக்காமல் பயணிக்க முடியாது. எனினும் ஜனாதிபதி தற்போது சிவப்பு அட்டையை காட்ட நேரிடும் என்று கூறியுள்ளார். இதனை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

மேலும் வடக்கில் இடம்பெற்ற அசம்பாவித்தை யாரும் இனவாதக கண்கொண்டு பார்க்கக்கூடாது. வடக்கில் மாணவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கு எதிராக போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் ஹர்த்தாலும் நடத்தப்படவேண்டும்.

ஆனால் அந்த சம்பவத்தை இனவாதக் கண கொண்டு பார்க்கக் கூடாது. அவ்வாறான சம்பவங்கள தெற்கிலும் இடம்பெறுகின்றன. எனினும் துரதிர்ஷ்டவசமாக வடக்கின் சில அரசியல்வாதிகள் இந்த அசம்பாவிதத்தை இனவாதக் கணகொண்டு பார்க்க முற்படுகின்றார்கள். இது துரதிர்ஷ்டவசமானதாகும் என்றார். (இ-7)

# யுத்த வரலாற்...

பட்ட போர் வீரர்கள் மற்றும் "நந்திக்கடலுக்கான பாதை" ஆகிய புத்தகங்களை அவர் பரிந்துரை செய்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியா[illegible] ஜெனரல் கெரி டி சில்வா எழுதிய "போதல்[illegible] கொல்லப்பட்ட போர் வீரர்கள்" என்ற புத்தகத்தை வெளியிடும் நிகழ்வில் வைத்தே மகிந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வு கொழும்பிலுள்ள பண்டார[illegible] நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்[illegible] மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்[illegible] முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோ[illegible] பாய ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் பிரதமவி[illegible] தினர்களாக கலந்து கொண்டனர்.

இதேவேளை, "நந்திக்கடலுக் கான பா[illegible] என்ற புத்தகத்தை ஓய்வு பெற்ற மேஜர் ஜெ[illegible] ரல் கமால் குணரத்ன எழுதி வெளியிட்[illegible] ந்தமை குறிப்பிடத்தக்கது. ([illegible]

# வாள்களுடன்...

ந்த போதே பொலிஸாரால் கைது செய்[illegible] பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களி[illegible] இருந்து இரண்டு வாள்கள் மீட்கப்பட்ட[illegible] வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வாள்கள் நாடகத்துக்கு பயன்[illegible] த்தப்பட்டவை என்று குறிப்பிடப்பட்டிருந்[illegible] எவ்வாறாயினும் வாள் அதிக நீளமானத[illegible] இருந்தமையினால் அது நாடகத்துக்கு பய[illegible] படுத்துவதற்கு பொருத்தமற்றது என பொ[illegible] ஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் சுன்னாகம் பகுதிய[illegible] ஆவா குழு, இரண்டு பொலிஸார் மீது தா[illegible] தல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ[illegible]


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 153[illegible]

## வாடகைக்கு இடம் தேவை

யாழ்.நகரப்பகுதி அல்லது யாழ்.நகரத்தை அண்டிய பிரதான வீதியில் கணினி நிறுவனம் ஒன்றிற்கு கடை, அல்லது வீடு முற்பணம் இல்லாமல் தேவை.

(6478)

தொடர்பு :
077 433 6247

## போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு

வட மாகாண உள்ளக கணக்காய்வாளர் மற்றும் வட மாகாண ஆசிரியர் தெரிவு பரீட்சைகளுக்கான விசேட கருத்தரங்கு திங்கள் (இன்று) 31/10/2016 மாலை 5.00 -6.30 வரை ஒவ்வொரு நாளும் நடைபெறும்.

தொடர்பு : 076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்சல் வங்கிக்கு அருகில்)

## நல்லூரில் அறைகள் வாடகைக்கு

இரு அறைகளைக் கொண்ட சிறிய வீடு ஒன்றில் அறைகள் வாடகைக்குண்டு. வேலைக்குப் போகும் பெண்கள் அல்லது மாணவிகளுக்கு வழங்கப்படும். (6474)

தொடர்பு : 077 797 7924

## கார் விற்பனைக்கு

அம்பசிடர் 2006 டீசல் கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 021 222 2711,
(6476) 076 322 0073

## அமெரிக்க அதிஸ்ட விசா

ஒரு சாதாரண முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

இலவசமாக அமெரிக்கா போகலாம்

2 விரையுங்கள் - இன்னும் நாட்களே உள்ளன

V2 Travels

0768226230

அடுத்தவருடம் இந்த வாய்ப்பு இருக்குமோ தெரியாது. இப்பவே பதியுங்கள்

இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன், எனது வாழ்க்கையில் நிரந்தர அதிஸ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்



மு.பானுதரன் - நெல்லியடி
அமெரிக்க விசா வெற்றியாளர்

விசா பெற்றவர்களின் விபரம் எமது அலுவலகங்களில்

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|
| 0768226241 | 0768226240 | 0776699892 | 0768226237 | 0776697960 |

## உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள் பொதிகள் சேவை

➢ 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான பொதிகள் சேவை.
➢ சகல நாடுகளுக்குமான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

| நாடுகள் | 5Kg மேற்பட்ட பொதிகளுக்கு | 11Kg மேற்பட்ட பொதிகளுக்கு |
|---|---|---|
| London | 900 | 550 |
| Germany | 900 | 650 |
| France | 900 | 700 |
| Italy | 900 | 800 |
| Denmark | 900 | 800 |

➢ மற்றைய நாடுகளுக்கும் விசேடசலுகைகள் உண்டு. (நிபந்தனைக்குட்பட்டது)
➢ உங்கள் வீடுகளில் பொறுப்பேற்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிட்டெட்
271A, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(சி-6231) Hotline : 021 222 7835
கிளைகள் : திருநெல்வேலி, நெல்லியடி, பருத்தித்துறை, சங்கானை

## 2018-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் வி[illegible]

50,000 பேருக்கான அதிஷ்ட வாய்ப்புக்கள். நீங்களும் அதிஷ்ரசாலியாகலாம். 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் குடும்பமாகவோ, தனிப்பட்ட முறையிலோ விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 07.11.2016 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இன்னும் 7 நாட்கள் மட்டுமே உள்ள[illegible]

விரையுங்கள். அரிய சந்தர்ப்பம். நழுவவிடாதீர்கள்.

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிட்டெட்
271A, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(சி-6231) Hotline : 021 222 7835
கிளைகள் : திருநெல்வேலி, நெல்லியடி, சங்கானை

## பதவி வெற்றிடங்கள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற[illegible]

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்[illegible] விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அலுவலக செய்தியாளர்கள் (உள்ளகம், வெளியகம்-இருபாலாரும்)
- கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க அமைப்பா[illegible] (இருபாலாரும்)
- வெப் மெசின் பயிலுநர் (ஆண்கள்-இரவுக் கடமை)

தகைமை

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- வயது 25இக்கு மேல்

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்[illegible] விண்ணப்பத்தை;

பொதுமுகாமையாளர்,
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாண[illegible]

என்னும் முகவரிக்கு 31.10.2016இற்கு முன்னதா[illegible] அனுப்பி வைக்கவும்.

## அவதானமாக இருங்கள்

மிக குறைந்த கட்டணத்திலான வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

✔ பொதிகள் சேவை தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் ஒழுங்கை மீறும் வகையில் குறைந்த கட்டணத்தில் அனுப்பப்படும் பொதிகள் பாதுகாப்பாக உரிய நேரத்தில் சென்றடைவது சாத்தியமற்றதே.

நியாயமான கட்டணத்தில் நிறைவான பொதிகள் சேவையை 20 வருட காலமாக வழங்கி வரும் நாம்

மிகச் சரியான தெரிவு அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் Tel : 021 222 3536
இல.10, கஸ்தூரியார் வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.
(C-6258)

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ[illegible]
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்[illegible]